Vol.3, Issue 6 | Annual Subscription ₹ 420

@NewsRotary /RotaryNewsIndia

நவம்பர் 2020

ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org



Rotary

KINETIC
UV-WARRIOR

NABL

For Donations and Enquiries:
+91 98260 20013

Simply switch on and **kill Corona Virus** in seconds!

UV-C LIGHT TECHNOLOGY



ONE YEAR WARRANTY — 1 year

NO GAS EMISSION

HIGH WATT VIRUS KILL — 11W

USED BY AIR FORCE

Special 15% discount for Rotary members

MAKE IN INDIA

www.kineticUVwarrior.com

உள்ளே

10 **சமுதாய வேளாண்மைதான் நாட்டுக்கு நல்லது!**
மகாராஷ்டிராவில் உள்ள ஒரு மரத்வடா பகுதியில் மயங்க் காந்தி ஒரு பண்ணைப் புரட்சியைக் கொண்டுவந்துள்ளார்.

20 **ரோட்ராக்டருக்கு ஆதரவுக்கரம் நீட்டிய மணாலி ரோட்டரி!**
UKல் குவாண்டம் இயற்பியல் ஆராய்ச்சி செய்வதற்கான கணினியை Rtr ஜெயா சாகருக்கு ரோட்டரி வழங்கியுள்ளது.

22 **2023க்குள் தட்டம்மை, ரூபெல்லாவை ஒழிக்க முடியும்: ஜேக்கப் ஜான்**
MRஐ அகற்றுவதற்கான WHOன் கெடுவாகிய 2023ஐ எட்டலாம், ஏனெனில், இதற்கான பெரும்பான்மைப் பணி ஏற்கெனவே செய்யப்பட்டுவிட்டது.

26 **கொவிட்-19, மழை, வெள்ளத்தை கடந்து மும்பை ரோட்டரியின் சமுதாயப் பணி**
752 அரசுப் பள்ளிகளில் 1,142 கை கழுவும் நிலையங்களை அமைக்கும் 'தால்' திட்டம்.

30 **கொரோனாவிலிருந்து மீண்ட டாக்டரின் நினைவலைகள்**
அவருடைய நலன் மேம்படத் தொடங்குகிற நேரத்தில், ஒரு பிளாஸ்மா சிகிச்சை மாற்றத்தைக் கொண்டுவந்தது.

36 **ரோட்டரியின் பன்னாட்டுச் செயல்பாடுகள் "நல்ல நிலையில்" உள்ளன: ஜான் ஹ்யூகோ**
கடினமான நேரங்களில் ரோட்டரியன்கள் மெய்நிகர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிற நேரத்தில், சில நல்ல விஷயங்கள் மேலெழுகின்றன.

48 **தைபேயின் எழுச்சி!**
வானைத் தொடும் கட்டடங்கள், சிறந்த சுற்றுலாப் பகுதிகளைக் கொண்ட இந்த நகரத்தில்தான் 2021 RI மாநாடு நடைபெறவுள்ளது.

58 **SPB இசை உலகின் "தவப்புதல்வன்"**
16 மொழிகளில் 40,000க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ள "பாடும் நிலா"வின் சாதனையை வெல்வது கடினம்.

அட்டைப்படத்தில்: சமூக ஆர்வலர் மயங்க் காந்தி மகாராஷ்ட்ரா பார்லி கிராமத்தில்.

மொகம்மது யூனுஸ் என்ற அறிவாளி



நோபல் சாதனையாளரான மொகம்மது யூனுஸின் சமூகம் பற்றிய பார்வை மிகவும் வியக்கவைக்கிறது. அவர் தொட்டுச் சென்ற ஆர்வமூட்டும் தலைப்புகளில் சில, புலம் பெயர்ந்த மற்றும் முறைசாராத் தொழிலாளர்களுக்குப் பணி வாய்ப்புகள், குறுங்கடன் மற்றும் பெரும்பான்மை மக்களுடைய நன்மைக்கான ஒரு தடுப்பு மருந்து. நலிந்தோருக்கு ரோட்டரி இன்னும் என்ன செய்யலாம் என்று RIPE சேகர் மேத்தா சரியாகக் கேட்டுள்ளார்.

G R பாஸ்கரன், RC விருதுநகர் எலைட் — D 3212

அக்டோபர் அட்டைப்படக் கட்டுரையில் நோபல் சாதனையாளர் மொகம்மது யூனுஸ் நோய்ப்பரவலுக்கு முந்தைய உலகத்துக்குத் திரும்புவது, தற்கொலை செய்து கொள்வதைப் போன்றது'' என்று சரியாகச் சொல்கிறார், மறைந்த PRID யஷ்பால் தாஸுக்கு PRIP ராஜேந்திர சாபூ எழுதியுள்ள அஞ்சலிக் கட்டுரையில் அர்ப்பணிப்புணர்வுதான் அவருடைய மதம் என்று குறிப்பிட்டிருப்பது மிகப் பொருத்தமானது. நேர்மையும் ஈர்க்கும் தன்மையும் கொண்ட ஒரு தலைவர் அவர். ஆசிரியர் பக்கத்தில், வாரியக் கூட்டங்களில் அவர் எப்போதும் RNT ஊழியர்களை அழைத்து வாழ்த்துவார் என்கிற உங்கள் நினைவுகூரல் என் நெஞ்சைத் தொட்டது.

NAN நாராயெணன், RC மதுரை வெஸ்ட் — D 3000

பெரும்பான்மை மக்களுடைய நன்மைக்கான ஒரு தடுப்பு மருந்து, வறுமையை நீக்குதல், கோவிடுக்குப் பின் வேலையின்மை என முகம்மது யூனுஸ் மிகச் சிறந்த யோசனைகளை வழங்கியுள்ளார். RI தலைவர் ஹோல்கர் நாக்-கின் செய்தி பொருள் உள்ளது. மறைந்த யஷ்பால் தாஸ் அவர்களுடைய குடும்பத்தினரின் சோகத்துக்கு இரங்கல்கள். O P கண்ணா மற்றும் அவருடைய சேவையைப்பற்றிய கட்டுரை, இவ்வுலகில் நல்ல மக்கள் இன்னும் உள்ளார்கள் என்பதை நிரூபிக்கிறது. கிஷோர் குமாரைப்பற்றிய கட்டுரையைப் படித்து மகிழ்ந்தோம்.

தன்னுடைய முட்டை வங்கியின் வழியாக, நலிந்த குழந்தைகளுக்கு ஐந்து லட்சம் முட்டைகளை வழங்கும் ஹரி கிஷன் வால்மீகிக்குப் பாராட்டுகள். 2019 பன்னாட்டுப் பசிப் பட்டியலில், 117 நாடுகளில் இந்தியா 102வது இடத்தில் உள்ளது வருத்தம் தருகிறது.

ஆப்பிரிக்காவில் இளம்பிள்ளைவாதம் இல்லை என்று சான்றளிக்கப்பட்டுள்ளதையும், 2022–23ல் ஜெனிஃபர் ஜோன்ஸ் RI தலைவராகச் செயல்படுவார் என்பதையும் அறிந்து மகிழ்கிறேன். லதா மங்கேஷ்கர் பற்றிய கட்டுரையும், 361 உறுப்பினர்களைச் சேர்த்துச் சாதனை படைத்த RID 3211 பற்றிய கட்டுரையும் குறிப்பிடவேண்டியவை.

ஃபிலிப் முலப்பொனெ M T
RC திருவனந்தபுரம் புறநகர் — D 3211

கொரோனாவுக்கு முந்தைய உலகத்துக்குத் திரும்ப வேண்டாம் என்று மொகம்மது யூனுஸ் நமக்கு அறிவுரை கூறியுள்ளார், புலம் பெயர்ந்த பணியாளர்களைச் சிறு தொழிலதிபர்களாக நடத்துவது பற்றிய அவருடைய ஆலோசனைகள் மிகச் சிறந்தவை.

S மோகன், RC மதுரை, வடக்கு — RID 3000

RIன் முதல் பெண் தலைவர்

2022–23ல் RIன் முதல் பெண் தலைவராக ஜெனிஃபர் ஜோன்ஸ் முன்மொழியப் பட்டுள்ளார் என்பது பற்றிப் படித்து மகிழ்ந்தோம். "ஒரு சுண்டெலியின் கர்ஜனை" கட்டுரை என்ற மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. கர்தார்பூர் சாஹிப் குருத்வாரா-வுக்கு இந்திய ரோட்டரியன்களுடைய பயணம் நெஞ்சைத் தொட்டது. மிகச் சிறந்த இந்தியப் பாடகர்களைப்பற்றி S R மது எழுதும் தொடர், இசை விரும்பிகளுக்கு ஒரு பரிசு.

சந்தோஷ் திவாரி
RC ஜல்னா — D 3132

செப்டம்பர் இதழைத் தொடக்கத்திலிருந்து நிறைவுவரை ஒரே நேரத்தில் படித்தேன். இரண்டு கட்டுரைகள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன: RIPN (2022–23) ஜெனிஃபர் ஜோன்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள செய்தி; இத்தனை ஆண்டுகளுக்குப் பின் ரோட்டரிக்கு ஒரு பெண் தலைவர் கிடைக்கப் போவது மிகச் சிறந்த செய்தியாகும். PDG சில்வியா விட்லாக் அவர்களுடைய பங்கு நன்கு விவரிக்கப்பட்டிருந்தது. ரோட்டரிக்குச் சவால் விடும் அவருடைய துணிவு, பாராட்டவேண்டியது. என்னுடைய சங்கத்துக்கும் 53 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் பெண் தலைவர் வரப்போகிறார்.

இரண்டாவது கட்டுரை, 20 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட ரோட்டரி ஹூக்ளி கண் மருத்துவ மனையைப்பற்றியது, அது மிக நன்றாக எழுதப்பட்டிருந்தது. ஒரு புதிய விழித்திரைச் சிறப்புப் பிரிவைச் சமீபத்தில் ஜூம் கூட்டம் ஒன்றின் வழியாக RIPE சேகர் மேத்தா திறந்து வைத்தார்.

R K புப்னா, RC பேளூர் — D 3291

கிஷோர் குமாரைப் பற்றிய சுவையான கட்டுரை

புகழ் பெற்ற பாடகர் கிஷோர்

மடல்கள்

குமாரைப் பற்றிய கட்டுரை மிக அருமை.

சுனில் கயல், RC ரூர்கேலா சென்ட்ரல் — D 3261

கிஷோர் குமாரைப் பற்றிய கட்டுரை தகவல்களோடும் ஆர்வம் அளிப்பதாகவும் அமைந்தது.

பிரிஜ் கன்டேல்வால்
RC மெட்ராஸ் சென்ட்ரல் — D 3232

கிஷோர் குமார் பற்றிய கட்டுரை ஆர்வம் அளித்தது. அவர் கன்ட்வா-வைச் சேர்ந்தவர் என்பதும், ஒவ்வோர் இசை நிகழ்ச்சியிலும் தன்னுடைய பிறந்த இடத்தை மறக்காமல் சொல்வார் என்பதும் எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அவரைப் பெருமைப்படுத்தும் வகையில், இங்கு அவர் பெயரில் ஓர் அரங்கம் கட்டப்பட்டது.

அனில் பஹேட்டி
RC கன்ட்வா — D 3040

மிகச் சிறந்த தொழில்நுட்ப வல்லுனர்களுடன் உரையாடும் வாய்ப்பைப் பெற்ற பழங்குடியின மாணவர்கள் என்ற கட்டுரை நன்றாக எழுதப்பட்டிருந்தது.

அனில் குமார் S, RC செகந்திராபாத் வெஸ்ட் — D 3150

பாராட்டவேண்டிய முட்டை வங்கிகள் திட்டம்

RC செகந்திராபாதைச் சேர்ந்த Rtn ஹரி கிஷன், முட்டை வங்கிகளை உருவாக்கும் மிகச் சிறந்த யோசனை யை முன்வைத்துள்ளார், டுவார்டெ சங்கத்தின் சட்டப் போர் மற்றும் ரோட்டரியில் பெண்களுடைய முன்னேற்றம் ஆகியவை நன்கு விவரிக்கப்பட்டிருந்தன. US, UK, கனடா, ஆஸ்திரேலியாவில் உறுப்பினர் எண்ணிக்கை குறைவதைப் பற்றிய RI பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோ அவர்களின் எச்சரிக்கை கவலையை உண்டாக்குகிறது.

ஜெய்ஸ்ரீ எழுதிய ரோட்டரி கண் மருத்துவமனை பற்றிய கட்டுரை ஊக்கம் தருவது, "தொடர்ந்து இயங்கவேண்டும்" என்கிற அந்தச் சங்கத்தின் மன உறுதியைப் பதிவு செய்கிறது. ரோட்டரி நியூஸ் ப்ளஸ் உண்மையில் ஒரு மிகச் சிறந்த யோசனை. இதனால், வெவ்வேறு சங்கங்கள் வெற்றிகரமாக நடத்தும் பல திட்டங்களைப்பற்றி நாம் படித்துத் தெரிந்துகொள்ளலாம்.

கேப்டன் V G தியோதர்
RC நாசிக் — D 3030

ரஷீதா பகத்-தின் அட்டைப்படக் கட்டுரையான ஊட்டச்சத்து குறைந்த வர்களுக்கு முட்டைகளை அளித்தல் ஆர்வத்தை உண்டாக்கியது.
Rtn கிஷன் வால்மீகியின் பணி பாராட்டவேண்டியது. ஒரு மிகச் சிறந்த கண் பராமரிப்புத் திட்டத்தை நடத்திவரும் RC ஹூக்ளிக்குப் பாராட்டுகள். கிரண் ஜெஹ்ரா எழுதிய இந்தியாவில் பசுமையைப் பரப்பும் ரோட்டரி..., என்ற கட்டுரை, S R மது-வின் மெல்லிசைப் பேரரசி என்ற கட்டுரை மிகச் சிறப்பாக அமைந்தது.

டேனியல் சிட்டிலப்பிள்ளி
RC கலூர் — D 3201

இந்திய ரோட்டரியன்கள் லாகூரிலுள்ள கர்தார்பூருக்கு ஆர்வத்துடன் பயணம் செய்ததைப் பார்த்து நான் வியந்தேன், எல்லைகளைத் தாண்டிய இது போன்ற முயற்சிகளை ரோட்டரியால் மட்டும்தான் செய்ய இயலும்; ரோட்டரி வாழ்க!

டோமி ஈப்பென்
RC ஆலப்புழை — D 3211

சமூகங்களுக்கு ஆற்றலளிக்க, ஏழைமையைக் குறைக்க நீங்கள் விரும்பினால், பெண்களுக்கு கல்வி அளியுங்கள்'' என்று RID கமல் சங்வி சரியாகக் கூறியுள்ளார்.

நலிந்த குழந்தைகளுக்கு நம்பிக்கையை அளிக்கும் RC நாக்பூர் கோட்டையின் சக்ஷம் திட்டத்தின் வழியாக உண்மைச் சேவையைக் காணலாம்.

ராஜ் குமார் கபூர்
RC ரூப்நகர் — D 3080

RILMன் கீழ் குழந்தைகள் எழுத்தறிவு மற்றும் வயது வந்தோர் கல்வியை RID கமல் சங்வி வலியுறுத்தியுள்ளார். ஒரு மனிதருடைய ஆளுமையை வளர்ப்பதில் கல்வி முக்கியப் பங்காற்று கிறது, ஆகவே, இது ரோட்டரியின் மிகச் சிறந்த முயற்சியாகும். ஆஷா கிரண் திட்டம், இந்தியாவை எழுத்தறிவு பெறச் செய்ய உதவும்.

நவீன் R கார்க், RC சுனம் — D 3090

RI தலைவர் ஹோல்கர் நாக் சரியாகத் தன்னுடைய கவனத்தை ரோடராக்ட் சங்கங்களின்மீது திருப்பியுள்ளார். RID 3000ல் 50க்கும் மேற்பட்ட ரோடராக்ட் சங்கங்கள் உள்ளன, கல்லூரிகள், கல்வி நிறுவனங்களில் இன்னும் பல திறக்கப்படும். ஜெனிஃபர் ஜோன்ஸ் RI தலைவராக முன்மொழியப்பட்டுள்ளது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது; இனி வரும் ஆண்டுகளில் மேலும் பல பெண்கள் அவரைப் பின்தொடர்ந்து வருவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவர் பெண் உறுப்பினர்கள் எண்ணிக்கையைச் சரியாக வலியுறுத்தியுள்ளார்,

S முனியாண்டி, RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

இந்திய ரோட்டரியன்களுடைய பாகிஸ்தான் பயணம் மற்றும் 361 ரோட்டரியன்களுடைய சேர்க்கை பற்றிய கட்டுரைகள் மிகச் சிறப்பாக அமைந்தன. இளம்பிள்ளைவாதம் இல்லாத இடமாகச் சான்றளிக்கப் பட்டுள்ள ஆப்பிரிக்காவுக்குப் பாராட்டுகள்.

பாரத் மெர்சன்ட்
RC பாம்பே சீஃபேஸ் — D 3141

We welcome your feedback. Write to the Editor:
rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.
Mail your project details, along with hi-res photos,
to **rotarynewsmagazine@gmail.com**

Click on **Rotary News Plus** in our website
www.rotarynewsonline.org to read about more Rotary projects.

ரோட்டரியின் பன்முகத்தன்மை

நம்முடைய சமூகங்களையும் நம்மையும் மாற்றியமைக்கிற ரோட்டரியின் மிகச் சிறந்த ஆற்றலை நாம் அனைவரும் அறிவோம். அதே நேரம், ஒவ்வொரு சமூகத்திலும், மக்கள் தனியே விடப்பட்டுள்ளார்கள், அவர்களை அணுகுவதற்கான மிக வலுவான ஒரு முயற்சியை நாம் மேற்கொள்ளவில்லை.

இன்னும் பலரை வரவேற்கிற, இன்னும் பன்முகத்தன்மை கொண்ட ஓர் அமைப்பாக ரோட்டரியை ஆக்குவதற்கான நடவடிக்கைகளை RI இயக்குநர்கள் வாரியம் எடுத்துவருகிறது. பன்முகத்தன்மை, சமநிலையை முன்னிறுத்தவும், ஒருவருடைய பாலினம், இனம், மதம், வயது அல்லது பிற காரணிகள் எப்படி இருந்தாலும் அவரைப் புதிய உறுப்பினராக ஈர்ப்பதற்குச் சங்கங்களுக்கு உதவவும் ஒரு செயல் படையை நாம் உருவாக்கினோம். நாம் அனைவரும் விரும்புகிற, நம் அனைவருக்கும் தேவைப்படுகிற மாற்றத்தை விரைவாக்குவதற்கு இது நமக்கு உதவும். 2022–23க்கான ரோட்டரி தலைவராக ஜெனிஃபர் E ஜோன்ஸ் (நம் அமைப்புக்குத் தலைமையேற்கப்போகும் முதல் பெண்) தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இந்தத் திசையில் இன்னொரு படிநிலையாகும்.

அடித்தள நிலையில், சங்கங்கள் உள்ளடக்குதல் மற்றும் பன்முகத்தன்மையை வலியுறுத்துகின்றன. பெரிய மேற்கு ரோடராக்ட் பல மாவட்டத் தகவல் அமைப்பின் இயக்குநர்கள் வாரியத்தில் சேவையாற்றுகிறவரும், முன்பு ரோட்டரி இளம் தலைமை விருதை வென்றவரும், சர்ரே-நியூட்டன், பிரிட்டிஷ் கொலாம்பியா ரோடராக்ட் சங்கத்தின் முன்னாள் தலைவருமான அலியா அலி இதுபற்றித் தன்னுடைய பார்வையைத் தெரிவிக்கிறார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், RYLA பங்கேற்பாளராக நான் உணர்ந்த நிம்மதி எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. ஒருவழியாக, நான் என்னுடைய மக்களை, என் அளவுக்கு அக்கறை காட்டுகிற மக்களைக் கண்டறிந்துவிட்டேன். உலகம் முழுவதும், ரோட்டரி அதே இதயத்துடன்தான் உள்ளது. நாம் நம்முடைய சமூகங்களுக்குச் சேவையாற்றுகிறோம், பிரச்னையின் அளவு மற்றும் வீச்சைக் கண்டு பிறர் திகைத்து நிற்கும்போது, நாம் செயலில் இறங்குகிறோம்.

அந்த எண்ணத்தை நாம் தொடர்வோம், குறிப்பாக, மாற்றம் கடினமாக இருக்கும்போது தொடர்ந்து பணிபுரிவோம். இனவாதம், முன் தீர்மானம், பாகுபாடு ஆகியவை வெவ்வேறு வடிவங்களை எடுத்தாலும், ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு மனிதரிடமும் அவை உள்ளன. நாம் அவற்றை முழுக்க அழிப்பது எப்படி?

ஒரு பன்முகத்தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்கல் ஆலோசகர் என்றமுறையில், பச்சாத்தாபத்தின் ஆற்றலைப் பயன்படுத்தி ஒவ்வொருவருக்கும் ஆற்றலளிக்கிற, ஈர்க்கிற ஒரு பண்பாட்டை உருவாக்குவதற்கு நான் நிறுவனங்களுக்கு உதவுகிறேன். நாம் பிறரை நம்மைப்போல் கருதும்போது, அவர்களைப்போலவே உணரும் போது, நம் இதயங்களில் முன் தீர்மானங்கள் இருக்க இயலாது.

பச்சாதாபக் கண்ணாடியின் வழியாக நாம் நான்கு-வழிப் பரிசோதனையைச் செயல் படுத்தலாம். ரமதான் மாதத்தில் ஒரு ரோட்டரி மாநாடு நடைபெற்றபோது, ரோட்டரியா என்னுடைய மதமா என்று நான் தீர்மானிக்க வேண்டியிருந்தது, அது இதயத்தை நொறுக்கும் தீர்மானமாக இருந்தது. நான் இவ்வாறு யோசித்தேன்: இது தொடர்புடைய எல்லாருக்கும் நியாயமாக, பயன் தருவதாக இருக்கிறதா என்று நாம் கேட்கிறபோது, முஸ்லீம் என்றமுறையில் அது என்னை உள்ளடக்கவில்லையா? ஈஸ்டர் நாளில் எப்போதாவது இந்த மாநாடு நடைபெறுமா? கடினமான கேள்விகளைக் கேட்பதன்மூலம்தான் இன்னும் உள்ளடக்குகிற, இன்னும் பன்முகத்தன்மை கொண்ட ஒரு ரோட்டரியை உருவாக்கும் பணியை நாம் தொடங்க இயலும்.

ரோட்டரியிடம் மிகப் பெரிய இதயம் இருக்கிறது. நாம் நம்முடைய கதவுகளை இன்னும் அகலமாகத் திறந்தால், புதிய குரல்கள், புதிய பார்வைகளுடன் இன்னும் பல ஆர்வமூட்டும் மக்களை நாம் கண்டறியக்கூடும்.

அலியா அலி

Holger Knaack

ஹோல்கர் நாக்
RI தலைவர்

விவசாயிகளுக்கும், பெண்களுக்கும் உங்கள் உதவி தேவை!

அண்மையில் மத்திய அரசு நிறைவேற்றியுள்ள வேளாண் சட்டங்கள் குறித்து சிறு விவசாயிகளிடையே கவலை, அச்சம், குழப்பம், சர்ச்சை நீடித்து வருகிறது. இந்த நேரத்தில் RID 3141ஐச் சேர்ந்த முன்னாள் மாவட்ட ஆளுநர் ராகுல் டிம்பாடியா விவசாயிகளின் அச்சத்தை போக்கும் வகையிலும், அவர்களின் சந்தேகங்களுக்கு பதிலளிக்கும் விதத்திலும் ஒரு மெய்நிகர் கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்திருந்தார். இந்த கருத்தரங்கில் இரண்டு விஷயங்கள் உறுதிப்படுத்தப்பட்டன. ஒன்று சமூக ஆர்வலரும் ஆம் ஆத்மி கட்சியின் முன்னாள் தேசிய செயற்குழு உறுப்பினருமான மயாங்க் காந்தி, மகாராஷ்டிரத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மரத்வாடா பகுதியில் பீட் மாவட்டத்தின் பார்லி தாலுகாவில் உள்ள கிராமங்களில் விவசாயப் புரட்சியை ஏற்படுத்தியதை விவரிப்பது. கடந்த காலங்களில் கடும் வறட்சியால் விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் பலர் இந்தப் பகுதியில் தற்கொலை செய்துகொண்டனர். எனவே அந்தப் பகுதியை தனது வேளாண் புரட்சிக்கு தேர்ந்தெடுத்தார் மயாங்க் காந்தி. கடந்த நான்கு ஆண்டுகளில் அவர் மேற்கொண்ட அயராத உழைப்பு, நீர் நிர்வாகத் திட்டத்தின் காரணமாக ஒரு காலத்தில் 300 அடிக்கு கீழே சென்று தண்ணீர் எடுக்கும் நிலைமை மாறி 50 முதல் 70 அடியிலேயே தண்ணீர் கிடைத்தது. இந்தியாவில் உள்ள மிகச் சிறந்த நர்சரிகளிலிருந்து தரமான பழச் செடிகளை வரவழைத்து அவற்றை விவசாயிகள் மூலம் பயிரிடச் செய்தார்.

விவசாயிகள் பப்பாளி, வாழை, பரங்கி உள்ளிட்ட செடிகளை நடவு செய்ததுடன் ஊடுபயிராக சில பயிர்களை சாகுபடி செய்யுமாறு ஆலோசனை வழங்கினார். இதனால் விவசாயிகளுக்கு பயிர் விளைச்சல் அதிகரித்ததுடன் வருமானமும் அதிகரித்தது.. ஒரு ஏக்கருக்கு மாதம் ரூ.10 ஆயிரம் முதல் ரூ.15 ஆயிரம் வரை வருமானம் ஈட்டிய விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்ப முறைகள் மூலம் ரூ.2 லட்சம் முதல் ரூ.4 லட்சம் வரை வருமானம் கிடைத்தது. இதனால் வேலைதேடி மும்பைக்கும், புனேவுக்கும் இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் மீண்டும் கிராமங்களை நோக்கி வரத் தொடங்கினர்.

இரண்டாவது, ரோட்டரியின் 7-வது திட்டங்களில் ஒன்றான பசுமைத் திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்துவதில் ஆர்வம் மிகுந்தவரான டிம்பாடியா, விவசாயத்தில் ஈடுபாடுள்ள, ஆனால், அதே நேரத்தில் விவசாயத்தை தொழிலாக செய்வதற்கு நேரமில்லாத, அதன் நவீன தொழில்நுட்பத்தை அறியாத நகர்ப்புற மக்களை சமுதாய வேளாண்மை திட்டத்துக்காக ஒன்றிணைக்க முயற்சி மேற்கொண்டது. சமுதாய வேளாண்மை அவர்களின் வருமானத்தை பெருக்குவதுடன், உள்ளூர் மக்களுக்கும் வேலைவாய்ப்பு மூலம் வருமானம் கிடைக்க வழிசெய்கிறது.

இவை நமக்கு உண்மையில் மகிழ்ச்சியான செய்தி என்றாலும், இந்தியாவில் இளம் மகளிர்க்கும், பெண்களுக்கும் எதிராக நடத்தப்பட்டு வரும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து வருவது நமக்கு மிகவும் கவலை அளிக்கிறது. கடந்த மாதம், உத்தரப்பிரதேச மாநிலம், ஹாத்ராஸ் கிராமத்தில் 16 வயது தலித் பெண் ஒருவர் கூட்டுப் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளாகி கொடுரமாக தாக்கப்பட்டு உயிரிழந்தது நெஞ்சைப் பிளக்கவைப்பதாக இருந்தது. இந்த நேரத்தில் இந்தியாவிலும் வெளிநாட்டிலும் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்க ரோட்டரி முன்வந்துள்ளதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறோம். இன்னும் சொல்லப்போனால் ரோட்டரி இன்டர்நேஷனல் முதல் பெண் தலைவராக ஜென்னிபர் ஜோன்ஸ் என்ற பெண்மணி பரிந்துரை செய்யப்பட்டுள்ளதையும் இங்கு பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறோம். சமூக சேவைகளில் ஆண்-பெண் என்ற பேதம் இல்லாமல் அனைவரையும் சமமாக ஈடுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அதற்கு உத்வேகம் கொடுத்து ரோட்டரி செயல்பட்டு வருகிறது. ஜாதி, இனம், மதப் பாகுபாடுகளை ரோட்டரி ஒருபோதும் சகித்துக் கொண்டதில்லை.

இந்தியாவிலும், உலகெங்கிலும் பாலின சமத்துவம் இருக்க வேண்டும் என்பதுதான் எங்கள் கொள்கையாகும். இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்கள், தலித் மற்றும் இதர பெண்கள் கல்வி, செயல்திறன் மற்றும் அதிகாரம் அளிக்கும் திட்டங்களை புதிய உத்வேகத்துடன் செயல்படுத்தும் என்று நம்புகிறேன்.

நமது விவசாயிகளைப் போலவே பெண்களும் கல்வி மற்றும் அதிகாரம் பெற உங்கள் உதவி தேவைப்படுகிறது.

ரஷீதா பகத்

Governors Council

RI Dist 2981	DG R Balaji Babu
RI Dist 2982	DG K S Venkatesan
RI Dist 3000	DG A L Chokkalingam
RI Dist 3011	DG Sanjiv Rai Mehra
RI Dist 3012	DG Alok Gupta
RI Dist 3020	DG Muttavarapu Satish Babu
RI Dist 3030	DG Shabbir Shakir
RI Dist 3040	DG Gajendra Singh Narang
RI Dist 3053	DG Harish Kumar Gaur
RI Dist 3054	DG Rajesh Agarwal
RI Dist 3060	DG Prashant Harivallabh Jani
RI Dist 3070	DG CA Davinder Singh
RI Dist 3080	DG Ramesh Bajaj
RI Dist 3090	DG Vijay Arora
RI Dist 3100	DG Manish Sharda
RI Dist 3110	DG Dinesh Chandra Shukla
RI Dist 3120	DG Karunesh Kumar Srivastava
RI Dist 3131	DG Rashmi Vinay Kulkarni
RI Dist 3132	DG Harish Motwani
RI Dist 3141	DG Sunnil Mehra
RI Dist 3142	DG Dr Sandeep Kadam
RI Dist 3150	DG Nalla Venkata Hanmanth Reddy
RI Dist 3160	DG B Chinnapa Reddy
RI Dist 3170	DG Sangram Vishnu Patil
RI Dist 3181	DG M Ranganath Bhat
RI Dist 3182	DG B Rajarama Bhat
RI Dist 3190	DG B L Nagendra Prasad
RI Dist 3201	DG Jose Chacko Madhavassery
RI Dist 3202	DG Dr Hari Krishnan Nambiar
RI Dist 3211	DG Dr Thomas Vavanikunnel
RI Dist 3212	DG P N B Murugadoss
RI Dist 3231	DG K Pandian
RI Dist 3232	DG S Muthupalaniappan
RI Dist 3240	DG Subhasish Chatterjee
RI Dist 3250	DG Rajan Gandotra
RI Dist 3261	DG Fakir Charan Mohanty
RI Dist 3262	DG Saumya Rajan Mishra
RI Dist 3291	DG Sudip Mukherjee

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.

RI இயக்குனர்

ஒருவருக்கொருவர்

கோவிட் நோய்த்தொற்று அனைத்தையும் மாற்றிவிட்டது... இத்தனை மாற்றங்களுக்கு நடுவில், ஒரு விஷயம் மாறவில்லை: ரோட்டரியின் முதுகெலும்பான ரோட்டரி அறக்கட்டளைக்கு (TRF) நம்முடைய அர்ப்பணிப்பு.

TRFக்கு வழங்குதல் என்பது, உண்மையிலேயே "செயல்திறன் மிக்க வழங்குதல்". ரோட்டரியன்கள் அறக்கட்டளைக்கு வழங்கக் காரணம், நம்முடைய பணத்தை நம் சக ரோட்டரியன்கள் அறிவோடும் நன்றாகவும் பயன்படுத்துவார்கள் என்பதையும், நாம் தனியாக செய்யக்கூடிய அனைத்துப் பணிகளையும்விட, TRFன் வழியாக ஒருங்கிணைந்து செயல்படும்போது நாம் மேலும் கூடுதலான பணிகளைச் செய்யலாம் என்பதையும் நாம் அறிவோம்.

இந்த நோய்த்தொற்றின்போது முன்னெச்சரிக்கையுடனும் சரியான நேரத்திலும் TRF எதிர்வினையாற்றியது, நல்கைகளை வழங்கினது, இதனால், உலக நிதிக்கான தேவை மேலும் பெருகியுள்ளது. ஆகவே, ஆண்டு நிதியை ஆதரிப்பது முக்கியமாகும்; ஒவ்வொரு ரோட்டரியனும் ஒவ்வோராண்டும் அளிக்கிற பங்களிப்புகளை இது சார்ந்துள்ளது.

இளம்பிள்ளைவாதம் இல்லாத ஓர் உலகம் என்கிற நம்முடைய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு, இளம்பிள்ளைவாத நிதிக்கான ஆதரவு முக்கியமாகும். இளம்பிள்ளைவாதத்தை இப்போதே முடித்துவைப்போம்'' என்ற பரப்புரை வெறுமனே பணம் திரட்டுவதற்கானது இல்லை, நம் குழந்தைகளைக் காப்பதற்கானது.

அனைத்து ரோட்டரியன்களும் தங்கள் இதயங்களைத் திறக்கவேண்டும், ஆண்டு மற்றும் இளம்பிள்ளைவாத நிதியை ஆதரிக்கவேண்டும்.

வழங்குபவர்களில் 3 வகையினர் உண்டு: முதல் வகை, சிக்கிமுக்கிக் கல்லைப் போல, அடித்தால்தான் கொடுக்கும், அதுவும் சிறிய தீப்பொறியைத்தான் தரும். இரண்டாம் வகை, ஸ்பாஞ்சைப் போல, அமுக்கினால் தரும், ஆனால், விரைவில் உலர்ந்துவிடும். மூன்றாம் வகை, தேன் கூட்டைப் போல, நிறையத் தரும், தந்துகொண்டே இருக்கும்.

ரோட்டரியன்கள் தேன் கூட்டைப் போன்றவர்கள். அவர்கள் நிறையத் தருகிறவர்கள், திரும்பத் திரும்பத் தருகிறவர்கள். நாம் ஒருவரோடொருவர் இணைகிற நேரத்தில், நம் முன்னே புதிய வாய்ப்புகள் திறக்கிற நேரத்தில், நம் அறக்கட்டளையைத் தொடர்ந்து ஆதரிப்போம்.

ஒன்றாகச் சேர்ந்தால், நம்மால் உலகை மாற்ற இயலும், நாம் உலகை மாற்றுவோம்.

Dr பரத் பாண்ட்யா
RI இயக்குனர், 2019–21

களின் செய்திகள்

நம்மைப் பெருமைப்படுத்தும் ரோட்டரி அறக்கட்டளை

உலகத்தின் தேவைகள் முன்பு எப்போதையும் விடக் கூடுதலாகவும் மிகுதியான பன்முகத்தன்மை கொண்டவையாகவும் உள்ளன. உங்களுடைய பங்களிப்புகளின் வழியாகக் கட்டமைக்கப்பட்ட ரோட்டரி அறக்கட்டளை, உலகெங்குமுள்ள ஆயிரக்கணக்கான மக்களுடைய வாழ்க்கைகளை மேம்படுத்த உதவிக்கொண்டிருப்பதை எண்ணி நம்முடைய பகுதிகளில் உள்ள ரோட்டரியன்களும் ஒட்டுமொத்த ரோட்டரி உலகமும் பெருமைப்படலாம்.

இந்தியா TRFக்கு அளிப்பதில் 2வது இடத்துக்கு முன்னேறியுள்ளதை எண்ணி நாம் பெருமைப்படவேண்டும். பல ஆண்டுகளாகப் பெற்றுக்கொண்டிருந்த'' இந்தியா, இப்போது ஒரு வழங்கும்'' நாடாகும்; சென்ற ஆண்டு நாம் பெற்றதைவிட மிகுதியாக வழங்கியுள்ளோம்! இந்திய ரோட்டரியன்கள் இப்போது வெளிநாட்டுச் சங்கங்களுடன் இணைந்து அவர்களுடைய நாடுகளில் பன்னாட்டு நல்கைகளைச் செய்வது ஒரு மகிழ்ச்சியான விஷயமாகும்.

2019–20ல், $29.71 மில்லியன் மதிப்புள்ள 339 நல்கைகளை TRF வழங்கியது. Zone 4, $12.21 மில்லியன் மதிப்புள்ள 104 நல்கைகளையும், Zone 5, 110ஐயும் ($8.17 மில்லியன்), Zone 6, 45 நல்கைகளையும் ($2.76 மில்லியன்) Zone 7, 80 நல்கைகளையும் ($6.57 மில்லியன்) பெற்றன.

உங்களுடைய தாராள மனப்பான்மை மற்றும் பல ஆண்டுகளாக நீங்கள் வழங்கிய ஆயிரக்கணக்கான தன்னார்வலர் மணி நேரங்களால், நம்முடைய சின்னமாகிய ரோட்டரி சக்கரம் குஜராத், நேபாளம், உத்தரகாண்ட் போன்ற இடங்களில் நாம் கட்டியுள்ள ஒட்டுமொத்தக் குடியிருப்புகளில் பெருமையுடன் நிமிர்ந்து நிற்கிறது. அத்துடன், இந்தியாவை இளம்பிள்ளைவாதம் இல்லாத நாடாக ஆக்குவதற்கு நாம் உதவியுள்ளோம்!

நீங்கள் கொண்டுவரக்கூடிய தாக்கத்தைப்பற்றிச் சிந்தியுங்கள்; வெறும் 60 சென்ட் செலவழித்து, ஒரு குழந்தையை இளம்பிள்ளைவாதத்திலிருந்து பாதுகாக்கலாம்; 50 செலவழித்து, நீரால் பரவும் நோய்களை எதிர்ப்பதற்காகத் தூய நீரை வழங்கலாம்; 500 செலவழித்து, கொடுமைப்படுத்துதலுக்கு எதிரான பரப்புரையைத் தொடங்கலாம், குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கலாம். ஆண்டு நிதிக்கு வழங்குவதன் மூலம், வாழ்க்கையை மாற்றும் இத்திட்டங்களை நீங்கள் சாத்தியமாக்குகிறீர்கள், அதன் மூலம், நாம் ஒன்றாகச் சேர்ந்து உலகில் நல்லவற்றைத் தொடரலாம்.

அமெரிக்காவிலுள்ள தொண்டு நிறுவனங்களை மதிப்பிடும் சுதந்தர நிறுவனமான "சாரிட்டி நேவிகேட்டர்' வழங்கும் மிகச் சிறந்த மதிப்பீடாகிய "நான்கு நட்சத்திரங்களை" TRF தொடர்ந்து 11வது ஆண்டாகப் பெற்றுள்ளது, இது நம்முடைய வலுவான நிதி நலன், பொறுப்புணர்வு, வெளிப்படைத்தன்மையைக் காண்பிக்கிறது.

நன்றி.



கமல் சங்வி
RI **இயக்குனர்,** 2019–21

Board of Permanent Trustees & Executive Committee

PRIP Rajendra K Saboo	RI Dist 3080
PRIP Kalyan Banerjee	RI Dist 3060
RIPE Shekhar Mehta	RI Dist 3291
PRID Panduranga Setty	RI Dist 3190
PRID Sushil Gupta	RI Dist 3011
PRID Ashok Mahajan	RI Dist 3141
PRID P T Prabhakar	RI Dist 3232
PRID Dr Manoj D Desai	RI Dist 3060
PRID C Basker	RI Dist 3000
TRF Trustee Gulam A Vahanvaty	RI Dist 3141
RID Dr Bharat Pandya	RI Dist 3141
RID Kamal Sanghvi	RI Dist 3250
RIDE A S Venkatesh	RI Dist 3232
RIDE Dr Mahesh Kotbagi	RI Dist 3131

Executive Committee Members (2020–21)

DG Sanjiv Rai Mehra Chair – Governors Council	RI Dist 3011
DG Sudip Mukherjee Secretary – Governors Council	RI Dist 3291
DG Sangram Vishnu Patil Secretary – Executive Committee	RI Dist 3170
DG Prashant Harivallabh Jani Treasurer – Executive Committee	RI Dist 3060
DG S Muthupalaniappan Member – Advisory Committee	RI Dist 3232

ROTARY NEWS / ROTARY SAMACHAR

Editor
Rasheeda Bhagat

Senior Assistant Editor
Jaishree Padmanabhan

ROTARY NEWS / ROTARY SAMACHAR

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website: www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

Rotary PEOPLE OF ACTION

சமுதாய வேளாண்மைதான் நாட்டுக்கு நல்லது!

ரஷீதா பகத்

சமூக ஆர்வலர் மயங்க் காந்தி ஒரு விவசாயியுடன்.

இந்தியாவில் எந்த ஒரு கிராமும் பல உறுப்புகள் கொண்ட உடலைப் போன்றது. நீங்கள் கல்லீரலில் கவனம் செலுத்தினால் இதயம் செயலிழந்துவிடும். நீங்கள் இதயத்தில் கவனம் செலுத்தினால் நுரையீரல் செயலிழந்துவிடும். அந்த கிராமத்தில் வசிக்கும் விவசாயியின் வாழ்க்கை கணிக்கமுடியாததாக இருக்கும். நான் ஒரு விவசாயியாக இருந்திருந்தால் இதுவரை எனக்கு 10 முறையாவது மாரடைப்பு வந்திருக்கும். மகாராஷ்டிர மாநிலம், மரத்வாடாவில் உள்ள பார்லி தொகுதியில் வறட்சியும், விவசாயிகள் தற்கொலைக்கும் பெயர்போன இடத்தில் செழுமை புரட்சியைக் கொண்டுவந்த சமூக ஆர்வலர் மயங்க் காந்தி, சொன்ன வார்த்தைகள்தான் இவை.

RID 3141ன் முன்னாள் PDG ராகுல் டிம்பாடியாவின் லா டிம் குழு "மாற்றங்களை புகுத்தினால் வேளாண்மை ஒரு நல்ல வாய்ப்பு", என்ற தலைப்பில் ஒரு மெய்நிகர் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தது. இதில் பேசிய மயங்க் காந்தி, தனது பேச்சுக்களால் ரோட்டரியினரையும் பிறரையும் மெய்மறக்கச்செய்தார்.

விவசாயிகள் இதுபோன்ற பல பிரச்னைகளையும் சவால்களையும் எதிர்கொள்கிறார்கள். நகர மக்களாகிய நம்மால் அவற்றை நினைத்துக்கூட பார்க்க முடியாது. இந்த சவால்கள் பருவநிலையால் ஏற்பட்டவை. அதிக மழை அல்லது மழையின்மை, பயிர்களைப் பூச்சிகள் தாக்குவது, மண்ணின் வளம் தொடர்பான பிரச்னைகள் இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

சமூக ஆர்வலரான மயங்க் காந்தியின் யோசனையை கேட்டு செயல்பட்டதால் பார்லி தொகுதியில் உள்ள 1 முதல் 3 ஏக்கர் நிலம் வைத்துள்ள விவசாயிகளின் வருமானம் மாதம் ரூ.10 ஆயிரம் முதல் ரூ.15 ஆயிரம் என்றிருந்தது ரூ.2 லட்சத்திலிருந்து ரூ.4 லட்சம் வரை திடீரென உயர்ந்தது. நல்ல விளைச்சல் இருந்தால் விவசாயிகளுக்கு மாதம் ரூ.6 லட்சம்கூட வருமானமாகக் கிடைக்கும். நாட்டை மாற்ற விரும்பும் ஓர் பைத்தியக்காரன் என்று தம்மை கூறிக்கொள்கிறார் மயங்க் காந்தி. முதலில் அண்ணா ஹசாரேயின் ஊழலுக்கு எதிரான இந்தியாவை உருவாக்குவோம் இயக்கத்தின் குழு உறுப்பினராக செயலாற்றி வந்தார். பின்னர் ஆம் ஆத்மி கட்சியில் தேசிய செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றி வந்தார் இவர்.

2015ம் ஆண்டில் ஆம் ஆத்மி கட்சி, தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றது. ஆனால், தேர்தல் அரசியலில் தவிர்க்கமுடியாத சமரசங்களுக்கும், உள்கட்சி மோதலுக்கும் தாம் பொருத்தமானவர் அல்ல என்பதை உணர்ந்துகொண்ட மயங்க் காந்தி அரசியலை விட்டு விலகினார்.

2016ம் ஆண்டின் கோடைக்காலம். நாட்டை மாற்றிவிட வேண்டும் என்ற எண்ணம் என்னுள் இருந்துகொண்டே இருந்தது. ஆனால், அரசியல் கட்சியோ, எந்த கட்டமைப்புமோ இல்லாமல் தனி ஒருவனாக என்னால் நாடு முழுவதையும் மாற்றியமைக்க முடியாது என்பதை புரிந்துகொண்டேன் என்கிறார். இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் வாழ்கிறது என்ற காந்திஜியின் வார்த்தைகளை அவர் எப்போதும் மனதில் கொண்டிருந்தார். ஆனால், கிராமங்களில் வறுமையும், வேதனையும்தான் அதிகம் இருந்தது. கிராமவாசிகளின் முதுகெலும்பு உடைக்கப்பட்டதாகவே அவர் உணர்ந்தார். கிராமங்களும் கிராம மக்களும் வெற்றிகரமாகவும் வலுவாகவும் இல்லாவிட்டால் நாடு எப்படி முன்னேறும் என்ற கேள்வி அவர் மனதை துளைத்துக் கொண்டிருந்தது.

6.4 லட்சம் கிராமங்களைக் கொண்ட ஒரு நாட்டில் மாற்றத்தைக் கொண்டுவர

விரும்புவது பைத்தியக்காரத்தனம் என்பதை அவர் ஒப்புக்கொள்கிறார். எனவே விவசாயிகள் தற்கொலைகள் அதிகம் பதிவான ஒருபகுதியை எடுத்துக்கொள்ள அவர் நினைத்தார். அதுதான் மகாராஷ்டிர மாநிலம், மரத்வாடா பகுதியைத் சேர்ந்த பீட் மாவட்டத்தை அவர் தேர்ந்தெடுத்தார். அங்குதான் விவசாயிகள் தற்கொலை சம்பவங்கள் அதிகம் நடந்த பகுதியாகும். மகாராஷ்டிரத்தின் பிகார் என்றுகூட இதைச் சொல்லுவார்கள்.

பீட் மாவட்டத்தில் 106 கிராமங்களை உள்ளடக்கிய பார்லி தாலுகாவில்தான் விவசாயிகள் தற்கொலை சம்பவங்கள் அதிகம் நிகழ்ந்தன. இந்தியாவில் நீர்ப் பாசனப் பகுதிகள் 40 சதவீதம் என்றால் பார்லியில் இது வெறும் 1.72 சத வீதமாகவே இருந்தது. எனவே அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தேன். முதலில் நான் எல்லாம் தெரிந்தவன் போல் மேலாண்மை ஆலோசகராக இருந்து இங்கும் அங்கும் சில மாற்றங்களைச் செய்தால் போதும் என்று நினைத்தேன். ஆனால், கிராம மக்களிடம் பேச வேண்டுமானால் எனக்கு மராத்தி மொழி தெரிந்திருக்க வேண்டும்.

முதலில் அதைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு கிராமத்தின் பொருளாதாரம் என்ன, அங்குள்ள வேளாண் பணிகள் என்னென்ன என்பது பற்றி தெரிந்து கொள்ள எனக்கு இரண்டு ஆண்டுகள் பிடித்தது. லகான் திரைப்படத்தில் பார்த்த கிராமத்தைத் தவிர எனக்கு வேறு எந்த கிராமத்தை பற்றியும் தெரியாது. அந்தப் பகுதியில் உள்ளவர்கள் டேங்கர் லாரிகள் மூலம்தான் தண்ணீர் பெறுகிறார்கள். இங்குள்ள கிராம மக்களின் மாத வருமானம் ரூ.3,500 மட்டுமே. மக்கள் உயிர்துறக்காமல் ஏதோ வாழ்ந்து வருகிறார்கள். அவ்வளவுதான்!

நீங்கள் ஒரு கிராமத்தை மாற்ற விரும்பினால், அந்த கிராமத்தை பற்றிய முழு விவரங்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். எனவே கிராமத்தில் உள்ள சமூகத்தினரை சந்திக்கத் தொடங்கினேன். 530 கி.மீ. தொலைவில் இருக்கும் ஒரு மனிதன் இங்கு எதற்காக வரவேண்டும்? அவருக்கு வாக்குகளோ, நோட்டுகளோ தேவையில்லை. பின் எதற்காக அவர் இங்கு வந்துள்ளார் என்கிற சந்தேகம் மக்கள் மனதில் இருந்தது. எனவே நான் முதலில் எதற்காக நான் இங்கு வந்தேன் என்று கிராம மக்களிடம் தெளிவுபடுத்த வேண்டியிருந்தது. பார்லி தாலுகாவில் விவசாயம் செய்யும் நடைமுறையை மாற்றியமைக்கவும், விவசாயி களின் வருமானத்தை பன்மடங்கு அதிகரிக்கவும் ஓர் இயக்கம் தேவைப்பட்டது. அந்த இயக்கம் எதிர்மறையானதாகவோ அல்லது மோதல் அல்லது அழிவுக்கான இயக்கமாகவோ இருக்க முடியாது. ஒரு புதிய கட்டடத்தை கட்டுவதற்கான திட்டம் இல்லாமல் பழைய கட்டடத்தை இடிப்பது போலவும் இருக்க முடியாது. இதையடுத்து உருவானதுதான் "குளோபல் பார்லி" என்கிற அமைப்பு. முதலில் 15 கிராமங்களில் பணிகளைத் தொடங்கினோம். இதற்கு முன்னர் 8 ஆண்டுகளில் ஐந்து முறை பார்லியில் பஞ்சம் ஏற்பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு

மயங்க் காந்தி ஒரு விவசாயியுடன் மாட்டு வண்டியில்.

மயங்க் காந்தி ஊர் மக்களுடன்.

தண்ணீர் வழங்குவதும், அவர்களுக்கு எளிதில் தண்ணீர் கிடைக்கச் செய்வதும் தான் எங்களுக்கு முதல் சவாலாக இருந்தது.

கடந்த 40 ஆண்டுகளில் மரத்வாடாவில் வறட்சி மோசமான நிலையை எட்டியபோது நீர் இருப்பு 8 சதவீதத்துக்கும் குறைவாக இருந்தது. மக்கள் தொடர்ந்து நான்காவது ஆண்டாக வறட்சியை எதிர்கொண்டனர். தண்ணீர் இல்லாமல் தவித்த பீட் கிராம மக்களுக்கு நாங்கள் ஒரு கோடி லிட்டர் தண்ணீரை சப்ளை செய்தோம். டேங்கர் லாரிகள் மூலம் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டதும் அதை எப்படி செலவழிக்க வேண்டும், எப்படி சேமித்து வைக்க வேண்டும் என்பதை புரியவைப்பது எங்களுக்கு முக்கிய சவாலாக இருந்தது. பாப்நாஷி நதியைப் பற்றி ஒரு விரிவான ஆய்வு நடத்தினோம். தொடர் முயற்சி கள், தொழிலாளர்களின் உழைப்பு, பணம் ஆகியவற்றுடன் 70 கி.மீ. தொலைவுக்கு ஆழப்படுத்தியதுடன், 162 குளங்கள் மற்றும் 5 பெரிய அணைகளையும் உருவாக்கினோம். இந்த சீரமைப்பு நடவடிக்கைகளால் தரிசு நிலங்கள் பசுமையாக மாறத் தொடங்கின. தண்ணீர் கிடைத்தது. மரங்கள் செழித்து வளர்ந்து வருமானத்துக்கு வழிவகுத்தது. மக்களுக்கும் நம்பிக்கை ஏற்பட்டது.

முன்னதாக அவர்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. ஆனால், தண்ணீர் அவர்களுக்கு சிறிது நம்பிக்கையை ஏற்படுத்தியது. லேளாண்மை செய்ய முடியும் என்று அவர்கள் உணர்ந்தார்கள். பின்னர் அது மக்கள் இயக்கமாக உருப்பெற்றது. கிராமப் பஞ்சாயத்து அளவில் ஊழல் தலைமைக்கு விடைகொடுத்துவிட்டு இளம் ஆண்களும் பெண்களுக்கும் தலைவர்களும் பொறுப்புக்கு வந்தனர். முன்பு தண்ணீர் பெற கிராம மக்கள் 300 முதல் 500 அடி ஆழத்துக்குச் சென்று தண்ணீர் தேட வேண்டி யிருந்தது. ஆனால், இப்போது 50 முதல் 70 அடியிலேயே தண்ணீர் அவர்களுக்கு கிடைத்தது.

இங்கு நன்கொடைக்கோ அல்லது அறக்கட்டளைக்கோ வேலையில்லை. விவசாயிகளும் கிராம மக்களும் ரூ.13.5 லட்சம் கொடுத்தனர். மீதி தொகை அரசு மற்றும் நண்பர்களிடமிருந்து வந்தன. நாங்கள் அறக்கட்டளை மூலம் சேவை செய்யவில்லை. விவசாயிகளுக்கு தோள் கொடுக்கிறோம் அவ்வளவுதான்!

விரைவிலேயே மயங்க் காந்திக்கான ஆதரவு பெருகியது. "வாழ்க்கையை மாற்றியமைப்போம்" இயக்கத்தில் மக்கள் ராணுவம் போல் ஒன்று திரண்டனர். மும்பைக்கும் புனேவுக்கும் கூலித் தொழிலாளர்களாக சென்றவர்கள் கிராமத்துக்கு திரும்பிவரத் தொடங்கினர். இங்கேயே தூய்மையான பசுமையான கிராமத்தை உருவாக்க முடியும் எனில் நாங்கள் ஏன் மும்பையில் சேரிப்பகுதியில் வாழவேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள்.

2018ம் ஆண்டு மிகப் பெரிய பஞ்சம் ஏற்பட்டது. நாங்கள் அனைவரும் மனச்சோர்வடைந்தோம். குடிநீருக்காக மீண்டும் டேங்கர் லாரிகளை நாடவேண்டியிருக்குமோ என்று நினைத்தோம். இது புண்ணுக்கு மருந்துபோடாமல் "பாண்ட் எய்ட்" போடுவது போன்றது. ஆனால். நாங்கள் குடிநீர் ஆதாரங்களை பெருக்கி நெருக்கடிக்கும் தீர்வுகண்டோம்.

ஆனால், குடிநீர் கிடைத்தாலும் வாழ்வாதாரத்துக்குத் தேவை

வருமானம். அதை அதிகரிப்பதே சவால். தண்ணீரை மட்டும் குடித்து விட்டு நம்மால் உயிர்வாழமுடியுமா? எனவே அடுத்த கட்டமாக விவசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டோம். வேளாண் சார்ந்த தொழில்துறையினர், பல்கலைக்கழகங்கள், கிஸான் விகாஸ் கேந்திரங்கள் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொண்டோம். இதற்கான தொழில்நுட்ப குழுவும் அமைக்கப்பட்டது.

மண்வளம், பருவநிலை மாற்றங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து பழ மரங்கள் நடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. உடனடியாக இதற்கு எவ்வளவு செலவாகும், ஆரம்ப கட்ட முதலீடு உள்ளிட்ட விவரங்கள் தயாரிக்கப்பட்டன. நாங்கள் குழுவாக கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள விவசாயிகளிடம் இரவு பகலாக பேச்சு நடத்தி பழ மரக்கன்றுகளை நடுவதால் ஏற்படும் லாப-நஷ்டங்களை விவரித்தோம். வேளாண்மையை லாபகரமான தொழிலாக்க அவர்கள் சிறப்பு பயிற்சி களை மேற்கொள்ள வேண்டும் என்று கூறி அதற்காக ஆறு அமர்வு பயிற்சி வகுப்புகளை நடத்தினோம். பின்னர் அவர்களுக்கு தரமான பழ மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

முதல் ஆண்டு 12 லட்சம் மா, பப்பாளி, சாத்துக்குடி, பரங்கி, முருங்கை, வாழை மரக்கன்றுகள் பயிரிடப்பட்டன. மண்வளம், பருவநிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு விவசாயிகளுக்கு எது தேவையோ அந்த மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. பொதுவாக ஒவ்வொரு விவசாயியும் பருத்தி, சோயா போன்றவற்றை நடவு செய்து அதன் மூலம் மாதம் ரூ.15 ஆயிரம்

உயிரூட்டப்பட்ட ஒரு நீர்நிலை.

நகர்ப்புற மக்களுக்கு சமுதாய வேளாண்மை பலன் தரும்

இந்த நிகழ்ச்சியில் நகர்ப்புறங்களில் வசிக்கும், ஆனால், தங்கள் சொந்த ஊரில் அல்லது கிராமத்தில் நிலம் வைத்திருப்பவர்கள் விவசாயத்தைத் தொடர விரும்பினால் அல்லது நிலம் வாங்கி விவசாயத்தில் ஈடுபட விரும்புபவர்களுக்கு டிம்பாடியா சொல்லும் தகவல் இதுதான். தனிப்பட்ட எந்த நபரும் தங்கள் நேரடி கண்காணிப்பு இல்லாமல் விவசாயம் செய்ய முடியாது. முதலில் எந்த சிக்கலும் இல்லாமல் நிலம் வாங்குவது கடினமானது. அடுத்து ஒன்று அல்லது இரண்டு ஏக்கர் நிலத்துக்கு மின்சாரம், குடிநீர் வசதி பெறுவதும் நிபுணர்களின் ஆலோசனை பெறுவதும் சாத்தியமல்ல. எனவே என்னைப் பொருத்தவரை சமுதாய வேளாண்மைதான் சிறந்தது. அதாவது 100 அல்லது 200 பேர் ஒன்று சேர்ந்து 200 ஏக்கர் நிலத்தை வாங்கி, ஒரு சங்கத்தை உருவாக்கி, நிபுணர்கள் குழுவை அமைத்து அவர்களின் ஆலோசனையின் பேரில் என்ன பயிர் செய்வது அல்லது எந்த மரங்களை நடுவது என்று கேட்டு செயல்பட்டால் பயன்பெறலாம். கார்ப்பொரேட் நிறுவனங்களைப் போலவே விவசாயத்திலும் தொழில் சார்ந்த நிபுணர்களின் ஆலோசனை தேவைப்படுகிறது. நல்ல விளைச்சல் கிடைக்கத் தொடங்கிவிட்டால் பெரிய நிறுவனங்கள் நம்மிடம் வந்து நேரடியாக விளைபொருள்களை வாங்க முன்வருவார்கள் என்றார்.

அப்போது குறுக்கிட்டுப் பேசிய மயங்க் காந்தி, நமது விவசாய நிலப்பரப்பு சிறியதாக இருந்தால், பார்லி பகுதியில் சராசரியாக மூன்று ஏக்கர் நிலம் இருந்தால் டிராக்டர், தொழில்நுட்ப ஆலோசனை, மூலப்பொருள்களை விவசாயிகள் பகிர்ந்துகொண்டு செயல்படுவது நல்ல பலனைத் தரும் என்றார். தற்போது மத்திய அரசால் கொண்டுவரப்பட்டுள்ள வேளாண் சட்டங்கள் சிறு விவசாயிகளை பாதிக்கும் என்று தாம் நம்புவதாக அவர் குறிப்பிட்டார். ஏனெனில் உணவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள மிகப்பெரிய நிறுவனங்கள் சமுதாய வேளாண்மையில் ஈடுபட்டுள்ள பெரிய விவசாய அமைப்புகளைத்தான் நாடுவார்களே தவிர, சிறிய விவசாயிகளிடம் வரமாட்டார்கள். உழவர் உற்பத்தியாளர் அமைப்பை உருவாக்குங்கள் அல்லது கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்துங்கள் என்று அரசு கூறுகிறது. அதாவது எதிர்காலம் சமுதாய வேளாண்மைதான் என்பதை குறிப்பாக உணர்த்துகிறது. அதை கருத்தில் கொண்டுதான் டிம்பாடியாவும் மக்கள் பயன்பெறும் வகையில் இதுபோன்ற கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளார் என்று மயாங்க் காந்தி தெரிவித்தார்.

நகர்ப்புறங்களில் மக்கள் இருந்துகொண்டு கிராமப்புறத்தில் உள்ள நிலங்களில் விவசாயம் செய்வது என்பது சரிபட்டு வராது. அவற்றை நாம் எட்டியிருந்து கவனிக்க முடியாது. அதாவது விவசாயம், நகரவாழ்க்கை இரண்டையும் ஒரு சேர தொடர முடியாது. இந்தியாவில் உள்ளவர்களுக்கு ஒரு நன்மை என்னவெனில் இங்கு விவசாயம் பற்றிய அறிவு, நிபுணத்துவம் அதிகம் கிடைக்கிறது. வேளாண் பல்கலைக்கழகங்களிடமிருந்து புதிய, புதிய தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெறமுடியும். ஆனால், இவையெல்லாம் விவசாயிகள் கூட்டாக இருந்து செயல்பட்டால்தான் சாத்தியம்.

குஜராத் அல்லது பஞ்சாப்பை போல் அல்லாமல் மகாராஷ்டிரத்தில் மும்பைக்கு 150 கி.மீ. தொலைவில் ஒரு ஏக்கர் நிலத்தை ரூ.12 முதல் ரூ.15 லட்சத்துக்கு வாங்க முடியும். விவசாயத்தில் ஈடுபட விரும்புபவர்கள் ஒன்றாக இணைந்து ரூ.50 கோடி முதலீடு செய்து சமுதாய வேளாண்மையில் ஈடுபட்டால், சிறந்த தொழில்நுட்பத்தை மேற்கொண்டு வெற்றிபெற முடியும். ஆனால், 500 கி.மீ. தொலைவுக்கு அப்பால் ஒரு சிறிய நிலத்தை வைத்துக்கொண்டு தனிப்பட்ட முறையில் விவசாயம் செய்ய விரும்பினால் அது நடக்காது என்றார் டிம்பாடியா.

PDG ராகுல் டிம்பாடியா.

வருமானம் பெற்று வந்தனர். ஆனால், அது அவர்களுக்கு போதுமானதாக இல்லை. பழமரங்கள் நடுவது ஒன்றும் பெரிய ராக்கெட் அறிவியல் அல்ல. ஆனால், நாங்கள் நிலத்தில் இடைவெளியை பகுப்பாய்வு செய்து மூன்று இடைவெளிகளைக் கண்டோம். அந்த இடத்தில் தாய் மரம் மற்றும் இதர தரமான மரக்கன்றுகளை நட்டோம் என்கிறார் காந்தி.

இந்தியா முழுவதிலும் இருந்து சிறந்த தரமான மரக்கன்றுகளை வழங்கக்கூடிய நர்சரிகள் அடையாளம் காணப்பட்டன. அடுத்து பயிர்செய்யும் முறையிலும் மாற்றம் செய்யப்பட்டு அதற்காக விவசாயிகளுக்கு பிரத்யேக பயிற்சி அளிக்கப்பட்டது. ஒரு மரத்தை எப்படி வளர்ப்பது என்பது குறித்து விவசாயிகளுக்கு சொல்லித்தர வேண்டியதில்லை என்றாலும், அவர்களை ஒன்றிணைத்தல், செயல்படுத்துதல், மதிப்புக்கூட்டுதல், சந்தைப்படுத்துதல் பற்றி அவர்களுக்கு தெளிவாக எடுத்துக்கூறினோம்.

இப்போது வரை பார்லியில் முருங்கை மற்றும் பப்பாளி ஆகிய இரண்டு வகைகள் நல்ல விளைச்சலை கொடுக்க ஆரம்பித்துள்ளன. பப்பாளி பழத்தின் தரமும் நன்றாக இருந்தது. கடந்த ஆண்டு ஒரு கிலோ பப்பாளி பழத்துக்கு ரூ.10 முதல் ரூ.15 வரைதான் விவசாயிகளுக்கு கிடைத்தது. ஆனால், இப்போது கிலோவுக்கு ரூ.22 முதல் ரூ.28 வரை

கடந்த ஆண்டு ஒரு கிலோ பப்பாளி பழத்துக்கு ரூ.10 முதல் ரூ.15 வரைதான் விவசாயிகளுக்கு கிடைத்தது. ஆனால், இப்போது கிலோவுக்கு ரூ.22 முதல் ரூ.28 வரை அவர்களுக்கு கிடைக்கிறது.

அவர்களுக்கு கிடைக்கிறது. பத்தாயிரம் ரூபாய் மட்டுமே வருமானம் ஈட்டிய விவசாயிகளுக்கு இப்போது ரூ.5 லட்சம் வரை வருமானம் கிடைக் கிறது. அதாவது வருமானம் 50 மடங்கு அதிகரித்துள்ளது. இப்படி வருமானம் பெருகியதும் விவசா யிகள் இரண்டு சக்கர வாகனத்தை வாங்கி, பெருமையுடன் அதில் அமர்ந்து செல்லத் தொடங்கியுள்ளனர். இவர்களைப் பார்த்து மற்ற விவசா யிகளும் பப்பாளி, முருங்கை பயிர் செய்யத் தொடங்கிவிட்டனர்.

இந்த மெய்நிகர் கருத்தரங்கை நிர்வகித்த ரோட்டேரியன் சந்தீப் ஓஹ்ரி, விவசாயிகளின் வளமான வாழ்க்கையைப் பற்றி இரண்டு விடியோக்களை காட்சிப்படுத்தியதாக சந்தீப் கிட்டே தெரிவித்தார். இவரும் ஒரு விவசாயிதான். ஒரு ஏக்கரில் நான் 900 பப்பாளி மரக்கன்றுகளை நடவுசெய்தேன். எனக்கு 50 டன் பழங்கள் விளைச்சலாக கிடைத்தது. முன்னதாக ரூ.20 ஆயிரம் மட்டுமே

வருமானமாக கிடைத்தது. ஆனால் இப்போது செலவு போக ரூ.3 லட்சம் வரை வருமானம் கிடைக்கிறது என்றார். பப்பாளிக்கு ஊடுபயிராக தர்ப்பூசணியை பயிர்செய்தபோது அதன் மூலம் ஒரு ஏக்கருக்கு செலவுபோக எனக்கு ரூ.1.25 லட்சம் கிடைத்தது. முன்பு நான் பருத்தி நடவு செய்துகொண்டிருந்தேன். விவசாயத்தின் மூலம் இவ்வளவு வருமானம் ஈட்ட முடியும் என்று நான் கனவிலும் நினைத்து பார்த்ததில்லை. கூரை வீட்டில் இருந்த நான் இப்போது கான்கிரீட் வீட்டிற்கு மாறிவிட்டேன் என்றார்.

மற்றொரு விவசாயியான முக்தேஷ்வர், முன்பு தண்ணீருக்காக 400 முதல் 500 அடிவரை கீழே செல்லவேண்டியிருந்தது. ஆனால், இப்போது எங்களுக்கு 70 அடியில் தண்ணீர் கிடைக்கிறது. மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது என்றார்.

இது ஒருபுறம் இருக்க, முன்னாள் மாவட்ட ஆளுநர் ராகுல் டிம்பாடியா, சமுதாய வேளாண்மைதான் இந்த கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்ய முக்கிய காரணம் என்று தெரிவித்தார். நகரத்தில் இருக்கும் மேட்டுக்குடியினர் ஒருவருக்கு கிராமத்தில் நிலம் இருந்தால் சமுதாய வேளாண்மை திட்டத்தின் மூலம் விவசாயம் செய்து லாபம் பெறமுடியும் என்றார்.

இந்த கருத்தரங்கில் பங்கேற்ற லோஹ்ரி என்பவர், அறிவியல் மற்றும் சட்டம் படித்த நீங்கள் விவசாயத்தில் எப்படி ஆர்வம் காட்டினீர்கள் என்று கேள்வி எழுப்பினார். அதற்கு டிம்பாடியா, விவசாயத்தின் மீது எனக்கு எப்போதும் ஆர்வம் உண்டு. 1987-ஆம் ஆண்டு நான் சிறிது நிலம் வாங்கினேன். நான் அடிக்கடி இஸ்ரேல் மற்றும் ஜப்பானுக்கு சென்று வருவதுண்டு. அங்கு உணவுப் பொருள்களைத் தயாரித்து பேக்கிங் செய்வது குறித்து தெரிந்துகொண்டபோது விவசாயம் மற்றும் வேளாண் சுற்றுலாவில் நல்ல எதிர்காலம் இருப்பதாக உணர்ந்தேன். இதையடுத்தே நான் விவசாயத்தில் காலடி எடுத்துவைத்தேன்.

1991-ஆம் ஆண்டில் நான் ஹோட்டல் தொழிலில் ஈடுபட்டேன். இன்று எனக்கு மூன்று ஹோட்டல்களும், ஐந்து உணவகங்களும் உள்ளன. இதைத் தவிர விவசாயத்திலும் கவனம் செலுத்தி வருகிறேன். அதில் எனக்கு பெரிய வெற்றி கிடைக்கவில்லை என்றாலும் விவசாயத்திலும், வேளாண் சுற்றுலாவிலும் லாபம் சம்பாதிக்க வாய்ப்பு இருப்பதாகவே நம்புகிறேன்.

இஸ்ரேல் சென்று சொட்டு நீர் பாசனம் குறித்து ஆய்வு செய்துவிட்டு வந்து தக்காளி, வெண்டை ஆகியவற்றை நிலத்தில் பயிர்செய்தேன். ஊட்டச்சத்து கரை சல்களை நீர் கரைப்பானில் பயன் படுத்துவதன் மூலம் தக்காளியை பயிர் செய்தேன். (இது ஒரு வகை தோட்டக்கலை). எனக்கு நல்ல விளைச்சல் கிடைத்தது. ஆனால் 1989–90-ம் ஆண்டில் தக்காளியின் விலை கிலோ ரூ.3க்கு அப்போது விற்கப்பட்டதால் எனக்கு அது சாத்தியமானதாகப் படவில்லை.

அடுத்த கட்டமாக மெஹஸானாவுக்குச் சென்று யூகலிப்ட்ஸ் மரங்கள் வளர்ப்பு குறித்து

படித்துவிட்டு வந்தேன். பின்னர் பப்பாளி, தேக்கு மற்று முந்திரி மரங்களை நட்டு வளர்த்தேன். இது நடந்தது 2005ல். பப்பாளி விளைச்சல் நன்றாக இருந்தது. ஆனால், அப்போது வந்த வெள்ளத்தால் எனது விவசாயப் பண்ணை 5 நாள் தண்ணரில் மூழ்கி இருந்ததால் பப்பாளி மரங்கள் வீணாகி விட்டன. இதனால் மிகுந்த விரக்தி அடைந்தேன். நமக்கு விவசாயம் சரிபட்டு வராது என்று நினைத்தேன். ஆனால், 2019–20 இல் நான் நட்ட முந்திரி, தேக்கு மரங்கள் நல்ல பலன் கொடுக்க ஆரம்பித்தன. தேக்கு மரங்கள் 35 முதல் 40 அடிவரை வளர்ந்திருந்தது. முந்திரி விளைச்சலும் நன்றாக இருந்தது. ஒரு முந்திரி மரத்திலிருந்து 32 கிலோ முந்திரி தோலுடன் கிடைத்தது. ஆனால், தோலை நீக்கி, பதப்படுத்தி விற்பனைக்கு கொண்டு செல்வதுதான் பிரச்னையாக இருந்தது என்றார்.

மற்றொரு உதாரணத்தையும் கூறினார் டிம்பாடியா. வெண்டைக்காய் விளைச்சலும் நன்றாக இருந்தது. உங்களிடம் இடம் இருந்தால் 100 கிலோ வெண்டைக்காய் விளைச்சலை எளிதில் பெறமுடியும். ஆனால், அதை வைத்துக்கொண்டு என்ன செய்வது. 100 கிலோவையும் நம்மால் சாப்பிட முடியாது. நீங்கள் அதை நண்பர்களுக்கு கொடுக்க விரும்பினாலும் நீங்கள்தான் அவர்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்று கொடுக்க வேண்டும். இப்படி எத்தனை முறை கொடுக்க முடியும்? சில நாட்களுக்குப் பின் இந்த ஆளுக்கு வேறு வேலை இல்லையா எப்பவும் வெண்டைக்காய்தானா என்று அவர்கள் கூறுவார்கள் என்றார்.

ஒரு கட்டத்தில் விவசாயமே வேண்டாம் என விரக்தியடைந்த நிலையில் நான் (டிம்பாடியா) இருந்தபோது, நண்பர் ஒருவர் மயங்க் காந்தி பற்றி என்னிடம் குறிப்பிட்டார். அவரது உதவி மற்றும் ஆலோசனையின் பேரில் பீட் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.4 முதல் 6 லட்சம் வரை வருமானம் பெறுவதாகவும் தெரிவித்தார். இதை என்னால் முதலில் நம்பமுடியவில்லை. உடனே நான் அங்கு சென்று நேரில் பார்வையிட்டபோது விவசாயிகளின் முகத்தில் மலர்ச்சி இருந்ததைப் பார்த்தேன். முருங்கை, பப்பாளி, வாழை உள்ளிட்ட பழ மரங்களை பயிரிட்டு வளர்த்து வருவதாகவும் அதில் நல்ல விளைச்சலும் வருமானமும் கிடைப்பதாக அவர்கள் கூறினர். அப்போதுதான் விவசாயத்தில் முதலீடு செய்தால் லாபம் கிடைக்கும் என்று உறுதியாக நம்பினேன்.

1997ம் ஆண்டு முதல் தனிப்பட்ட அனுபவத்தின் மூலம் சுற்றுலாத்துறையில் பணம் கிடைப்பதை உணர்ந்து கொண்டேன். வேளாண் சுற்றுலாவை மேம்படுத்தினால் அல்லது ஊக்குவித்தால் நமது விவசாயிகள் பயனடைய முடியும் என்று இப்போது நினைக்கிறேன் என்றார் டிம்பாடியா.

பின்னர் ரோட்டரி செய்திக்கு பேட்டியளித்த டிம்பாடியா, பீட் மாவட்டத்தில் குளோபல் பார்லி அமைப்பு செய்த பணிகள் சமுதாய வேளாண்மையை ஒத்திருக்கிறது. காந்தி, விவசாயிகளை ஒன்றிணைத்து அவர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்திருக்கிறார். இதேபோல நகரத்தில் வாழும் வசதியான மக்கள் தங்கள் நிலங்களை அல்லது வளங்களை ஊரகப்பகுதிகளுக்கு அளித்தால், விவசாயத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்களை பூத்துக்குலுங்கும் பழத் தோட்டங்களாக மாற்றலாம் இதன் மூலம் லட்சக்கணக்கான ஏழை மக்கள் வளமான வாழ்க்கையைப் பெறமுடியும் என்றார்.

டிம்பாடியா மேலும் கூறுகையில், நிலையான மற்றும் தன்னிறைவுபெற்ற சுற்றுச்சூழலுடன்கூடிய விவசாய முறைகளை (பெர்மாகல்ச்சர்) நாடு முழுவதும் நாம் பின்பற்றினால் விவசாயத் தொழிலில் உள்ள துயரங்களைப் போக்கி விவசாயிகளை வறுமையிலிருந்து மீட்பதற்கு நல்ல தீர்வாக இருக்கும். மயங்க்காந்தி இதை பீட் மாவட்டத்தில் நிரூபித்துள்ளார். அது லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு வாழ்க்கையில் நம்பிக்கை ஒளிஏற்றுவதாக அமையும். ரோட்டரி போன்ற அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும், தொலை நோக்கு சிந்தனையுள்ள, திறன் பெற்ற வர்களுக்கும் நல்ல வெற்றியைக் கொடுக்கும் என்றார் டிம்பாடியா. (மேலும் தகவல்கள் பெற www.globalparli.org என்ற இணையதளத்தை பார்க்கவும்.)

படங்கள்: க்ளோபல் பார்லி
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

ரோட்ராக்டருக்கு ஆதரவுக்கரம் நீட்டிய மணாலி ரோட்டரி!

ரஷீதா பகத்

PRIP மார்க் மலோனி (ரோட்டரி உலகை இணைக்கிறது) மற்றும் தற்போதைய RI தலைவர் ஹோல்கர் நாக் (ரோட்டரியில் இளைஞர்களுக்கு வாய்ப்பு காத்திருக்கிறது) ஆகிய இரு தலைவர்களின் நோக்கத்தை வெளிப்படுத்துகிற அருமையான கட்டுரை இது. இளைய உறுப்பினர்களான ரோட்ராக்டர்களுக்கு தாய் கழகமான ரோட்டரி என்ன வகையில் எல்லாம் உதவமுடியும் என்பதை நிரூபிக்கிறது.

சமீபத்தில் ரோட்டரியும் ரோட்ராக்ட்டும் ஒருங்கிணைந்து செயல்பட்டதை இது விளக்குகிறது. ரோட்டரி மாவட்டம் 3070க்கு உட்பட்ட மணாலி ரோட்ராக்ட் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜெயா சாகர், ஹமிர்பூரிலுள்ள NITயில் எலெக்ட்ரானிக்ஸ் என்ஜினீயரிங் துறையில் படித்து B.Tech பட்டம் பெற்றிருந்தார். அவருக்கு இங்கிலாந்தில் உள்ள பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தில் CDTQuantum Physics துறையில் ஆராய்ச்சி செய்து PhD பட்டம் பெற ஜுட்ஷி ஸ்மித் ஸ்காலர்ஷிப் மூலம் உதவித்தொகை கிடைத்தது.

அவருக்கு கிடைத்த உதவித் தொகையில் இங்கிலாந்து செல்ல விமானக் கட்டணம், அவரது மேற்படிப்புக் கட்டணம், இங்கிலாந்தில் அவர் தங்கியிருந்து படிப்பதற்கான அடிப்படைச் செலவுகள் ஆகியவை அடங்கியிருந்தது. ஆனால், அவரது ஆராய்ச்சிக்குப் பயன்படும் அதிக விலையுள்ள மடிக்கணினி (லேப்டாப்) வாங்க அது உதவியாக இல்லை.

அவரது இயற்பியல் ஆராய்ச்சிக்கு கணிதவியல் நுணுக்கங்களுடன் கூடிய நவீன தொழில்நுட்பம் நிறைந்த மடிக்கணினிதான் அவருக்குத் தேவையாக இருந்தது. ஜெயாவின் தாயாரால், வீட்டுச் செலவை மட்டுமே சமாளிக்க முடிந்தது. மகள் மற்றும் மகனை அவர் மிகவும் சிரமத்துடனேயே படிக்க வைத்தார். மேலும் ரூ.1 லட்சம் செலவிட்டு மடிக்கணினியை வாங்கும் நிலையில் அவர் இல்லை. பகுதிநேர வேலை பார்த்து இதற்கான தொகையை திரட்டவும் பல்கலைக்கழக விதிமுறைகள் அனுமதிக்கவில்லை.

ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு களுக்கான தேசிய இளைஞர் விருது பெற்ற ஜெயா, பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தால் PhD பண்ணுவதற்கு ஆசியாவிலிருந்து தகுதி பெற்ற ஒரே நபராவார். இந்த நிலையில் விலை மதிப்புள்ள நவீன மடிக்கணினி வாங்க உதவி கேட்டு ஜெயா, ரோட்டரி மாவட்டம் 3070ன் மாவட்ட ஆளுநர் தேவிந்தர் சிங்கிற்கு மின்னஞ்சல் அனுப்பினார். தாம் ஒரு திறமையான என்ஜினீயர் என்றும் பாதுகாப்புத்துறை, 5ஜி கம்யூனிகேஷன்ஸ், குவான்டம் கம்ப்யூட்டிங், ஆப்பிள் பார்மர்ஸ் உள்ளிட்ட பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களில் பணியாற்றியுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

ரோட்ராக்டரான ஜெயாவின் மின்னஞ்சலுக்கு பதிலளித்த தேவிந்தர் சிங், அவரை, மணாலி ரோட்டரி சங்கத் தலைவர் G C தாகுரைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். அவரது வேண்டுகோள் மற்ற ரோட்டேரியன்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது. மணாலி ரோட்டரி சங்கம் மற்றும் மாவட்டத்தில் உள்ள இதர ரோட்டரி சங்க உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து பணத்துக்கு ஏற்பாடு செய்து ஜெயாவுக்கு அனுப்பிவைத்தனர். மேலும் உதவி தேவைப்பட்டால் பிரிஸ்டலில் உள்ள தனது ரோட்டரி நண்பர்களைத் தொடர்பு கொள்ளுமாறும் தேவிந்தர் ஜெயாவிடம் அறிவுறுத்தினார்.

தனக்கு விருப்பமான மடிக் கணினியை வாங்கிய ஜெயா, இது

ரோட்டராக்டர் ஜெயா சாகர்

எனது சிக்கலான ஆராய்ச்சிப் பணிகளுக்கும் சோதனை முடிவுகளை விரைந்து பெறமுடியும் என்ற நம்பிக்கையையும் அதற்கான சக்தியையும் கொடுத்துள்ளது. இதைவிட முக்கியமானது, இந்த மதிப்புமிக்க PhD படிப்புக்கு அனுமதி கிடைத்தபோது இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஆயிரக்கணக்கான மக்களிடமிருந்து எனக்கு வாழ்த்துச் செய்திகள் வந்தன. ஆனால் இவை எல்லாமே ரோட்டேரியன்கள் எனக்கு தகுந்த சமயத்தில் கைகொடுத்து உதவியதால் தான். உங்கள் உதவி எனது செயல் திறனை மட்டுமல்ல, எனது மன உறுதியையும் உயர்த்தியுள்ளது என்று கூறி நன்றி தெரிவித்தார்.

ஜெயா, தனது PhD ஆராய்ச்சிப் படிப்புக்காக கடந்த செப்டம்பர் 15ம் தேதி பிரிஸ்டல் நகரைச் சென்றடைந்தார். பல்கலைக் கழகத்துக்கு நேரிடையாகச் சென்று வகுப்புகளில் பங்கேற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சிங் அளித்த உறுதியின்படி, பிரிஸ்டல் நகர ரோட்டரி சங்கத்திலிருந்து ஜெயாவுக்கு மின்னஞ்சல் வந்துள்ளது. விரைவில் சங்கத்தின் உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ள இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மடிக்கணினி வாங்கித்தந்து உதவி செய்தமைக்காக ரோட்டரிக்கு மனப்பூர்வமாக எனது தாய் நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார். வீட்டை விட்டு வெகுதூரம் நான் தனியாக பிரிஸ்டல் வந்தது குறித்தும் அவருக்கு கவலை இருந்தது. பிரிஸ்டல் நகர ரோட்டேரியன்கள் என்னுடன் தொடர்பிலிருப்பது தெரிந்ததும் நிம்மதியடைந்துள்ளார் என்று ஜெயா தெரிவித்துள்ளார்.

தனது மாவட்டத்தில் ரோட்டரி மற்றும் ரோட்ராக்ட் சங்கங்களுக்கு இடையிலான தொடர்பு குறித்து DG சிங் கூறுகையில், எங்கள் மாவட்டத்தில் ஒரு சில ரோட்டரி சங்கங்கள், ரோட்ராக்ட் சங்கத்தினரின் பல்வேறு நடவடிக்கைகளுக்கு நிதியுதவி உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் செய்துகொடுத்து அவர்களுக்கு ஆதரவாக உள்ளனர் என்று தெரிவித்தார்.

நான் கடந்த ஆண்டு மணாலி ரோட்டரி சங்கத்தில் சேர்ந்த போது என் வாழ்க்கையின் முன்னேற்றத்தில் ரோட்டரி மற்றும் ரோட்ராக்ட் சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கும் என்று நினைக்கவில்லை. உங்களின் சீரிய தலைமைக்கும், உங்களின் உதவிக்கும் நன்றி என்று கூறி DG மற்றும் மணாலி ரோட்டரி சங்கத்தை பெருமை படுத்தியுள்ளார் ஜெயா.■

2021–23 RI இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் Dr கொட்பாகி

ரோட்டரி செய்திக்குழு

2021–23க்கான Zones 4 மற்றும் 7ன் RI இயக்குநராக Dr மகேஷ் கொட்பாகி, RC புணே ஸ்போர்ட்ஸ் சிட்டி RID 3131 தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கொட்பாகி ஒரு தொழில்முறை மருத்துவமனை நிர்வாகி, மகாராஷ்டிரத்தில் உள்ள புணேயிலிருக்கும் கொட்பாகி மருத்துவ மனையின் தலைவர் ஆவார். இவர் ஒரு நான்காம் தலைமுறை மருத்துவர் ஆவார்; இவருடைய தாத்தா, மகாத்மா காந்தியின் மருத்துவராக இருந்தவர். புணே பல்கலைக்கழகத்தில் முதுநிலைப் பட்டம் பெற்ற இவர், மகளிர் நோயியலில் ஆராய்ச்சி செய்து தங்கப் பதக்கம் வென்றவர். 1991ல், இவர் 10-படுக்கைகளைக் கொண்ட ஒரு மருத்துவமனையை அமைத்தார், விரைவில் அது பல துறைகளில் சிறப்புக் கவனம் செலுத்தும் மருத்துவ மனையாக வளர்ந்தது. குறைந்த விலை டயாலிசிஸ் மையம் ஒன்றையும் அவர் அமைத்தார், நலப்பராமரிப்பு,

விருந்தோம்பல், பெட்ரோலியம் மற்றும் கட்டுமானத் தொழில் துறைகளில் இயங்கிவருகிறார்.

கொட்பாகி இதற்குமுன் DGயாக (2005–06), பன்னாட்டுப் பயிற்சித் தலைவராக (2014), தெற்கு ஆசியக் கல்வியறிவு மாநாட்டுத் தலைவராக (2014), ARFCயாக (2017–18) மற்றும் GETS தலைவராக (2020) சேவையாற்றியுள்ளார். RIயின் 'தனக்குமேல் சேவை' விருது, TRFன் மிகச் சிறந்த சேவை விருதுப் பட்டம் ஆகியவற்றைப் பெற்ற பெருமையும் இவருக்கு உண்டு. ஆப்பிரிக்காவிலுள்ள லெசொதோவுக்கான ரோட்டரி மருத்துவப் பணியிலும் இவர் தன்னார்வலராகச் சேவை புரிந்துள்ளார்.

கொட்பாகி நடத்தும் சிமயி தொண்டு அறக்கட்டளை, கிராமப்புறக் குழந்தைகளுக்குக் குறைந்த செலவில் நலப் பராமரிப்பு மற்றும் கல்வியை ஆதரிக்கிறது. இவர் எழுத்தறிவு, இளம்பிள்ளைவாத அறுவைச் சிகிச்சை, ருபெல்லா தடுப்பு மருந்து வழங்குதல், கிராமப்புறப் பெண்களுக்கான பசு வங்கிகள் மற்றும் சிறப்புக் குழந்தைகளின் நலன் ஆகியவற்றில் 100க்கும் மேற்பட்ட சேவைத் திட்டங்களை இவர் தலைமை தாங்கி நடத்தி யுள்ளார்.

கொட்பாகியும் அவருடைய மனைவி டாக்டர் அமிதா-வும் TRFன் மூன்றாம் நிலை மிகப் பெரிய நன்கொடையாளர்கள் மற்றும் கொடையாளிகள் ஆவர்.■

2023-க்குள் தட்டம்மை, ரூபெல்லாவை ஒழிக்க முடியும்: ஜேக்கப் ஜான்

ஜெய்ஸ்ரீ

நாட்டில் போலியோ ஒழிப்பின் மூலம் நாம் நமது தேசத்தின் செல்வத்தில் ஆண்டுக்கு ரூ.600 கோடி வரை பங்களிப்புச் செய்கிறோம். தட்டம்மை மற்றும் ரூபெல்லா வைரஸ் நோயையும் (எம்.ஆர்.) நம்மால் ஒழிக்க முடிந்தால் நமது தேசம் சுகாதார அளவிலும் செல்வவளத்திலும் நிச்சயம் முன்னிலை பெறும் என்று என்னால் உறுதியளிக்க முடியும் என்றார் தொற்றுநோய் மருத்துவ நபுணர் Dr ஜேக்கப் ஜான். ஆரோக்கியம் என்பது மட்டுமே தேசத்தின் வளர்ச்சிக்கான நடவடிக்கை அல்ல, ஆனால், அதுவும் வளர்ச்சிக்கு ஒரு காரணமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் ரூபெல்லாவுக்கு எதிரான போராட்டம் என்னும் தலைப்பிலான மெய்நிகர் கருத்தரங்கிற்கு ரோட்டரி மாவட்டம் 3232 ஏற்பாடு செய்திருந்தது. இதில் 30க்கும் மேற்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த ரோட்டரி உறுப்பினர்கள், இன்னிர்வீல் சங்க உறுப்பினர்கள், ரோட்ராக்டர்கள் மற்றும் இன்டராக்டர்கள் பங்கேற்றனர். இக்கருத்தரங்கில் பேசிய தட்டம்மை மற்றும் ரூபெல்லாவை ஒழிப்பதற்கான இந்திய நிபுணர்கள் குழுவின் தலைவரும், வேலூர் ரோட்டரி சங்க (RID 3231) உறுப்பினருமான டாக்டர் ஜேக்கப் ஜான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ரூபெல்லா அல்லது ஜெர்மன் தட்டம்மை என்று சொல்லப்படும் நோய் பெரிதாக எந்த பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடியது அல்ல. ஆனாலும் முதன் முறையான கர்ப்பிணிப் பெண்களுக்கு இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டால் அவர்களுக்கு 90 சதவீதம் குறைபாடுகள் உள்ள குழந்தைகள் பிறக்க வாய்ப்புள்ளது.

ரூபெல்லா வைரஸ் தொற்றால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து கரூர், TNPL பொதுப்பள்ளியைச் சேர்ந்த ஒரு மாணவர் கேட்டபோது அதற்கு விளக்கம் அளித்தார் டாக்டர் ஜான். ரூபெல்லா மற்றும் ஜிகா வைரஸ் நஞ்சுக்கொடியைக் கடந்து கருவை பாதிக்கும். மேலும் குழந்தையின் கண்கள், காதுகள், எலும்புகளின் வளர்ச்சியை பாதிக்கும். அதாவது பிறக்கும் குழந்தைகளுக்கு காது கேளாமை, கண்பார்வை குறைபாடு, மனநலவளர்ச்சியில் குறைபாடுகள் ஏற்படும்.

நாம் என்ன செய்யவேண்டும் என்றால் இது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் தடுப்பசி போடாத இளம்பெண்களை அடையாளம் காண்பது மட்டுமே. இந்த திட்டத்தில் மறைந்த PRID யஷ்பால் தாஸ் அதிக கவனம் செலுத்தி வந்ததை அவர் நினைவுகூர்ந்தார். தட்டம்மை மற்று ரூபெல்லாவை முற்றிலுமாக ஒழிப்பதுதான் யஷ்பாலுக்கு நாம் செலுத்தும் சிறந்த அஞ்சலியாகும் என்று RIPE சேகர் மேத்தா குறிப்பிட்டார்.

ரூபெல்லா வரைஸ் தொற்று நோயை 2023ம் ஆண்டுக்குள் ஒழிக்க உலக சுகாதார நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது. இது சாத்தியமே, ஏனெனில் இதற்கான பணிகளில் 95 சதவீதம் ஏற்கெனவே முடிந்துவிட்டன

என்கிறார் Dr ஜான். எம்.ஆர். தடுப்பூசி என்பது ஒருங்கிணைந்த தடுப்பூசி திட்டத்தின் ஒருபகுதியாகும். அனைத்து ரோட்டரி மாவட்டங்களும் தங்கள் பிராந்தியத்தில் வழக்கமான தடுப்பூசி போடுவதற்கான சமூக அணி திரட்டலை மேற்கொண்டால் இந்த நோயை மூன்று ஆண்டுகளில் ஒழித்து விட முடியும் என்கிறார் அவர்.

இலங்கை ஏற்கெனவே இந்த நோயை ஒழித்துவிட்டது. தட்டம்மைக்கான தடுப்பூசி யை முறையாகக் கையாண்டால் அது பாதுகாப்பனது. இந்த தடுப்பூசி போட்டப்பட்ட பின்னர் மக்கள் நோய்வாய்ப்படுவதாக வெளிவரும் செய்திகள் சரியல்ல. நீங்கள் தண்ணீரை ஊசியாகப் போட்டாலும் குழந்தைகளுக்கு நோய் ஏற்படும். எம்.ஆர். தடுப்பூசி யைப் போட்டுக்கொண்டால் அது நோயை ஏற்படுத்தாது. இந்த தடுப்பூசியின் பதில் நடவடிக்கையாக வேண்டுமானால் குழந்தைகளுக்கு இரண்டு நாட்கள் லேசான காய்ச்சல் இருக்க வாய்ப்புண்டு. ஆனால், பயப்படவேண்டியதில்லை என்கிறார் Dr ஜேக்கப் ஜான்.

போலியோ ஒழிப்புக்கான விழிப்புணர்வு பிரசாரம் போல ரோட்டேரியன்கள் ரூபெல்லா குறித்த விழிப்புப் பிரசாரத்தையும் மேற் கொள்ள உறுதியேற்க வேண்டும் என்றார் கருத்தரங்கின் ஒருங் கிணைப்பாளர் PRID P T பிரபாகர். இந்த கருத்தரங்கில் பங்கேற்றுள்ள RIDE மகேஷ் கோட்பாகி, சர்வதேச மானிய உதவி மூலம் இதுவரை ஒரு லட்சத்துக்கு மேலான ஊரகப் பகுதியைச் சேர்ந்த பெண்களுக்கு தட்டம்மை தடுப்பூசி போட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார்.

INPPC தலைவரும் IEAGன் உறுப்பினருமான தீபக் கபூர், 2023ம் ஆண்டுக்குள் ரூபெல்லா வைரஸ் நோயை முற்றிலும் ஒழிப்பதற்கான ரோட்டரியின் செயல் திட்டத்தை விவரித்தார். ரூபெல்லா ஒழிப்புப் பணியில் நளினி பிரபாகர் முக்கிய பங்காற்றியுள்ளார். அவரது முயற்சி யில்லாமல் பிரபாகர் இதுபோன்ற ஒரு நல்ல கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்திருக்க முடியாது என்றும் தீபக் குறிப்பிட்டார்.

தட்டம்மை மற்றும் ரூபெல்லாவுக் கான தடுப்பூசிகள் சில சமயங் களில் அரசின் மருந்து கிடங்குகளிலும், பொது சுகாதார நிலையங்களிலும் பயன்படுத்தப்படாமல் முடங்கிக் கிடக்கின்றன. இந்த தடுப்பூசி போட்டுக் கொள்ள முடியாமல் ஆண்டுக்கு 90 ஆயிரம் பேர் தட்டம்மை நோயால் உயிரிழக்கின்றனர். இவர்களில் பெரும் பாலானவர்கள் குழந்தைகள்.

ரோட்டரி இந்தத் திட்டத்தை கையிலெடுக்க அதிக முன்முயற்சி மேற்கொண்டவர் டாக்டர் ஜான் என்று தீபக் கபூர் குறிப்பிட்டார். ரூபெல்லா வைரஸ் நோய் ஒழிப்பு என்பது கைக்கு எட்டும் தூரத்திலேயே உள்ளது. இதை ரோட்டரி மனதுவைத்தால் எளிதில் செயல்படுத்த முடியும் என்றுகூறி முன்னாள் தலைவர்கள் ராஜேந்திர சாபூ, கல்யாண் பானர்ஜி, முன்னாள் இயக்குநர் சுஷில்குப்தா ஆகியோரை இத்திட்டத்துக்கு Dr ஜான் சம்மதிக்க வைத்ததையும் தீபக் நினைவுகூர்ந்தார்.

ரோட்டரியின் இந்த செயல் திட்டத்தை அப்போது மத்திய சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த J P நட்டாவிடம் தெரிவித்தபோது அவர் அதை வரவேற்றார். கடந்த 2017ம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் தேதி இந்த எம்.ஆர். சிறப்புத் திட்டம் அல்லது "மிஷன் இந்திரதனுஷ்" என்று அழைக்கப்பட்ட இத்திட்டம் தொடர்பாக சுகாதார அமைச்சகமும் ரோட்டரியும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டது. இதற்காக மக்கள் இயக்கத்தை முடுக்கிவிட அரசுக்கு நாங்கள் உதவிகரமாக இருந்தோம். இந்த தடுப்பூசியை அரசு மக்களிடம் திணிப்பதற்கு பதிலாக மக்களே தடுப்பூசியை போட்டுக் கொள்ள தாமாக முன்வந்தால் இந்தத் திட்டம் நிச்சயம் வெற்றிபெறும் என்று அவர் மேலும் கூறினார்.

ரோட்டேரியன்கள் மாவட்ட தலைமை மருத்துவ அதிகாரி (CMO) அல்லது நோய்த்தடுப்பு மருத்துவ நிபுணரை சந்தித்து பேசி எம்.ஆர். தடுப்பூசிகளை நடவடிக்கைகளை மேற்



RIPE *சேகர் மேத்தா.*

கொள்ளும் பொது சுகாதார நிலையங் களின் பட்டியலை கேட்டு வாங்கி, குறிப்பிட்ட நாட்களில் தடுப்பூசி போடும் பணிகள் நடைபெறுகிறதா என்பதை உறுதி செய்யவேண்டும். மேலும் அந்தந்த மையங்களில் தடுப்பூசிகள் போதுமான அளவு இருப்பு இருக்கிறதா, செயல்திறன் உள்ளதா என்று சரிபார்க்க வேண்டும். போலியோவை முற்றிலும் ஒழித்து வரலாறு படைக்கும் நிலையில் இருக்கும் நாம், தட்டம்மை, ரூபெல்லா ஒழிப்பிலும் சாதனை படைப்போம் என்றார் தீபக் கபூர்.

நளினி பேசுகையில், எம்.ஆர். தடுப்பூசி ஒரு முறை போடப்படும் தடுப்பூசி. பெண்கள் முதல் குழந்தையை கருத்தரிப்பதற்கு முன்பு அவர்களுக்குப் போடப்பட வேண்டும். ஆனால், பல பெற்றோர்களும், பெண்களும் இதை சரிவரப் புரிந்து கொள்வதில்லை. இது குறித்து ரோட்டோரியன்கள், கல்லூரிகளுக்குச் சென்று பெண்களிடம் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றார். திருமண மண்டபங்கள் மணப் பெண்ணிடமிருந்து ரூபெல்லா போட்டுக்கொண்டதற்கான சான்றிதழை கேட்டுப்பெறலாம் என்று பிரபாகர் யோசனை தெரிவித்தார்.

சென்னை கிங் மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் தொற்று நோய் பிரிவில் துணை இயக்குநராக உள்ள Dr நளினி ராமமூர்த்தி, ரூபெல்லா தடுப்பூசி பற்றியும் அதை போட்டுக் கொள்ளாமல் இருப்பதால் ஏற்படும் விளைவுகளையும் விளக்கிப் பேசினார். ■

இளைஞர்கள் திறன்களை மேம்படுத்தி கொள்ளவேண்டும்: RIPE சேகர் மேத்தா

V முத்துக்குமரன்

கொரோனா நோய்ப் பரவல், பிற காரணங்களால் ஆயிரக்கணக்கான மக்கள் தங்களுடைய வேலைகளை இழந்துகொண்டிருக்கிற நேரத்தில், மாணவர்கள், இளைஞர்களுக்குத் தேவையான திறன்களை வழங்கும் இணையக் கூட்டங்களை நடத்துவது தான் காலத்தின் தேவை, அது தேசியக் கல்விக் கொள்கை 2020 உடனும் இணங்குகிறது என்றார் RIPE சேகர் மேத்தா. இளைஞர்கள் தங்களுடைய திறன்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும், இதற்கான தேவையை நாம் அவர்களுக்குப் புரியவைக்கவேண்டும்'' என்று தெரிவித்தார். பள்ளி மாணவர்கள் மற்றும் இளம் தொழில் வல்லுனர்களுக்காக RID 3131 நடத்திய "தொழில் முனைவுக் கல்வி இணையக் கருத்தரங்குகள்" என்ற இணைய நிகழ்ச்சிகள் தொடரின் நிறைவுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு பேசினார். இந்த நிறைவுக் கூட்டத்தை RID 3292ன் ரோட்டரி நேப்பாள எழுத்தறிவுத் திட்டம் இணைந்து வழங்கியது.

நம்முடைய மக்கள் தொகை மிகப் பெரியது, திறன் மிக்க சேவைகளின் தேவையும் மிகப் பெரியது, ஆனாலும், மாணவர்களில் ஐந்து சதவிகிதத்தினர்தான் தொழில் சார்ந்த பயிற்சி பெறுகிறார்கள். சிறிய, ஆனால் கூடுதலாக முன்னேறிய நாடாகிய கொரியாவில் 90 சதவிகித மாணவர்கள் திறன் பயிற்சி பெறுகிறார்கள். ஜெர்மனியைப் போன்ற நன்கு முன்னேறிய நாட்டில் கூட, 50 சதவிகிதத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் தொழில் சார்ந்த பயிற்சி பெறுகிறார்கள் என்றார் அவர். ஒரு கணக்காளர்

RIPE *சேகர் மேத்தா.*

Rtn *ப்ரதீப் வாக்.*

தேவைப்படுகிறார் என்றால், 100க்கும் மேற்பட்டவர்கள் அந்த வேலைக்கு விண்ணப்பம் போடுகிறார்கள். ஆனால், அவர்களில் 10 பேர்கூட அந்த வேலைக்குத் தேவையான சரியான திறன்களுடன் தங்களுடைய அறிவை மேம்படுத்திக் கொண்டிருக்கமாட்டார்கள் என்று அவர் வருத்தத்துடன் குறிப்பிட்டார்.

இளைஞர்களுக்குச் சரியான திறன் பயிற்சி வழங்கப்பட்டால், இந்தியாவில் சிறு தொழில் நிறுவனங்கள் நன்கு செழித்து வளர்வதற்கான சாத்தியம் உள்ளது என்று மேத்தா விளக்கினார். ரோட்டரி இந்தியா 30,000 கைம் பெண்கள், ஒற்றைத் தாய்மார்களுக்குத் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை நடத்திவருகிறது. இதில் 6,000 பெண்கள் அப்போலோ மெட்ஸ்கில்ஸ் மூலம் பயிற்சி பெற்று வருகிறார்கள். இவர்களுக்கு இரண்டு மாத இணையப் பயிற்சியும், பின்னர், ஒரு மாதச் செய்முறைப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. அதன்பிறகு, பயிற்சியாளர் அவர்களைப் பணிக்குச் சேர்த்துக்கொள்வார்.

PDG தீர்த்மன் சகியா மற்றும் IPDG கிரண் லால் ஷ்ரேஸ்தா ஆகியோரின் கீழ் இயங்கிவரும் ரோட்டரி நேப்பாள எழுத்தறிவுத் திட்டம், இந்த இமாலய நாட்டில் முழு எழுத்தறிவைச் சாதிக்கும் தன்னுடைய பயணத்தில் நெடுந்தொலைவு வந்துள்ளது என்றார் அவர். PDG மொகம்மது ஃபைஜ் கிட்வாய், பாகிஸ்தானில் எழுத்தறிவுத் திட்டங்களை முழுப்பொறுப்புடன் நிறைவேற்றிவருகிறார் என்றும் தொடர்ந்து குறிப்பிட்டார்.

மேற்கத்திய நாடுகளின் பள்ளிக் கல்வி அமைப்பை ஆராய்ந்தால், தொடக்கப் பள்ளிகளிலிருந்தே தொழில்முனைவுக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இணையக் கருத்தரங்குகளின் வழியாக மாணவர்களுக்குக் கற்றுத்தரக்கூடிய திறன்களை நாங்கள் அடையாளம் காண்கிறோம். இவற்றைக் கற்றுக்கொள்வதன்மூலம் மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை பெருகுகிறது", என்றார் RID 3131 பன்னாட்டுச் சேவை மாவட்ட வழிகாட்டி பிரதீப் வாக்.

RID 3131–DLCC சுபோத் மல்பானி, PDG பிரமோத் ஜெஜூரிகர், மாவட்ட எழுத்தறிவு இயக்குநர் தீபா பாக்வத், IPDG திரன் தத்தா, RID 3040, PDGகள் சந்து அகர்வால், தீர்த்மன் சகியா, கிரண் ஷ்ரேஸ்தா மற்றும் முகம்மது கிட்வாய் மற்றும் கியூபிக்ஸ் டெக் தலைவர் Rtn நிதின் நாயக் ஆகியோர் இதில் பங்கேற்றார்கள்.■

அறக்கட்டளை வழியாக, வருங்காலத்தில் முதலீடு செய்யுங்கள்

1870களின் தொடக்கத்தில், ஓர் அறிவாளி தன்னுடைய ஆய்வகத்தில் கடுமையாக உழைத்தார், தொழில்நுட்பத்தின்மூலம் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கம் அவரைத் தூண்டியது. பல தோல்வி முயற்சி களுக்குப்பிறகு, 1880ல் தாமஸ் எடிசன் பெரிய அளவில் தயாரிக்கக்கூடிய ஒரு புதிய ஒளி விளக்கைக் கச்சிதமாக உருவாக்கிவிட்டார்.

இந்த வெற்றிக்கு முன்னால் அவர் 10,000 முயற்சிகளில் தோற்றுப் போயிருக்கிறார் என்பதை யாரோ அவருக்குச் சுட்டிக்காட்டினார்கள். அதற்கு அவர் சொன்ன பதில், "நான் தோற்கவில்லை, வேலை செய்யாத 10,000 வழிகளைக் கண்டறிந்திருக்கிறேன், அவ்வளவுதான்!"

எடிசனைப்போலவே, ரோட்டரி அறக்கட்டளையும் "இன்னும் மேம்பட்ட ஓர் உலகம்" என்கிற ஒரு நோக்கத்தால் தூண்டப்பட்டுள்ளது. நாமும், எந்தப் பின்னடைவுகள் வந்தாலும் உறுதியுடனும் படைப்பூக்கத்துடனும் இருக்கிறோம்.

இந்த ஆண்டின் முற்பகுதியில், நம்முடைய முக்கியமான இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வழங்கல் செயல்பாடு களைத் தாற்காலிகமாக நிறுத்தவேண்டியிருந்தது. காரணம், இளம்பிள்ளைவாதத் தடுப்புத் திட்டத்தால் கோவிட்-19 நோய் பரவிவிடக்கூடாது. ஆகவே, நாம் மாறிக்கொண்டோம்: ரோட்டரி கட்டமைக்க உதவிய இளம்பிள்ளைவாத-எதிர்ப்பு உள்கட்டமைப்பு, பல ஆபத்துக்குள்ளாகக்கூடிய நாடுகளில் கோவிட்-19 எதிர்வினைக்கு உதவுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. இதற்குமுன் எபோலா, மஞ்சள் காய்ச்சல் மற்றும் ஏவியான் ஃப்ளூ பரவலின்போதும் நாம் இதைச் செய்துள்ளோம்.

நம்முடைய பன்னாட்டு நல்கைகள் மாதிரியின் வெற்றி மிகத் தெளிவானது. 2013–14ல் இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்ட போது, அறக்கட்டளை $47 மில்லியனுக்குமேல் மதிப்புள்ள 868 நல்கைகளை வழங்கியது. 2019–20ம் ஆண்டுவாக்கில், அங்கீகரிக்கப்பட்ட நல்கைகளின் எண்ணிக்கை 1,350ஆக உயர்ந்துள்ளது, அவற்றின் மதிப்பு $100 மில்லியனுக்கு மேல்.

நல்கைகளின் எண்ணிக்கை 50 சதவிகிதத்துக்குமேல் உயர்ந்துள்ளது, நிதியளவு 123 சதவிகிதம் உயர்ந்துள்ளது, அதே நேரத்தில், இதற்கு உதவுகிற ஆண்டு நிதிப் பங்களிப்புகள் வெறும் 5 சதவிகிதம் தான் உயர்ந்துள்ளன, இது கவலை அளிக்கிறது.

நம்முடைய நிதித் தேவைகளை நிறைவு செய்வதற்காக ஒன்றாகப் பணியாற்றவேண்டும். அன்பின் செய்தி கேட்கப்படவேண்டுமென்றால், அதை அனுப்பவேண்டும்'' என்றார் அன்னை தெரசா. ஒரு விளக்கு தொடர்ந்து எரியவேண்டுமென்றால், அதில் நாம் எண்ணெயைத் தொடர்ந்து ஊற்றவேண்டும்.

K R ரவீந்திரன்
அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்

ரோமுக்கு வரும்போது...

ஹாங்க் சர்டின்

12 ஜூன் முதல் 16 ஜூன்வரை நடைபெறுகின்ற ரோட்டரி பன்னாட்டு மாநாட்டுக்காக நீங்கள் தாய்பெய்-க்கு வரும்போது, உள்ளூர் மக்களிடையே நல்ல பெயர் வாங்குவதற்காகவும், உங்களையும் அறியாமல் அவர்களைக் காயப்படுத்திவிடாமலிருப்பதற்காகவும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டிய ஒழுங்குமுறைக் குறிப்புகள் இதோ.

அவர்களுடைய பாரம்பரியமான வரவேற்கும் முறையாகிய தலையை மெல்லச் சாய்ப்பதையும் நீங்கள் பின்பற்றலாம். பிஸினஸ் கார்ட்களை பரிமாறிக்கொள்ளும் போது உங்கள் அட்டையை இரண்டு கைகளாலும் வழங்குங்கள். இன்னொருவரிட மிருந்து அட்டையைப் பெற்றுக்கொள்ளும்போது, சட்டென்று அதைச் சட்டைப்பையில் போட்டுக் கொள்ளாதீர்கள், அட்டையை இரண்டு கைகளாலும் பிடித்துச் சிறிது நேரம் படியுங்கள். இதன் பொருள், அந்த மனிதருக்கும் அவருடைய அட்டைக்கும் நீங்கள் உங்களுடைய முழுக் கவனத்தை அளிக்கிறீர்கள்.

தைவானிய மக்கள் "டோஸ்ட்"களைப் பரிமாறிக்கொள்வதை மிகவும் விரும்புகிறவர்கள். ஒரு பாரம்பரிய "டோஸ்ட்", உங்களுடைய கோப்பையை இரு கைகளாலும் பிடித்தபடி நிகழ்த்தப்படுவதாகும். நீங்கள் உங்களுடைய நண்பரை ஏதேனும் ஒரு பானம் அருந்துவதற்கு அழைக்கிறீர்கள், அவர்கள் தங்களுடைய கோப்பையை உயர்த்திப் பிடிக்கிறார்கள், நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் நேருக்கு நேர் பார்க்கிறீர்கள், பிறகு ஒன்றாகக் குடிக்கிறீர்கள்.

யாராவது கையில் கோப்பையுடன் உங்களை அணுகி கன்பெய்! அல்லது ஹொடாலா! என்றால், அது முழுக்கக் குடியுங்கள்! என்று சொல் வதற்குச் சமமாகும். அப்போது நீங்கள் உங்கள் கோப்பையில் உள்ள பானத்தை முழுவதுமாகக் குடித்துவிடவேண்டும்.

நீங்கள் மது அருந்த விரும்பா விட்டால், மென் பானம் அல்லது தேநீருடன் டோஸ்டிங்கில் கலந்துகொள்ளலாம், அது முற்றிலும் ஏற்கப்படுகிறது. உங்களை விருந்துக்கு அழைப்பவர்கள், நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும், வரவேற்கப்படுவதாக உணரவேண்டும் என்று விரும்புவார்கள்.

மேலும் விபரங்களுக்கு convention.rotary.org
வலைதளத்தில் பாருங்கள்

Rotary PEOPLE OF ACTION

கொவிட்-19, மழை, வெள்ளத்தை கடந்து மும்பை ரோட்டரியின் சமுதாயப் பணி

ரஷீதா பகத்

ரோட்டேரியன்கள் ஏதாவது ஒரு திட்டத்தைச் செயல்படுத்த எண்ணி அதற்கான இலக்கை நிர்ணயித்துவிட்டால் இடையில் எத்தனை இடையூறுகள் வந்தாலும் அவற்றை தகர்த்து வெற்றிக்கொடியை நாட்டுவார்கள். இதை ரோட்டரி மாவட்டம் 3141ஐச் சேர்ந்த மும்பை ரோட்டரி சங்கம் மீண்டும் நிரூபித்துள்ளது. கொரோனா தொற்று பரவலுக்கு இடையிலும் மும்பையிலுள்ள வேறு சில சங்கங்களுடன் இணைந்து ஒரு மிகப் பெரிய திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளனர்.

மகாராஷ்டிர மாநிலம், பால்கர் மாவட்டத்தில் உள்ள 752 ஜில்லா பரிஷத் பள்ளிகளிலும் கைகழுவும் நிலையங்கள் அமைக்கும் சவாலான திட்டத்தை செயல்படுத்த ரோட்டரி மாவட்டம் 3141ன் வின்ஸ் கமிட்டி 2018 இல் தீர்மானித்தது. இத்திட்டத்துக்கு 'தால்' (Dhaal) என்று பெயரிடப்பட்டு மொத்தம் 1142 கை கழுவும் நிலையங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டது. மொத்தம் உள்ள 752 பள்ளிகளில் 600 பள்ளிகளில் கை கழுவும் நிலையங்களை அமைக்கும் பணி மும்பை ரோட்டரி சங்கத்திடம் வழங்கப்பட்டது. மிகவும் பழமைவாய்ந்த மும்பை ரோட்டரி சங்கம், தங்களது செல்வாக்கினால் ரூ.1.93 கோடி (அதாவது 2,64,465 அமெரிக்க டாலர்) சர்வதேச மானிய நிதியுதவியை பெற்றது. இதையடுத்து 775 கைகழுவும் நிலையங்கள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. பாம்பே சீக்கோஸ்ட், பாம்பே வெஸ்ட், மும்பை காட்கோபர் மற்றும் மும்பை திவஸ் ஆகிய சங்கங்களும் இந்தப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டன. இவர்களுக்குத் தேவையான தளவாட சாமான்கள் போக்குவரத்துக்கான ஏற்பாடுகளை பால்கர் ரோட்டரி சங்கம் அளித்தது என்கிறார் ரோட்டரி 3141 மாவட்டத்தின் மாவட்ட ஆளுநராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சந்தீப் அகர்வாலா. இந்த திட்டத்தைச் செயல்படுத்தும் மும்பை ரோட்டரி சங்கம் தங்கள் பங்காக கூடுதலாக ரூ.34.5 லட்சம் நிதி திரட்டியது. இந்த திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.2.27 கோடியாகும்.

இந்த திட்டம் RIPE சேகர் மேத்தாவால் கடந்த ஜூன் மாதம் திறக்கப்படுவதாக இருந்தது. ஆனால், கொரோனா வைரஸ் தாக்குதல், இப்படி எங்களை தடம்புரள வைக்கும் என்று யார் எதிர்பார்த்தார்கள். வைரஸ் பரவல் காரணமாக ஏற்பட்ட பொது முடக்கத்தால் கைகழுவும் நிலையங்களை வடிவமைத்து தயாரித்து, அவற்றை கொண்டு செல்வதில் சில இடர்பாடுகள்

ஏற்பட்டன. கொரோனா வைரஸ் பாதிப்பின் தாக்கம் அதிகரித்த நிலையில் தொழிலாளர்கள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் மக்கள் நடமாட்டத்துக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக ஜில்லா பரிஷத் பள்ளிகளில் திட்டமிட்டபடி பணியை முடிக்க முடியவில்லை. ஆனாலும் நாங்கள் சின்ன சின்ன வேலைகளுக்கு தேவையான அனுமதிகளைப் பெற்று அவற்றை செய்து வந்தோம். அதன் பின் பருவமழை தீவிரமடைந்து வெள்ளம் வந்தது. இதனால் பணியை தொடர முடியுமா என்ற அச்சம் எங்களுக்குள் எழுந்தது என்றார் சந்தீப் அகர்வாலா.

ஆனால், ரோட்டேரியன்கள் சிறிதும் மனம் தளர்ந்துவிடாமல் காரியத்திலேயே குறியாக இருந்தனர். வெள்ள நிலைமையையும் மீறி படகுகளில் பிரத்யேகமாக தயாரிக்கப் பட்ட ஹேண்ட் வாஷ் சாதனங்கள் மற்றும் தண்ணீர் தொட்டிகள் சில பள்ளிகளுக்கு கொண்டு செல்லப்பட்டு நிறுவப்பட்டன.

இந்தத் திட்டத்திற்கு முன்பே மும்பை ரோட்டரி சங்கம் தங்களது சிறப்பு திட்டமான 'ஜல் ஜீவன்' திட்டத்தைச் செயல்படுத்தியது. இதன் முக்கிய நோக்கம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தரமான, பாதுகாப்பான குடிநீர் வழங்குவது. இந்தத் திட்டத்தின் கீழ் 50க்கும் மேலான கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. சுயஉதவிக்குழுக்கள், பஞ்சாயத்துக்கள் உள்ளிட்டவற்றுக்கு குறைந்த கட்டணத்தில் தானியங்கி தண்ணீர் வழங்கும் கருவிகள் (Water ATMs) வழங்கப்பட்டன என்று அகர்வால் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டது. யுனிசெப் நிறுவனம், சில கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு திட்ட நிதியுதவி மூலம் 2,000 ஜில்லா பரிஷத் பள்ளிகளில் இத்திட்டத்தை நிறைவேற்றியிருந்தனர். மீதமுள்ள 752 பள்ளிகளில் இத்திட்டம் நிறை வேற்றப்படாமல் இருந்தது. இதைத் தான் ரோட்டரி மாவட்டம் 3141ன் கீழ் உள்ள மும்பை ரோட்டரி சங்கம், பிறசங்கங்களின் உதவியுடன் செயல்படுத்தியது. முதலில் கை கழுவும் சாதனத்தை தயாரிக்க எவ்வளவு செலவாகும் என்று கணக்கிடப்பட்டது. மேலும் ஸ்டெயின்லஸ் ஸ்டீலில் (எஃகு தகடுகள்) தயாரிக்கப்பட்ட சாதனங் களை நிறுவலாம் எனில் அதற்கு அதிகம் செலவாகும் என்பதோடு, அதை பெரும்பாலான பள்ளிகள் விரும்பவில்லை. மேலும் அவை திருட்டுப்போகவும் வாய்ப்பிருந்தது. எனவே மாற்று ஏற்பாடாக இலகுவான, ஆனால், தரமான பொருள்களைக் கொண்டு கைகழுவும் சாதனங்களை தயாரிக்க முடிவு செய்யப்பட்டது என்றார் சந்தீப் அகர்வாலா.

இந்த நிலையில் 2019–20 ஆம் ஆண்டுக்கான வின்ஸ் கமிட்டி வன்பொருள் தயாரிப்பாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களான நீல்கமல் தொழிற்சாலை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு கைகழுவும் சாதனங்கள் நிறுவும் திட்டத்தை நிறைவு செய்தோம் என்கிறார் முன்னாள் சங்கத் தலைவர் விஜய் ஜாட்டியா. மாணவர்களுக்கான பாடத்திட்டத்தை யுனிசெப் வகுத்துக் கொடுத்தது. கைகழுவும் நிலையங்களை ஏற்படுத்துவதன் அவசியம், அவற்றை எப்படி பயன்படுத்த வேண்டும், பருவ வயது மாணவிகள் மாதவிடாய் காலத்தில் எப்படி சுகாதாரத்தை பேணுவது என்பது குறித்து கொவிட்-19 நெருக்கடி காலம் முடிந்து பள்ளிகள் திறக்கப்பட்டதும் நாங்கள் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்குப் பயிற்சி அளிப்போம் என்றார் அவர்.

யுனிசெப் மற்றும் எங்கள் கூட்டாளிகளுடன் கலந்து ஆலோசித்த பின், நீல்கமல் நிறுவனத்தின் ஆலோசனையின் பேரில் மும்பை ரோட்டரி சங்கம் கைகழுவும் சாதனத்தை வடிவமைத்தது. குறைந்த செலவில், நீடித்து உழைக்கும் வகையில் இலகுவாக தயாரிக்கப்பட்ட இந்த சாதனத்துக்கு பயனாளிகளிடையே மிகுந்த வரவேற்பு இருந்தது என்கிறார் சந்தீப் அகர்வாலா.

மேலும் யுனிசெப் நிறுவனம் 25 மாணவர்களுக்கு ஒரு தண்ணீர் குழாய் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது. இதையும் நாங்கள் உறுதிசெய்தோம். பல பள்ளிகளில் பாதுகாப்பான குடிநீர் கிடையாது என்பது தெரியவந்ததால் அந்த திட்டத்தையும் நிறைவேற்ற நாங்கள் முடிவு செய்தோம்.

வின்ஸின் முக்கிய நோக்கம்

வெள்ளத்தின் போது படகில் கை கழுவும் வசதிகளை பள்ளிகளுக்குக் கொண்டு சேர்க்கப்படுகின்றன.

நடத்தையில் ஒரு மாற்றத்தை கொண்டு வருவதாகும். பள்ளிகள் மூடப்பட்டிருந்தாலும் கைகழுவும் சாதனங்களை எப்படி பயன்படுத்த வேண்டும், அதன் பயன்பாடு என்ன என்பது குறித்து பள்ளியின் நிர்வாகக் கவுன்சில்களுக்கு நாங்கள் பயிற்சியும் விளக்கங்களும் அளித்தோம். இந்த பள்ளிகளின் முதல்வர்கள் கைகழுவும் சாதனங்கள் நிறுவப்பட வேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்ததுடன் இதற்காக பள்ளிகளைத் திறந்து ஆசிரியர்களை பயிற்சிக்காக அழைத்திருந்தனர் என்கிறார் சந்தீப் அகர்வாலா.

இத்திட்டம் கொரோனா வைரஸ் பரவலுக்கு முன்பாகவே தயாரிக்கப் பட்டது. ஆனால், கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கையாக கைகழுவுதல் ஒரு தொடர் செயலாக இருந்து வருவதை அடுத்து கைகழுவும் திட்டம் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. இத்திட்டம் விரைவாக நிறை வேற்றப்பட்டதற்கு ரோட்டேரியன்கள் சித்தார்த்பீம்ராஜ்கா, அபிநவ் அகர்வால் மற்றும் அபிஷேக் சராப் ஆகியோரே முக்கிய காரணம். அதற்காக அவர் களுக்கு நன்றிசொல்ல கடமை பட்டி ருக்கிறேன். மேலும் கைகழுவும் சாதனங்கள், குடிநீர் தொட்டிகள் ஆகியவற்றை பள்ளிகளுக்கு கொண்டு செல்ல போக்குவரத்து ஏற்பாடு

மேலும் ஸ்டெயின்லஸ் ஸ்டீலில் (எஃகு தகடுகள்) தயாரிக்கப்பட்ட சாதனங்களை நிறுவலாம் எனில் அதற்கு அதிகம் செலவாகும் என்பதோடு, அவை திருட்டுப்போகவும் வாய்ப்பிருந்தது.

DGN சந்தீப் அகர்வாலா

செய்த பால்கர் ரோட்டரி சங்கம் வழங்கிய ஆதரவுக்கும், சாதனங்களை நிறுவ உதவிய 'சாக்ரெட்' தொண்டு நிறுவனத்துக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார் சந்தீப் அகர்வாலா.

இந்த நேரத்தில் ரோட்டேரியன் திலிப் பிரமல் மற்றும் VIP இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் பங்களிப்பையும் சிறப்பாக குறிப்பிட வேண்டும். சுமார் 70 பள்ளிகளில் கைகழுவும் சாதனங்களை நிறுவும் பொறுப்பு ஒரு சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், பல்வேறு சவால்களால் இவற்றை பூர்த்தி செய்ய முடியவில்லை.

இவற்றையும் நாங்கள் விரைவில் நிறைவேற்றுவோம் என்று அகர்வால் மேலும் கூறினார்.

'ஜல் ஜீவன்' திட்டத்தின் கீழ் 60 மாணவர்களுக்கு மேல் உள்ள 146 பள்ளிகளுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கும் திட்டத்தையும் மும்பை ரோட்டரி சங்கம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்துக்காக சர்வதேச மானிய உதவி பெறவும் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. திட்டச் செலவு ரூ.1.5 கோடியாகும் என்றும் சந்தீப் அகர்வாலா தெரிவித்தார்.

ரூ.4.5 கோடிக்கு கொவிட்-19 நிவாரண உதவி

கொல்கத்தா ரோட்டரி சங்கம்தான் முதன் முதலாக தொடங்கப்பட்டது. அதற்கு பிறகு உருவானதுதான் மும்பை ரோட்டரி சங்கம். 91 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட இந்த சங்கம் மிகவும் பழமையானது. இந்த சங்கத்தின் உறுப்பினர்கள் ரூ.4.5 கோடி நிதி திரட்டி கொரோனா தொடர்பான நிவாரண உதவிகளைச் செய்துள்ளனர்.

- மகாராஷ்டிர மாநில அரசு மருத்துவ மனை மற்றும் தன்பாதில் உள்ள மத்திய அரசு மருத்துவமனைக்கு 58 வென்டிலேட்டர்கள் (சுவாசக் கருவிகள்) வழங்கப்பட்டுள்ளன.
- பால்கர் மற்றும் மும்பையில்

நீல்கமல் நிறுவனம் வடிவமைத்த கைகழுவும் வசதி ஒரு பள்ளியில் நிறுவப்பட்டுள்ளது.

உள்ள மருத்துவமனைகளுக்கு 11 டயாலிஸ் சிகிச்சைக்கான கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- பல்வேறு மருத்துவமனைகளுக்கு 5 HFNC கருவிகள் வழங்கப் பட்டுள்ளன. கூடுதலாக 20 கருவிகள் வழங்குவதற்காக சர்வதேச மானிய நிதியுதவி கோரப்பட்டுள்ளது.
- மும்பை, சென்னை, பெங்களூரில் உள்ள மருத்துவமனைகளுக்கு 11,250 தனிநபர் பாதுகாப்பு கவச உடைகள் (PPE) வழங்கப்பட்டுள்ளன.

கைகழுவும் நிலையங்களை ஏற்படுத்துவதன் அவசியம், அவற்றை எப்படி பயன்படுத்த வேண்டும், பருவ வயது மாணவிகள் மாதவிடாய் காலத்தில் எப்படி சுகாதாரத்தை பேணுவது என்பது குறித்து மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்குப் பயிற்சி அளிப்போம்.

விஜய் ஜாட்டியா
முன்னாள் தலைவர், RC பாம்பே.

- வீடற்றவர்கள், தினக்கூலிகள், புலம்பெயர் தொழிலாளர்கள் ஆகியோருக்கு கடந்த செப்டம்பர் மாதம் வரை 16.5 லட்சம் உணவுப்பொட்டலங்கள் வழங்கப் பட்டுள்ளன. ரோட்டேரியன்களால் இயக்கப்படும் சமையலறை களிலிருந்து உணவு தயாரிக்கப் பட்டு தினமும் சராசரியாக 30,000 உணவுப்பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.
- பல்வேறு காவல் நிலையங்களில் காபி, தேநீர் வழங்கும் தானியங்கி இயந்திரங்கள் நிறுவப்பட்டன.
- டாடா நினைவு மருத்துவமனைக்கு ரூ.20 லட்சம் மதிப்பில் 2,500 கொவிட்-19 பரிசோதனைக் கருவிகள் வழங்கப்பட்டன.
- அகில இந்திய அளவில் இலவச அழைப்பு தொலைபேசி எண்கள் மூலம் 600-க்கும் மேலான பயிற்சி பெற்ற தன்னார்வலர்களைக் கொண்டு மனநிலை பாதிக்கப் பட்ட அழைப்பாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந்த எண் மூலம் உதவி கேட்டவர்களுக்கு இந்தியாவில் எங்கிருந்தாலும் அவர்களுக்கு ரேஷன் உணவுப்பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டன.
- மாலேகானில் ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 40,000 பொட்டலங்கள் உப்புமா மற்றும் போஹா உணவு விநியோகிக்கப்பட்டன. மும்பையிலிருந்து நான்கு மணி நேர பயணத்தில் உள்ள இந்த இடத்துக்கு அனுப்பிவைக்கப் பட்டது. இவை தவிர மே மாதம் 25ம் தேதி வரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட சமைத்த உணவுப் பொட்டலங்களும் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.
- மும்பையில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளுக்கு 1,150 N–95 முகக்கவசங்கள், டிஜிட்டல் முறையிலான உடல் வெப்பநிலை அளவீட்டு கருவிகள், ஆக்ஸிமீட்டர்கள் வழங்கப்பட்டன.
- மும்பையின் சேரிப் பகுதியில் உள்ள சமூக கழிப்பறைகளை பராமரித்து வரும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு 1,200 முகக் கவசங்கள், முகத்தை பாதுகாக்கும் கேடயங்கள் மற்றும் பல்வேறு அமைப் பினருக்கு கை சுத்திகரிப்பான் திரவங்களும் விநியோகிக்கப் பட்டன. ■

கொரோனாவிலிருந்து மீண்ட டாக்டரின் நினைவலைகள்

ரஞ்சன் தேஷ்பாண்டே

Dr ரஞ்சன் தேஷ்பாண்டே தனது மருத்துவமனையில் ஒரு குழந்தையை பரிசோதிக்கிறார்.

எங்களின் பிரியமானவரும் PRIDயுமான யஷ்பால் தாஸ் மற்றும் தோழரும், ரோட்டரி மாவட்டம் 2981ன் முன்னாள் மாவட்ட ஆளுநருமான V நாகராஜ் இருவரும் கொரோனா தொற்று சிக்கல்கள் காரணமாக அண்மையில் காலமானது அதிர்ச்சியை அளிக்கிறது. மிகவும் ஆபத்தான, உயிர்க்கொல்லியான கொரோனா வைரஸ் அபாயத்தின் பின்னணியில் நான், எனது எண்ணங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நான் தனிப்பட்ட முறையில் எனது நண்பரை இழந்துவிட்டேன். MBBS படிக்கும்போது எனக்கு அவர் வகுப்புத் தோழர். எளிமையான மனிதர். ஒரு சிறிய வாடகைக் கட்டடத்தில் டாக்டர் என்ற வகையில் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்துவந்தார். ஆனால், அவரே கொரோனாவுக்கு பலியாகி விட்டார். கொரோனா தொற்று ஏற்பட்ட அவருக்கு சிகிச்சை அளித்தபோது அவருக்கு பல சிக்கல்கள் ஏற்பட்டன. உரிய சிகிச்சை அளித்த போதிலும் அவரை காப்பாற்ற முடியவில்லை. எனது கற்பனையில்கூட நான் கொரோனாவுக்கு இரையாகிவிடுவேன் என்று ஒருபோதும் நினைத்ததில்லை. ஒரு மருத்துவர் என்ற முறையில் சமூக இடைவெளியைப் பின்பற்றுவது, முழு உடல் கவச உடைகளை அணிவது, அவ்வப்போது கைகளைக் கழுவி சுத்தமாக வைத்திருப்பது என அனைத்து பாதுகாப்பு முறைகளையும் கடைபிடித்து வருகிறேன். குழந்தைகளின் உடல்நிலையை பரிசோதிக்கும்போது பெற்றோருக்கும் அவர்களுக்கும் இடைவெளி இருப்பதை உறுதிசெய்து வந்தேன்.

வயது காரணமாக மருத்துவ மனைக்குச் செல்லவேண்டாம் என்று எனது குடும்ப உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டனர். ஆனால், நான் மருத்துவமனைக்குச் செல் வதை நிறுத்தவில்லை. மிகுந்த எச்சரிக்கையுடன் தினமும் நான்கு மணி நேரம் புறநோயாளிகளை கவனித்து வந்தேன்.

கடந்த ஜூலை மாதம் 8ம் தேதி எனது மனைவி, தொண்டை கரகரப்பாக இருப்பதாகத் தெரிவித்தார். அவருக்கு கரோனா தொற்று அறிகுறி

இருப்பது தெரியவந்தது. அதற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு எனக்கு லேசான தலைவலியும், உடல்வலியும் இருந்தது. எனக்கும் கரோனா தொற்று அறிகுறி இருந்தது. இருவரும் எங்களின் மருத்துவமனையிலேயே அனுமதிக்கப்பட்டோம். எங்கள் மருத்துவமனை கொரோனா தொற்றுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகளில் ஒன்றாக அங்கீகரிக் கப்பட்டிருந்தது. 42 ஆண்டு களுக்கு மேலாக மருத்துவத் துறையில் பணியாற்றிவரும் நான், ஒரு நாள் கூட உடம்பு சரியில்லை என்று விடுமுறை எடுத்ததில்லை.

எனது மகன் Dr கவண், குழந்தை மருத்துவர். மருமகள் Dr பல்லவி. மைக்ரோபயாலஜிஸ்ட். இருவரும் சேர்ந்து உடனடியாக எனக்கு சிகிச்சை அளிக்கத் தொடங்கினர். ஹூப்ளி மற்றும் பெங்களூரில் உள்ள கொரோனா வைரஸ் தொற்றுக்கு நிபுணர்களுடன் அடிக்கடி தொடர்புகொண்டு எங்களுக்கு சிகிச்சை அளித்து கண்காணித்து வந்தனர். நாங்கள் குணமடைந்து வந்த நிலையில் 10வது நாளில் வீடுதிரும்பிவிடுவோம் என்று நினைத்திருந்தோம்.

அன்று பிற்பகல் நான் மிகவும் சோர்வாக இருந்தேன். என்னால் பேசவோ அல்லது நடக்கவோ முடியவில்லை. என் உடலில் ஆக்ஸிஜன் செறிவு குறைய ஆரம்பித்தது. என்னால் மூச்சு விடமுடியாமல் திணற ஆரம்பித்தேன். உடனே எனது மகன் என்னை HRCT ஸ்கேன் மற்றும் ECG எடுக்கும் இடத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். என்னால் ஸ்கேன் இயந்திரம் இருக்கும் இடத்திற்குக்கூட நடந்து செல்லமுடியவில்லை.

C T ஸ்கேன் எடுத்து பார்த்தபோது அதில் சில மாற்றங்கள் தெரிய வந்ததை அடுத்து உடனடியாக நான் ஹூப்ளியில் உள்ள மருத்துவ மையத்தில் மேல் சிகிச்சைக்காக சேர்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அன்று மாலையே நானும் எனது மனைவியும் எங்களின் மருத்துவமனையை விட்டு புறப்பட்டோம். மனைவி வீட்டில் இறங்கிக் கொண்டார். பின்னர் மனைவியும், மருமகளும் எனக்கு கையசைத்து விடைகொடுக்க நான். மேல்சிகிச்சைக்காக புறப்பட்டேன். அப்போது என் மனதில் அவர்களைப் பார்ப்பது இதுதான் கடைசி முறையாக இருக்குமோ என்று தோன்றியது.

ஹூப்ளி மருத்துவ மையத்தில் மேல் சிகிச்சை அளிக்கத் தொடங்கினர். ஆக்ஸிஜன் தொடர்ந்து அளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் மூன்று நாட்களுக்குப் பிறகு என்னுடலில் ஆக்ஸிஜன் செறிவு மீண்டும் குறையத் தொடங்கியது. நான் தீவிரசிகிச்சை பிரிவுக்கு மாற்றப்படலாமோ என்று யோசித்தேன். என்னை ஒருபோதும் வென்டிலேட்டரில் (செயற்கை சுவாசத்தில்) வைக்கக்கூடாது என்று பிரார்த்தனை செய்தேன்.

நிலைமை மேலும் மோசமாகி விடாமல் இருக்க எனது மகன் ஊசிமருந்தை வாங்கினான். அவை ஒவ்வொன்றின் விலை ரூ.40 ஆயிரம். மேலும் எனக்கு அளிக்கப்பட்டு வந்த ஆக்ஸிஜன் அளவும் அதிகரிக்கப் பட்டது. எனக்கு சிகிச்சை அளித்து வந்த மருத்துவர், நுரையீரல் சிகிச்சை நிபுணர் மற்றும் கொரோனா சிகிச்சை நிபுணர்கள் கலந்து விவாதித்து எனக்கு பிளாஸ்மா தெரபி சிகிச்சை செய்ய முடிவு செய்தனர். இந்த சிகிச்சை சிக்கலானது அல்ல, பயப்பட வேண்டாம்.இதைச் செய்துகொண்டால் அடுத்த இரண்டு நாட்களில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்று மருத்துவ நிபுணர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

தேவை எச்சரிக்கை உணர்வு

- உங்களை நீங்களே பாது காத்துக் கொள்ளுங்கள். வெளியே சென்று தனிப்பட்ட முறையில் ஒருவரை சந்திப்பதை தவிர்த்து விடுங்கள். தேவைப்பட்டால் வீட்டில் இருந்தபடியே மெய்நிகர் கூட்டங்களில் கலந்துகொள்ளுங்கள்.
- ஒருபோதும் முகக்கவசம் அணிவதை மறந்து விடாதீர்கள். மூக்கை மறைக்கும் வகையி லான முகக்கவசத்தை அணிந்தவர் களுடன் மட்டும் நேரில் பேசுங்கள்.
- உங்களுக்கு உதவக்கூடிய நபர் நீங்கள்தான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

இதைத் தொடர்ந்து பிளாஸ்மா பின்னர் மருத்துவ நிபுணர்கள் கூறிய படி எனது உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. எனக்கு பிளாஸ்மா தானம் செய்த அந்த நல்ல மனிதர் யார் என்று தெரியவில்லை. அவருக்கு நான் உண்மையிலேயே கடமைப்பட்டிருக்கிறேன். இந்த உலகத்தில் மனிதநேயமுள்ள நல்ல இதயங்களும் இருக்கின்றன என்று நினைத்து அவருக்கு நன்றி செலுத்தினேன்.

எனது உடல்நிலையில் முன்னேற்றம் தொடங்கியதால் நான் நன்றாக தூங்கினேன். நேரே படுப்பது, வலது மற்றும் இடது புறம் திரும்பிப்படுப்பது இயல்பாக இருந்தது. மூச்சுப் பயிற்சி மற்றும் 6 நிமிட நடைப்பயிற்சி மேற்கொண்டுவந்தேன். வைரஸ் நுரையீரலை தாக்கும் என்பதாலும் பிரச்னைகள் அதைச்சுற்றியே இருக்கும் என்பதாலும், ஆக்ஸிஜன் அளவை அவ்வப்போது சோதித்து வந்தேன்.

சரியான நேரத்தில் சிகிச்சை, நல்ல மருத்துவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்கள், உடல்நிலைய சரியாக சோதித்து தேவையான மருந்துகளை கொடுப்பது, தொடர் கண்காணிப்பு ஆகியவை முக்கியமானது. நோயாளி கள் தரப்பில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை மீது நம்பிக்கை வைத்திருப்பது முக்கியம். மேலும் மருத்துவர்கள் கூறும் ஆலோசனை களை முறையாக பின்பற்ற வேண்டும்.

நான் என் உடல்நிலையில் 8 கிலோவை இழந்தேன். பலவீனமாக இருப்பதாக உணர்ந்தேன். மருந்துகள், வழக்கமான சுவாசப் பயிற்சிகள் மற்றும் பிராணாயாமம் இவற்றுடன் சத்தான உணவுகளைச் சாப்பிடவும் எனக்கு ஆலோசனை கூறினார்கள்.

நான் மறுபிறவி எடுத்துள்ளதாகவே நினைக்கிறேன். இது எனக்கு சில பாடங்களை கற்றுக்கொடுத்துள்ளது. வாழ்க்கையில் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தது. முதலில் உங்களை கவனித்துக் கொள்ளுங்கள். உங்களுக்காக சில மணி நேரத்தை செலவிடுங்கள். உங்கள் குடும்பத்தை புறக்கணித்துவிட்டு பிறருக்காக தொடர்ந்து உழைப்பதில் பயனில்லை. குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக நேரத்தை செலவிடுங்கள். உங்களுக்கு என்ன பிடிக்குமோ அதைச் செய்யுங்கள். உங்கள் கனவுகளை நனவாக்குங்கள்.

சமூகத்தில் இப்போதுள்ள நடை முறை விதிகள் தளர்த்தப்பட்டாலும் அவசர நிலை இன்னும் தொடர்வது போல நினைத்து எப்போதும் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருங்கள். மிகவும் அவசியம் என்றால் மட்டுமே வெளியில் செல்லுங்கள். தவறாமல் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை களையும் பின்பற்றுங்கள். உங்கள் உடல்நலத்தில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளுங்கள்.

மற்றவர்களுக்கு சேவை செய்ய கற்றுக்கொள்ளுங்கள். அதேசமயத்தில் உங்களை நீங்கள் புரிந்துகொண்டு உங்கள் குடும்பத்துக்காக வாழுங்கள். மிகுந்த வருத்ததுடனும், கனவுகள் நிறைவேறாமலும் இந்த உலகத்தை விட்டு வெளியேறிவிடாதீர்கள்.

கட்டுரையாளர் ரோட்டரி மாவட்டம் 3170-ஐச் சேர்ந்த மூன்னாள் மாவட்ட ஆளுநர்.

Rotary PEOPLE OF ACTION

கோவிட் மருத்துவ உதவி வண்டி ஓட்டுநர்கள், துணை மருத்துவர்களைப் பெருமைப்படுத்திய RID 3190

ரோட்டரி செய்திக்குழு

RC *சித்தரப்பெட்டா ஆம்புலன்ஸ் ஊழியர்களை கௌரவிக்கின்றனர்.*

கர்நாடகத்தில் கோவிட் நெருக்கடியின் போது சிறந்த சேவையாற்றிய 250 மருத்துவ உதவி வண்டி ஓட்டுநர்கள், துணை மருத்துவர்களை RID 3190 பாராட்டிப் பெருமைப்படுத்தியது. இந்தப் பகுதியில் 65 கோவிட் மருத்துவ உதவி வண்டிகள் இயங்கிவந்ததாக இந்த மாவட்டத்தின் நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சைக் குழு கண்டறிந்தது. அந்த வண்டிகளின் ஓட்டுநர்கள் ஒவ்வொருவருக்கும் "வண்டி ஓட்டும் போராளிகள்" என்ற விருதையும் ரூ.1,000க்கான காசோலை ஒன்றையும் வழங்கத் தீர்மானித்தது. இந்த நோக்கத்துக்காக 33 சங்கங்கள் ரூ.3,75,000 திரட்டின.■

மறைந்த PDGக்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்

V நாகராஜ்
(1998–99)
RI District 2981

அண்ணாமலை
முத்துராமன்
(1992–93) RI District 3000

G ஜெயராவ்
(1983–84)
RI District 3020

சுரேஷ் கஸ்லிவால்
(1984–85)
RI District 3040

ஷரத் ஃபாதக்
(1999–2000)
RI District 3040

நரேஷ் சந்த் ஜெயின்
(2003–04)
RI District 3040

Dr சத்பால் சிங்லா
(1992–93)
RI District 3090

U சூரிய ப்ரகாஷ் பட்
(2003–04)
RI District 3181

M ராமசாமி அய்யர்
(1988–89)
RI District 3211



ரங்கசாமி ராஜா
ராமகிருஷ்ணன்
(1986–87) RI District 3232

Dr D K குப்தா
(1980–81)
RI District 3261

நாராயண் நாயக்
(2016–17)
RI District 3262

அஜய் குமார் தத்தா
(1985–86)
RI District 3291

ஆப்பிரிக்காவில் கூடுதல் திட்டங்களைச் செயல்படுத்துங்கள்: மேத்தா

V முத்துக்குமரன்

இந்தியா முழுவதும் உள்ள ரோட்டரி சங்கங்கள் அடுத்த இரண்டு ஆண்டுகளில் தங்களது உலகளாவிய மானிய திட்டங்களில் குறைந்தது 5 சதவீதத்தை இந்தியாவுக்கு வெளியே செயல்படுத்துமாறும் குறிப்பாக ஆப்பிரிக்காவில் செயல்படுத்துமாறு RIPE சேகர் மேத்தா வலியுறுத்தினார்.

தென்னாப்பிரிக்க அரசுடன் இணைந்து தென்னாப்பிரிக்காவின் ரோட்டேரியன்களுக்கான குடும்ப சுகாதாரம் மற்றும் எய்ட்ஸ் தடுப்பு (RFHA) என்ற அமைப்பு நடத்திய "ரோட்டரி குடும்பத்தினரின் சுகாதார நாட்கள்" (RFHD) என்னும் மெய்நிகர் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசினார். அடுத்த ஆண்டு நான் RI தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு, உலகளாவிய மானியத்திட்டத்தில் குறைந்தது 10 சதவீத திட்டங்கள் இந்தியாவுக்கு வெளியே செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வேன் என்று குறிப்பிட்டார்.

தென்னாப்பிரிக்காவில் அந்த நாட்டு அரசு, தொண்டு நிறுவனங்கள், கார்ப்பொரேட் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதில் முக்கிய பங்கு வகிக்க ரோட்டரி தயாராக இருக்கிறது என்று மேத்தா குறிப்பிட்டார். பல ஆண்டுகளாக RFHA சுகாதாரத்துறையுடன் இணைந்து சிறப்பாகச் செயலாற்றிவருவதை அவர் சுட்டிக்காட்டினார். நிகழ்ச்சியை நடத்த முடியவில்லை.

RFHD என்பது ஆப்பிரிக்காவில் உள்ள 9 நாடுகளில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்படும் முக்கியமான திட்டமாகும். நோய்த் தடுப்பு நடவடிக்கைக்காக மூன்று நாள் மருத்துவ முகாம்கள் நடைபெறும். அப்போது மக்களுக்கு ஹெச்ஐவி/எய்ட்ஸ் போன்ற நோய்கள் உள்ளதா என்று கண்டறியப்படும், மேலும் குழந்தைகளுக்கு வைரஸ் நோய் தாக்காமல் இருக்க தடுப்பூசிகள் போடப்படும். 2011 ஆம் ஆண்டு முதல் 11 மில்லியன் இலவச மருத்துவ முகாம்கள் தனியார் மற்றும் அரசு கூட்டு முயற்சியுடன் நடைபெற்றுள்ளன. இவற்றின் மூலம் 25 லட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர்.

இந்த திட்டத்தை நாளுக்கு நாள் வலுவான திட்டமாக கொண்டு செல்வதற்காக RFHA நிறுவனர் மரியன் பன்ச் மற்றும் தற்போதைய தலைமைச் செயல் இயக்குநர் சூ பேஜட் இருவரையும் மேத்தா பாராட்டினார். ரோட்டரி போலியோ ஒழிப்பில் மட்டும் கவனம் செலுத்தி வரவில்லை. கொரோனா, எச்ஐவி-எய்ட்ஸ் உள்ளிட்ட நோய்களைக்

கட்டுப்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்திவருகிறது என்றார் அவர்.

இந்த ஆண்டு செப்டர் மாதம் நைஜீரியாவை போலியோ தாக்குதல் இல்லாத நாடாக உலக சுகாதார நிறவுனம் அறிவித்து சான்றிதழ் வழங்கியுள்ளது. இதைத் தொடர்ந்து போலியோ இல்லாத ஆப்பிரிக்கா என்பது ஒரு முக்கிய மைல்கல்லாகும். போலியோ ஒழிப்பில் ரோட்டரி சிறப்பு கவனம் செலுத்தி வருவதை இந்திய அரசாங்கம் பாராட்டியுள்ளது.

மிஷன் ஆப்பிரிக்கா

ஆப்பிரிக்காவில் உள்ள ரோட்டரி சங்கங்கள், தங்களது உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று மேத்தா வேண்டுகோள் விடுத்தார். அந்த பிராந்தியத்தில் ரோட்டரியின் வளர்ச்சிக்கு சாத்தியம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். ஆப்பிரிக்காவில் RFHA மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதன் பணி உலகின் இதர பகுதிகளிலும் குறிப்பாக தெற்காசியாவிலும் பிரதிபலிக்க வேண்டும் என்றார் அவர். RFHD இந்தியாவில் இரண்டு ஆண்டுகள் நடத்தப்பட்டது. அதை இப்போது புதுப்பிப்பதுடன் நேபாளம், பாகிஸ்தான், வங்கதேசம் மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்கு படிப்படியாக எடுத்துச் செல்லலாம். ரோட்டரி இன்டர்நேஷனல், உலகம் முழுவதும் கொரோனா தடுப்பு, கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள சர்வதேச மானிய உதவியாக 20 மில்லியன் டாலர் நிதி அனுமதித்துள்ளது. இது தவிர ஒரு முறை பேரிடர் நிவாரண நிதியாக 25,000 டாலர் வழங்கியுள்ளது. நம்மால் சமாளிக்க முடியாத நோய் எதுவும் இல்லை. எதையும் சமாளிப்போம் என்றார் அவர்.

இந்த மெய்நிகர் கருத்தரங்கில் உரையாற்றி பேசிய தென்னாப்பிரிக்க சுகாதார அமைச்சர் டாக்டர் ஜுவேலினி மெகிஸி, அனைவருக்கும் சுகாதாரம் திட்டத்தை ரோட்டரி மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருவதாகவும், மக்கள் சமூகம் சுகாதாரமாக வாழ்வதற்கு வழியேற்படுத்தியுள்ளதாகவும் கூறினார்.

இந்த ஆண்டுக்கான திட்டத்தைச் செயல்படுத்த நேரமின்மையை ஒருகாரணமாக கூறமுடியாது. நாம் இதர சுகாதார திட்டங்கள் மீதும் கவனம் செலுத்துவது அவசியம் என்றார். மருத்துவ நிபுணர்கள், ரோட்டேரியன்கள் மற்றும் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மைய இயக்குநர் டாக்டர் ஜான் பிளான்போர்டு, குளோபல் ரோட்டரி தலைமைச் செயல் இயக்குநர் டாக்டர் இயன் பர்டன், குடும்ப சுகாதாரத்துக்கான செயல்திட்டக்குழு மற்றும் எய்ட்ஸ் தடுப்புத் திட்ட தலைமை செயல் அதிகாரி சூ பேஜட் மற்றும் அரசு அதிகாரிகள், சுகாதாரத்துறை துணை அமைச்சர் டாக்டர் ஜோ பாஹ்லா ஆகியோரும் கருத்தரங்கில் பேசினர்.■

Rotary PEOPLE OF ACTION

புணே காவல் நிலையங்களில் தூய்மைப்படுத்தும் சுரங்கங்கள் நிறுவப்பட்டன

ரோட்டரி செய்திக்குழு

RC புணே கணேஷ்கின்ட், RID 3131, தன்னுடைய கோவிட் உதவிப் பணிகளின் ஒரு பகுதியாக, இந்நகரில் உள்ள சகான், ம்ஹாலுங்கெ காவல் நிலையங்களுக்கு இரண்டு தூய்மைப்படுத்தும் சுரங்கங்களை நன்கொடையாக அளித்தது.

இந்த வசதிகள் ஊழியர்கள், வருகையாளர்களுக்குத் தோலுக்குத் தீங்கு செய்யாத திரவமொன்றின்வழியாக முழு உடல் தெளித்தலை வழங்கி அவர்களைத் தூய்மைப்படுத்தும்.

தொழில் நிறுவனங்கள் நிறைந்த பகுதியில் அமைந்துள்ள சகான் காவல் நிலையத்தில் 70 காவல் குழுவினர் பணியாற்றுகிறார்கள், நாள்தோறும் நூற்றுக்கணக்கான வருகையாளர்கள் இங்கு வருகிறார்கள்.

தலா ரூ 150,000 விலையுள்ள இந்தச் சுரங்கங்களை கோட்கர் எனர்ஜி டைனமிக்ஸ் என்ற உள்ளூர் நிறுவனமொன்று தயாரித்தது.

RC புணே கணேஷ்கின்ட் தலைவர் ராஜேஷ் ஜோஷி காவல் துறை அதிகாரி ஒருவரை கௌரவிக்கிறார்.

அறைக்குள் தெளிக்கும் ஊற்றுகள் அமைந்துள்ளன.

இந்த நிலையங்களில் உள்ள காவல் அலுவலர்கள் நோய்ப் பரவலின்போது ஆற்றிய சேவைக்காக, இந்தச் சங்கம் அவர்களைப் பெருமைப்படுத்தியது. சங்கத் தலைவர் ராஜேஷ் ஜோஷி, அவருடைய மனைவி கௌரி, கோட்கர் எனர்ஜி மேலாண்மை இயக்குநர் அடுல் கோட்கர், அவருடைய மனைவியும் சங்க உறுப்பினருமான அர்ச்சனா ஆகியோர் இந்த விழாவில் பங்கேற்றார்கள்.■

ரோட்டரியின் பன்னாட்டுச் செயல்பாடுகள் ‘‘நல்ல நிலையில்’, ‘‘வலுவான நிதி நிலைமையுடன்’ உள்ளன: ஜான் ஹ்யூகோ

V முத்துக்குமரன்



கொரோனா இருள், உலகுக்கு என்ன ஆகுமோ என்கிற இருண்ட ஊகங்கள், இவற்றுக்கு நடுவில், உலகிலுள்ள மற்றவர்களுக்கு ரோட்டரி காண்பித்துள்ள சில நேர்வித அம்சங்களை என்னால் காண இயலுகிறது. ரோட்டரியின் பன்னாட்டுச் செயல்பாடுகள் நல்ல நிலையில் உள்ளன, நம் நிதி நிலைமை வலுவாக உள்ளது. நம்முடைய 1.2 மில்லியன் ரோட்டரியன்கள் சேவைத் திட்டங்கள், நிதி திரட்டல், தோழமை நிகழ்வுகளைச் செய்யப் புதிய வழிகளைப் பரிசீலித்துப் பார்க்கிறார்கள். மாறுபட்டுச் சிந்தித்துப் புதிய உறுப்பினர்களுக்குப் புதுமைச் சிந்தனையுள்ள சங்க அனுபவத்தை வழங்கவேண்டும், அதன்மூலம் வளர்ச்சியைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும்’’ என்றார் RI பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோ. உலகில் ரோட்டரியின் இப்போதைய நிலையைப் பற்றி RC மெட்ராஸ், RID 3232, நடத்திய இணையக் கருத்தரங்கொன்றில் அவர் இவ்வாறு பேசினார்.

நாம் ரோடராக்டர்களை ரோட்டரிக்கு கொண்டுவர வேண்டும், ஏனெனில், அவர்கள்தான் நம் வருங்காலச் சொத்துகள். ஆனால், எதார்த்தம் என்னவென்றால், 95 சத விகித ரோடராக்டர்கள் ஒருபோதும் ரோட்டரியன்களாக மாறவில்லை என்றார்.

இரண்டாவதாக, உறுப்பினர்களைத் தக்க வைத்துக்கொள்வது, 2–3 ஆண்டுகள் ரோட்டரியில் உள்ளவர்கள் விலகுவதற்கான வாய்ப்புகள் மிகுதி என்று நாம் காண்கிறோம். இந்தியா, கொரியா, தைவான், ஆப்பிரிக்கா, கிழக்கு ஐரோப்பாவில் நம் வளர்ச்சி வலுவாக இருந்தபோதும், US, கனடா, ஆஸ்திரேலியா, UKல் உறுப்பினர் எண்ணிக்கை விரைவாகக் குறைந்துவருகிறது, அங்கெல்லாம் ரோட்டரியன்களின் சராசரி வயதும் தொடர்ந்து உயர்ந்துவருகிறது’’ என்றார் அவர்.

மூன்றாவதாக, கொரோனாவுக்குப் பிந்தைய உலகத்தில், நிதி திரட்டல் நிகழ்வுகளை மெய்நிகர் தளங்களின் வழியாகத் தனித்துவமான வழிகளில் ஏற்பாடு செய்யவேண்டும்’’ என்றார் ஹ்யூகோ, இங்குதான் ரோடராக்டர்கள்

தங்களுடைய யோசனைகளை வழங்கிப் பங்களிக்கலாம் என்றார் அவர்.

இப்போதைய சூழல் காரணமாக, வலுவிழந்த சங்கங்கள் தொடர்ந்து இயங்கச் சிரமப்படலாம், ஆகவே, வலுவான, சுறுசுறுப்பாக இயங்கி வரும் சங்கங்கள் தொழில்நுட்ப, ஆலோசனைச் சேவைகளின்மூலம் அவர்களுக்கு உதவவேண்டும் என்றார் அவர்.

முன்பு எப்போதையும் விட உலகுக்கு ரோட்டரி கூடுதலாகத் தேவைப்படுகிறது என்றார்.

உலகப் பார்வை

டாவோஸ் மன்றத்தில் கலந்துகொண்ட பிறகு, கோவிட் நெருக்கடி விரைவில் முடியப்போவதில்லை என்று அவர் உணர்ந்துகொண்டார், நம்முடைய இயக்க அமைப்புகளை ஒரு புதிய மெய்நிகர் சூழலுக்குச் சிரமமின்றி மாற்றி, அதன்மூலம் புதிய இயல்புக்கு நம்மைத் தயாராக்கக்கூடிய நோய்ப்பரவல் எதிர்வினைச் செயல் படையொன்றை நான் அமைத்தேன்.

மெய்நிகர் பணிக்கு அமைப்பு களைத் தயாரிக்கும்படி RI ஊழியர்களிடம் (RI தலைமையகம், எவான்ஸ்டனில் 575 பேர், ஐரோப்பா மற்றும் தில்லியில் 200 பேர்) அவர் தெரிவித்தார். RIன் IT, பின்னணி அலுவல் பணிகள் புணே, சிட்னி, டோக்கியோ, பிரேசிலிலும் நடை பெறுவதாக அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

1930களில் ஏற்பட்ட பெரும் பொருளியல் வீழ்ச்சிக்குப்பிறகு, வெறும் மூன்றே ஆண்டுகளில் ரோட்டரியின் உறுப்பினர் எண்ணிக்கை ஐந்து சதவிகிதம் குறைந்தது, இது தான் ரோட்டரியின் மிகப் பெரிய சரிவாகும். ஆனால், ஸ்பானிஷ் ஃப்ளூ (1918) முதலான மிகப் பெரிய சோக நிகழ்வுகள், உலகப் போர்கள், பன்னாட்டுப் பொருளாதாரங்களில் நிதி நெருக்கடிகளின்போது, உறுப்பினர் எண்ணிக்கை இழப்பு வெறும் 1–2 சதவிகித வரம்புக்குள் நின்றுவிட்டது.

ரோட்டரியின் உறுப்பினர் எண்ணிக்கையில் வெறும் ஒரு சதவிகிதம் சரிவு வந்தாலும் சரி, ஆண்டுக்கு 800,000 இழப்பை ரோட்டரி சந்திக்கும், ஐந்து சத



RI *பொது செயலாளர் ஜான் ஹ்யூகோ*

விகிதம் சரிவு என்றால், ஆண்டுக்கு 4 மில்லியன் இழப்பாகும்'' என்றார் அவர்.

ஆனால், நிதி நிலைமையைப் பொறுத்தவரை, ரோட்டரி வலுவாக உள்ளது. ஆகவே, கொரோனா புயலை அதனால் சமாளிக்க இயலும் என்று அவர் உறுதி கூறினார்.

உலகெங்கும் கோவிடுடன் தொடர்புடைய திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை நடத்துவதற்காக, பன்னாட்டு நல்கைகள், DDFகள் மற்றும் பேரிடர் எதிர்வினை நிதி வழியாக ரோட்டரி சங்கங்களுக்கு இதுவரை $30 மில்லியன் தொகையை அறக்கட்டளை வழங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட பெரும்பாலான நாடுகளில் கோவிட் கண்காணிப்பு பிறகு தொடர்பு பின்தொடரலுக்கு இளம்பிள்ளைவாத உள் கட்டமைப்பு பயன்படுத்தப்படுவதை அவர் குறிப்பிட்டார். பாகிஸ்தான் மற்றும் ஆஃப்கானிஸ்தானில் (இந்த இரு நாடுகளிலும் இந்த ஆண்டு 125 பேர் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வந்துள்ளது) இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வழங்கல் சில நாள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது, இப்போது அது மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது, நலப் பணியாளர்கள் போதுமான கோவிட் முன்னெச்சரிக்கைகளை எடுத்துக்கொண்டு இதில் ஈடுபடுகிறார்கள்.

பழைய திட்டங்கள்

RC மெட்ராஸ் தலைவர் கபில் S சிடாலே, 1979ல் இந்தச் சங்கமும் RC விட்பி, RID 7070ம் சேர்ந்து நடத்திய முன்னோடித் திட்டமான சிவப்புத் தட்டம்மையை நீக்குதல் திட்டத்தை நினைவுகூர்ந்தார். இந்தத் திட்டத்தின் வெற்றி, 1985ல் இளம்பிள்ளைவாதத்தை நீக்குதல் திட்டத்தின் தொடக்கத்துக்கு நம்மை வழிநடத்திச்சென்றது. அப்போதைய RI தலைவரான MAT காபராஸ் 1987ல் இந்தியாவின் போலியோ ப்ளஸ் பரப்புரைக்கு $2.6 மில்லியன் நல்கையொன்றை அங்கீகரித்தார்.

1944ம் ஆண்டில் தொடங்கி, இந்தச் சங்கம் தத்தெடுத்துள்ள "ரோட்டரி நகர்" என்ற நகர்ப்புறக் குடிசைப்பகுதியிலுள்ள குழந்தைகள் மற்றும் பெண்களுக்குக் கணினிக் கல்வி, தையல் மற்றும் பிற திறன் பணிகளில் பணி சார்ந்த பல பயிற்சி களை இந்தச் சங்கம் வழங்கிவருகிறது. 93 வயதான இந்தச் சங்கம் முந்தைய ஐந்து ஆண்டுகளில் கிராமப்புறப் பகுதிகளில் 1,500 கழிப்பறைகளைக் கட்டியுள்ளது.

35-ஏக்கர் பாய்ஸ் டவுன் சொசைட்டி என்ற சமூகத்தில் 200 மாணவர்கள் உள்ளார்கள், இவர்களுக்குத் தங்குமிடம், உணவு மற்றும் பள்ளி, மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இங்கு ஒரு தொழில்நுட்பப் பயிற்சி மையம் திறக்கப்படும்'' என்றார் சிடாலே. இந்த மையம், $268,000 மதிப்புள்ள ஒரு GG திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ளது.

முன்னாள் தலைவர்களான A K கோபிநாத், K கோபால் ரத்னம், சங்கச் செயலாளர் P B பிரசாத் மற்றும் PDG காம்தர் இந்த நிகழ்வில் பேசினார்கள். DG S முத்துப்பழனியப்பன், DGE J ஸ்ரீதர், PRIDகள் P T பிரபாகர், மிகேல் அஹ்ல்பெர்க் (ஸ்வீடன்), PDGகள் ISAK நாசர், பாபு பெரம், மன்ஜித் சாஹ்னெ, ராஜேந்திர ராய், சந்திரா பாப், S கிருஷ்ணசுவாமி, P T ராம்குமார், ஒளிவண்ணன், A சுப்ரமணியன் மற்றும் A P கண்ணா ஆகியோரும் இதில் பங்கேற்றார்கள்.■

ரோட்டரி குயிலானின் விறுவிறுப்பான 70 ஆண்டுகள்

ஹூமாயூன் தாஜ்

1949ல் ஒரு கதகதப்பான கோடைக்கால மாலை நேரம். கொல்லத்தைச் சேர்ந்த சில மதிப்பு மிக்க தொழிலதிபர்களும், ஒரு டஜன் தொழில் வல்லுனர்களும் ஒன்றுகூடிப் பேசினார்கள், ஒரு யோசனையை விவாதித்தார்கள்.

நம்முடைய நாடு அப்போது தான் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றிருந்தது. அன்றைக்கு அங்கு கூடிப் பேசிய மக்களில் சிலர், ஒரு சேவை மற்றும் தோழமை அமைப்பைப்பற்றிக் கேள்விப்பட்டார்கள். மேற்கில் தொடங்கப்பட்ட அந்த அமைப்பு, அப்போது இந்தியாவில் புகழ் பெற்றுக்கொண்டிருந்தது. அந்த அமைப்பின் பெயர், ரோட்டரி. மருத்துவமனைகள், பள்ளிகளைக் கட்ட உதவுதல், சண்டையால் துன்பப் பட்டுக்கொண்டிருந்த உலகத்தில் உரையாடலின்மூலம் அமைதியைக் கொண்டுவருதல் ஆகியவற்றில் ரோட்டரி பங்கேற்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

இந்த "ரோட்டரியன்கள்", நியாயமாகச் சிந்திக்கிறவர்கள், நேர்மை, ஆளுமை கொண்டவர்கள், அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து நட்பு, தோழமையுடன் சமூக சேவையில் ஈடுபடுவோம் என்று உறுதி எடுத்துக் கொண்டவர்கள். இந்த மனிதர்கள், பிறருக்கு உதவுவதை விரும்பிச் செய்கிறார்கள் என்று தோன்றியது இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட நல்ல மனிதர்களுக்கு இது பிடித்திருந்தது, ஆகவே, குயிலான் ரோட்டரி சங்கம் பிறந்தது. சிந்தனை நிகழ்வுகள் மற்றும் ஆர்வமுள்ள தகவல்தொடர்புகளைத் தொடர்ந்து, 1949 செப்டம்பரில் இந்தச் சங்கம் முறையாகப் பதிவு செய்யப்பட்டது. முன்னாள் இந்திய அரிய நிலங்கள் நிறுவனத்தின் உரிமையாளராக இருந்த தொழிலதிபர் J E A பெரெய்ரா அதன் பதிவுத் தலைவரானார்.

மிக விரைவில், இந்தச் சங்கத்தைத் தொடங்கிய நிறுவனர்கள் சமூக சேவையைத் தொடங்கினார்கள், இவர்களுடைய முதல் திட்டம் 1949லேயே நிறைவேற்றப்பட்டது. அந்தத் திட்டத்தின் நோக்கம், குயிலான் ஏழை இல்லத்துக்கு ஒரு பேருந்து வாங்குவதற்காக குயிலான் நகராட்சிக்கு நன்கொடை அளிப் பதற்காக நிதி திரட்டுதல். அரசு மாவட்ட மருத்துவமனையில் ஒரு ரத்த வங்கியை அமைப்பதற்கும், ஓர் எலக்ட்ரோ கார்டியோகிராஃபைப் பெறுவதற்கும் நிதி வழங்கப்பட்டது.

1962ல், ராஜா சங்கரலிங்கம் சங்கத் தலைவராக இருந்த போது, அனைத்திந்தியக் கலைகள், அறிவியல், தொழில் துறை மற்றும் விவசாயக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது, அப் போதைய கேரள மற்றும் மெட்ராஸ் மாநில ஆளுநர்களான V V கிரி மற்றும் பிஷ்ணுராம் மேதி, மாநில முதலமைச்சரான பட்டோம் தாணு பிள்ளை ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள். இந்த 40 நாள் கண்காட்சியின்மூலம் திரட்டப்பட்ட நிதி, கொல்லத்தில் லால் பகதூர் விளையாட்டு அரங்கத்தைக் கட்டுவதற்காக குயிலான் நகராட்சிக்கு நன்கொடை யாக வழங்கப்பட்டது. இன்றைக்கும் இந்த

RC குயிலான் உறுப்பினர், PDG ஷிரீஷ் கேசவன் அவர்களை கேரள ஆளுநர் ஆரிஃப் முகம்மதுகான் சங்கத்தின் 70ம் ஆண்டு விழா கொண்டாட்டத்தில் வாழ்த்துகிறார்.

விளையாட்டு அரங்கம் இந்த நகரத்தின் ஒரு சிறந்த அடையாளமாக நிற்கிறது.

அறுபதுகளின் பிற்பகுதியில், கொல்லத்தில் உள்ள அரசு மாவட்ட மருத்துவமனைக்குக் கூடுதல் அறைகளும் படுக்கைகளும் மிகவும் தேவைப்பட்டன. அந்நாட்களில் தனியார் நலப் பராமரிப்பு குறைவாகவே இருந்தது, இந்நிலையில் இரண்டு மாடிகளைக் கொண்ட "ரோட்டரி பணம் செலுத்தும் வார்ட்", பன்னிரண்டு தொகுப்பு அறைகளுடன் கட்டப்பட்டது, மருத்துவ மனை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் V V கிரி இந்த வளாகத்தைத் தொடங்கிவைத்தார். இந்த வளாகம், ஒவ்வோர் ஆண்டும் கணிசமான ஒரு தொகையைத் திரட்டுகிறது, இந்தத் தொகை, ஏழைகளுக்கு மருந்துகளை வாங்கவும், "ரோட்டரி பணம் செலுத்தும் வார்டை"ப் பராமரிக்கவும் திரும்பப் பயன்படுத்தப்படுகிறது.

1963ல், புனித அலோய்சியஸ் மேல்நிலைப் பள்ளியில் முதல் இன்டராக்ட் சங்கம் அமைக்கப்பட்டது. குயிலான் இன்னர் வீல் சங்கம் 1967ல் அமைக்கப்பட்டது. 1966ல், இந்தச் சங்கத்தைச் சேர்ந்த பீர் முகம்மது, அப்போதைய RID 320 (கேரளம், தமிழ்நாடு மற்றும் சிலோனைக் கொண்டது) ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1999ல், கொல்லத்தில் IMA ரத்த வங்கியை அமைப்பதற்காக, இந்திய மருத்துவக்கழகத்துடன் இணைந்து ஒரு பொருத்தும் நல்கைத் திட்டம் நிறைவுசெய்யப்பட்டது. இந்த ரத்த வங்கி, இந்த நகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளின் தேவைகளை நிறைவுசெய்கிறது. அடுத்தடுத்த ஆண்டுகளில், S S சமிதி அபய கேந்திரா-வில் சமையலறை மற்றும் குடிநீர் வசதிகளை அமைத்தல் உள்ளிட்ட வேறு பல திட்டங்களுக்காகப் பொருந்தும் நல்கைத் திட்டங்கள் மீண்டும் நிறைவேற்றப்பட்டன.

இந்தி நடிகர்கள் திலிப்குமார் மற்றும் வஹிதா ரஹ்மான் RC *குயிலான் முன்னாள் தலைவர்* A *அப்துல் ரஹிம் மற்றும்* Rtn C V *பாலசந்திரனுடன்.*

இந்தச் சங்கத்தின் நெடுநாள் கனவு, கூட்டங்கள், தோழமைக்காகச் சொந்த வளாகமொன்றை அமைப்பது. இதற்காக, இந்தச் சங்கம் வாங்கிய நிலத்தில் ஓர் இரண்டு மாடிக் கட்டடம் கட்டப்பட்டது. 1994ல் கேரள ஆளுநர் A ராச்சையா இதைத் திறந்து வைத்தார். இங்கு, தரைத்தளத்தில் ஓர் அவைக்களத்துடன் கூடிய ரோட்டரி சமூக மையம் அமைந்துள்ளது.

2011–12ல், கிருஷ்ணன் G நாயர் தலைமையின்போது, மிகச் சிறந்த சேவைத் திட்டங்களுக்காக, சுமார் 1,500 சங்கங்களைக் கொண்ட RI Zone 5ன் "மாற்றத்தை உருவாக்குபவர் விருதை" இந்தச் சங்கம் வென்றது. அதே ஆண்டில், மேற்கு ஆப்பிரிக்க நாடாகிய காம்பியாவிலுள்ள மூன்று கிராமங்களுக்குச் சூரிய ஒளி வசதியை வழங்கும் ஒரு பன்னாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது, வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.

இந்தச் சங்கம் EREY நிலையையும் எட்டியது, அதாவது, அந்த ஆண்டில் ஒவ்வோர் உறுப்பினரும் TRFன் ஆண்டு நிதிக்குக் குறைந்தது 25 பங்களித்தார்கள். இப்போது, இந்தச் சங்கம் ஒரு மிகப் பெரிய கோவிட் உதவித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இதன்படி, அறக்கட்டளையின் ஒரு பொருத்தும் நல்கையின் உதவியுடன், கொல்லம் மாவட்ட மருத்துவமனைக்கு இரண்டு செயற்கை மூச்சுவிடல் கருவிகளும் (வென்டிலேட்டர்கள்) நான்கு சிறுநீரக டயாலிசிஸ் இயந்திரங்களும் ரூ.60 லட்சம் செலவில் வழங்கப்படும்.

இச்சங்கம் DG ஷிரீஷ் கேசவன் உள்பட நான்கு மாவட்ட ஆளுநர்களைப் பங்களித்துள்ளது. இச்சங்கத்தின் முன்னாள் ஆளுநர்கள்: S பீர் முகம்மது, Dr பால் கிறிஸ்டியன், P கோபிநாத பிள்ளை, பேராசிரியர் K உதயகுமார் மற்றும் Dr G A ஜார்ஜ்.

பிப்ரவரி 2020ல், இச்சங்கம் தன்னுடைய 70வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது, கேரள ஆளுநர் ஆரிஃப் முகம்மது கான் இதில் தலைமை விருந்தினராகப் பங்கேற்றார்.

ஆண்டுகள் செல்லச் செல்ல, இந்தச் சங்கம் மிகுந்த ஆர்வத்துடன் பல திட்டங்களைத் தொடர்கிறது, அதன்மூலம் இன்னும் இளைய சங்கங்கள், ரோட்டரியன்களை ஊக்குவிக்கிறது.

எழுத்தாளர் RC குயிலானின் செயலாளர்.

ஜுமாடோ டெலிவரி பெண், ஒரு தாய், ஒரு ஹீரோ!

கிரன் ஜெஹ்ரா

உமா தேவியை நான் நேர்காணலுக்கு அழைத்த போது அவர் ஒரு ஆர்டர் டெலிவரியில் மும்முரமாக இருந்தார். எனது அழைப்பை நிராகரித்து அவர், உடனடியாக வாட்ஸ் ஆப் மூலம் என்னைத் தொடர்புகொண்டு இரவு பத்து மணிக்கு ஷிப்ட் முடிந்துவிடும். அதன் பிறகு நேர்காணலை வைத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்திருந்தார். வாரத்தில் ஆறுநாள் வேலை, தினமும் 10 மணி நேர உழைப்பு. ஜுமாட்டோவுக்காக உணவுப் பொருள்களை டெலிவரி செய்யும் பணியில் இருக்கிறார் அவர். இந்த வேலை எனது வீட்டுச் செலவுக்கும், மகனுக்கு பள்ளிக் கட்டணம் செலுத்தவும் உதவுகிறது என்கிறார் உமாதேவி.

ஒரு நாளைக்கு 300 கி.மீ. வரை வாகனத்தில் பயணம், வாரத்துக்கு ரூ.4 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. ஆனாலும் மகனின் கல்லூரி கட்டணம் மற்றும் கிரிக்கெட் பயிற்சிக்கான கட்டணங்களைச் சமாளிக்க இது போதுமானதாக இல்லை. நேற்றுவரை அவனின் கல்லூரிக் கட்டணம் ரூ.28 ஆயிரத்தை எப்படி செலுத்தப்போகிறேன் என்று எனக்குத் தெரியாமலிருந்தது. ஆனால், கடவுளின் ஆசிர்வாதத்தால் எல்லாம் நல்லபடியாக முடிந்துவிட்டது. இதற்காக எனது கதையை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துகொண்ட சப்பாத்தி கிங்ஸ்.காம் தலைமைச் செயல் இயக்குநர் R K ராஜாவுக்குத் தான் நான் நன்றி சொல்ல வேண்டும்.

நிஜவாழ்க்கையில் ஹீரோவான ஒருவரை சந்தித்தது குறித்து ராஜா LinkedIn இணையதளம் மூலம் பதிவிட்ட பிறகு அது புயல்வேகத்தில் பலரையும் சென்றடைந்தது. ஒரு ஆர்டரை எடுக்க அவள் என் சமையலறைக்கு வந்தாள். இளமையாக இருப்பதால் முதல் மாடிக்கு படிக்கட்டு ஏறிவருவதில் சோர்வடையக்கூடாது என்று நான் குறிப்பிட்டேன். இருவரும் பேசத்தொடங்கினோம். தமது மகனின் வாழ்க்கை சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக கடினமாக உழைக்கிறார். ஒரு நாளைக்கு ஐந்து மணி நேரம் மட்டுமே தூங்குகிறார். இதைக் கேட்டவுடன் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது என்று அவர் கூறினார்.

அவர், அவளைப் பற்றிய தகவல்களை பதிவிட்ட ஒரு சில நிமிடங்களில் மகனை கல்லூரியில் சேர்ப்பதற்கான கட்டணம் வசூலாகிவிட்டது.

ஜுமாடோ டெலிவரி வேலைக்கு சேர்ந்தது எப்படி என்று உமா தேவி கூறுகிறார். எனது குடும்பத்தின் சுழ்நிலை காரணமாக என்னால் மூன்றாம் வகுப்புக்கு மேல் படிக்க முடியவில்லை. பத்து வருடங்களுக்கு முன்னால் என்

உமாதேவி தன் மகனுடன்.

கணவர் இறந்தபோது எப்படி வாழ்க்கை நடத்தப்போகிறோம் என்று நிலைகுலைந்துபோனேன். நான் எந்தமாதிரியான பணிக்கு விண்ணப்பிக்க முடியும்? ஆனால், அதிர்ஷ்டவசமாக எனது கணவர் எனக்கு இரண்டு சக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு கற்றுக்கொடுத்தார். டூ விலர் ஓட்டத்தெரிந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே இந்த பணிக்கு நான் விண்ணப்பித்தேன் என்கிறார் உமாதேவி.

எனது கணவரின் மரணத்திற்கு பிறகு நான் ஒரு இளம் விதவையாக இருந்தேன். அப்போதுதான் வாழ்க்கையின் உண்மைநிலை புரிந்தது. எனது நெருங்கிய உறவினரிடம் நிதி உதவி கேட்டேன். ஆனால், அவர் அதுக்கு பதிலாக என்னையே கேட்டார். நான் என்ன சொல்கிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதா என்றார் உமா. வேலை கிடைக்காத சூழ்நிலையில் வீட்டு வாடகையும், மகனின் படிப்புச் செலவும் அவர் கண்முன் வந்து நின்றன. என் மகனுக்காக உழைத்துச் சம்பாதிக்க நான் தயாராக இருந்தேன். ஆனால், அதற்காக எனது சுயமரியாதையையும், கண்ணியத்தையும் என்னால் விட்டுத்தர முடியாது, என்கிறார் உமா தேவி.

அவரது முதல் வேலை ஒரு பேட்டரி வியாபாரியிடம். மாத சம்பளம் ரூ.7 ஆயிரம். பணம் வசூல் செய்வதுதான் அவரின் வேலை. ஏறக்குறைய 10 ஆண்டுகள் அந்தப் பணியில் இருந்தார். நல்ல ஊதியம் கிடைக்கிறது என்பதால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஜுமாடோவில் பணிக்குச் சேர்ந்தார். அதிகம் சம்பாதித்தால்தான் ஒரு நல்ல கல்லூரியில் தன் மகனை படிக்க வைக்க முடியும் என்று நினைத்தார். புதிய வேலையில் அவருக்கு அதிக ஊதியம் கிடைத்ததுடன் அல்லாமல் அவரது வேலையும் அங்கீகரிக்கப்பட்டது. உமா இப்போது ஜுமாடோவில் டையமண்ட் ஸ்டார் டெலிவரி ஊழியராக இருக்கிறார். உணவுப் பொருள்களை தாமதமாக டெலிவரி செய்ததாக என்மீது புகாரும் இல்லை, ஆர்டர் ரத்துச் செய்யப்படவும் இல்லை. ஒருமுறை கூட நான் உணவைக் கொட்டவில்லை என்கிறார் அவர்.

ஜீமாடோ டெலிவரி பெண் உமாதேவி.

மக்கள் என்னை ஆச்சரியமாகவும், பிரமிப்பாகவும் பார்க்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் என்னை "லேடி ஜுமாடோ" என அழைத்தார்கள். எனக்காக கைதட்டினார்கள். என்னுடன் சுயபடம் எடுத்துக் கொண்டார்கள். தங்களுக்காக ஒரு பெண் உணவு டெலிவரி செய்வதைக் கண்டு பெருமிதம் கொண்டார்கள். ஒரு முறை நான் போக்குவரத்து சிக்னலில் நின்றுகொண்டிருந்தபோது பின்னால் பைக்கில் வந்த சில இளைஞர்களை எனக்கு வணக்கம் தெரிவித்தார்கள். இது எனது வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்வாகும். எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது என்று புன்னகையுடன் கூறினார்.

சென்னை மாநகரை பொருத்த வரை உழைக்கும் பெண்கள் மதிக்கப்படுகிறார்கள். முறையாக நடத்தப்படுகிறார்கள். அதேநேரத்தில் நாம் கண்ணியமான முறையில் நடந்து கொண்டால் எதுவும் தவறாக நடக்காது. ஒரு நாள் முழுக்க உழைக்கும் நீங்கள் வேலை முடிந்தபின் சோர்வடைந்ததாக நினைக்கிறீர்களா? என்று கேட்டதற்கு ஆமாம். ஆனால், ஒரு தாய் என்ற முறையில் என் கடமைகளைச் செய்வதில் நான் தவறுவதில்லை. ஒவ்வொரு நாளும் ஐந்து மணி நேர தூக்கத்தை உறுதி செய்கிறேன். அர்ப்பணிப்பு உணர்வுடன் எனது வேலைகளைச் செய்கிறேன். என் மகன் என்னைப் பற்றி பெருமைப்பட வேண்டும் என்று நினைக்கிறேன் என்றார் உமாதேவி.■

Rotary PEOPLE OF ACTION

ஊரகப் பகுதிகளில் சமூக மாற்றம்

A அர்ஷியா

மெட்ராஸ் நார்த் ரோட்டரி சங்கம், (RID 3232) 30 ஆண்டுகளுக்கு மேலாக நாபாளையம் கிராமத்தில் உள்ள அரசுப் பள்ளிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. பழையநாபாளையம் அரசுப் பள்ளி தொடங்கப்பட்டதிலிருந்து, எங்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் பள்ளியின் கட்டுமானம், உள்கட்டமைப்பு மேம்படுத்துதல், கணினி ஆய்வகம், நூலகம், பொழுதுபோக்கு மையம், கழிவறைகளை புதுப்பித்தல், மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்தல் என பல சேவைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்துள்ளது.

எங்கள் சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் எப்போதுமே பள்ளி மற்றும் மாணவர்கள் நலனில் ஒரு சிறப்பு அக்கறை செலுத்திவந்துள்ளனர். அதாவது ஆண்டு முழுவதும் எங்கள் சங்க உறுப்பினர்கள் பள்ளியில் நடைபெறும் சுதந்திர தினம், குடியரசு தினம் உள்ளிட்ட முக்கிய நிகழ்ச்சி களில் கலந்து கொண்டு பெரும்பாலான நேரங்களை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் செலவிட்டுள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் எங்கள் குழுவினர் இந்த பள்ளியுடன், சுப்பாரெட்டி பாளையத்தில் உள்ள மற்றொரு பள்ளியையும் பார்வை யிட்டது. College Dekho அமைப்புடன் இணைந்து மாணவர்களின் மனநிலை என்ன என்பதை அறிந்து அவர்கள் மேற்படிப்பை தொடருவதற்கான ஆலோசனைகளை வழங்கி வந்துள்ளது. இது தவிர பத்தாம் வகுப்பு மாணவர்கள் ஒவ்வொருவரையும் நேரிடையாக சந்தித்து அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்கினோம். College Dekho குழுவினர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி கல்லூரியைச் சேர்ந்த உளவியல் துறை மாணவர்களில் தன்னார்வலர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி அளித்தது. அவர்கள் உதவியுடன் பள்ளி மாணவர்களுக்கு நாங்கள் ஆலோசனைகள் வழங்கினோம். இது ரோட்டேரியன்களுக்கும் மாணவர்களுக்கும் புதிய அனுபவமாக இருந்தது. மாணவர்களின் ஆளுமைப் பண்புகள், குணாதிசயங்கள், அவர்களுக்கு எந்த துறையில் ஆர்வம் உள்ளது என்பதைக் கண்டறிந்து அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. பல மாணவர்கள் தாங்கள் சொந்தமாக தொழில் தொடங்க ஆர்வம் தெரிவித்தனர். சிலர் அரசு வேலை, போலீஸ் துறையில் சேருவது என்றும் வேறு சிலர் கலைக்கல்லூரிகளிலும் என்ஜினீயரிங் போன்ற தொழில்நுட்ப படிப்புகளில் ஆர்வம் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

இந்த செயல்முறை மூலம் நாபாளையத்தில் உள்ள மூன்று பள்ளிகளைச் சேர்ந்த 30 மாணவர்கள்

உயர்கல்விக்காக அடையாளம் காணப்பட்டனர். நேர்காணல், மதிப்பீடு செய்தல் மற்றும் பள்ளி முதல்வர் மற்றும் ஆசிரியர்களின் பரிந்துரையின் பேரில் இவர்கள் அனைவருக்கும் கற்றுத்தரப்பட்டது.

இவர்களில் மாணவர்களின் திறமை, அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் இறுதியாக 11 பேரை எங்கள் சங்கம் தேர்ந்தெடுத்தது. இவர்களின் உயர்கல்விக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பத்தாம் வகுப்பு முடித்த ஐந்து மாணவர்கள், சென்னை பெட்ரோலியம் பாலிடெக்னிக் தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். 12 ஆம் வகுப்பு முடித்த 6 மாணவர்கள் டாக்டர் எம்.ஜி.ஆர்.ஜானகி கல்லூரியில் அனுமதிக்கப்பட்டு அவர்கள் ஆன்லைன் மூலம் வகுப்புகளைத் தொடங்கியுள்ளனர்.

நாபாளையம் சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த துரைபாண்டியன் மற்றும் அர்ஷியா தலைமையில் சங்கத் தலைவர் வெங்கட்ராமன், சுரேஷ்கிருஷ்ணா, குமார் ராஜேந்திரன், ஆகியோர் அடங்கிய சிறப்புக்குழு அமைக்கப்பட்டது. இந்த கிராமத்தைச் சேர்ந்த பல குடும்பங்களில் நல்ல மாற்றத்தைக் கொண்டுவரும் இந்த அற்புதமான பயணத்துக்கு தாராளமாக பங்களிக்க முன்வந்த சங்க உறுப்பினர்களுக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். இந்த பள்ளிகளிலிருந்து அதிக அளவிலான மாணவர்கள் எங்களது ஆலோசனைகள் மற்றும் ஆதரவின் மூலம் உயர் படிப்பைத் தொடர வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோளாகும். இந்த மாணவர்களுக்கு நிதியுதவி செய்ய முன்வரும் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து செயல்பட நாங்கள் தயாராக இருக்கிறோம். விருப்பம் உள்ளவர்கள் *rotaryclubofmadrasnorth@gmail.com.* என்ற மின்னஞ்சலில் தொடர்புகொள்ளலாம்.

கட்டுரையாளர் மெட்ராஸ் நார்த் ரோட்டரி சங்க உறுப்பினர்.

பள்ளி மாணவர்களுக்கு ஆலோசனை நிகழ்ச்சி.

கனவு நனவானது

நாபாளையம் கிராமத்தில் உள்ள ஓர் அரசுப் பள்ளிக்கு நாங்கள் சென்றபோது, 12ம் வகுப்பு படிக்கும் 17 வயதான ஆஷா என்ற மாணவியை சந்தித்தோம். நாங்கள் சென்னை நகரத்திலிருந்து வந்திருந்திருந்ததால் அவர் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடன் எங்களை சந்திப்பதில் ஆர்வமாக இருந்தார். மிகவும் ஆர்வத்துடன் சென்னை நகரில் உள்ள முக்கிய இடங்கள், நகர மக்களின் வாழ்க்கை மற்றும் எங்களது அனுபவங்களைக் கேட்டறிந்தார். தனது வாழ்க்கை கிராமத்தைச் சுற்றியே இருப்பது குறித்தும் வேறு இடங்களைப் பார்வையிட வாய்ப்பு கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார். இளம் வயதில் பொங்கல் பண்டிகை சமயத்தில் சென்னைக்கு சென்றதையும் மெரீனா கடற்கரைக்குச் சென்றதையும் நினைவுகூர்ந்தார். சென்னைக்கு சென்று வந்ததை மிகவும் ரசித்ததாகவும் குறிப்பிட்டார். அடுத்து வந்த காலங்களில் அவரவர்கள் தங்கள் வேலைகளில் பிஸியாக இருந்ததால் மீண்டும் சென்னை செல்ல வாய்ப்பு கிடைக்கவில்லை என்றார். தனது குடும்பம் பல்வேறு சவால்களை சந்தித்து வந்த நிலையிலும் கடினமாக உழைத்து படிப்பில் சிறந்து விளங்கினார். சிறுவயதில் இருந்தே ஆஷாவிற்கு ஒரு கனவு இருந்தது. அது என்னவெனில் உயர்கல்வியை சென்னை நகரில் தொடர வேண்டும் என்பதுதான். ஆனால், இது கனவாகவே இருந்து விடுமோ என்று எண்ணியிருந்தார். ஆனால், அவளுடைய பள்ளியில் எங்களால் நடத்தப்பட்ட மாணவர் களுக்கான வழிகாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆஷா, வணிகவியலில் பட்டம் பெற்று வங்கி மேலாளராக வேண்டும் என்பதே தமது விருப்பம் என்று தெரிவித்தார். அதற்கான நேரமும் வந்தது. எங்களது சிறப்பு திட்டத்தின் கீழ் அவர் தேர்வு செய்யப்பட்டு சென்னை மாநகரில் உள்ள ஒரு பிரபலமான கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சேர்க்கை பெற்று மகிழ்ச்சியுடன் தான் விரும்பிய படிப்பை தொடர்கிறார்.

Rotary PEOPLE OF ACTION

மரம் நடுதலைப் புதிய உயரங்களுக்குக் கொண்டுசெல்லும் ரோட்டரி சங்கங்கள்

கிரண் ஜெஹரா

கர்நாடகத்தில் கார்வாருக்கு அருகிலுள்ள யெல்லப்பூரில் நடந்த ஒரு நிகழ்ச்சியை PDG கணேஷ் பட், RID 3170 நினைவுகூர்கிறார், அங்கு சிறு பையன் ஒருவனைப் பாம்பு ஒன்று கடித்துவிட்டது, 82 வயதான ஒருவர் அவனுக்கு மூலிகைச் சிகிச்சை அளித்தார். அவர், தன்னுடைய கொல்லைப்புறத்திலிருந்து ஓர் இலையைப் பறித்தார், அந்தப் பையனுடைய காலில் பாம்பு கடித்த இடத்தில் வைத்தார். சில நிமிடங்களில், அந்தப் பையன் தன்னுடைய காலில் நிற்கத் தொடங்கிவிட்டான்; அந்த முதியவர் தன்னுடைய சேவைக்காக ஒரு பைசா கூடப் பெற்றுக்கொள்ளவில்லை. வியந்து போன பட், அந்த இலையைப்பற்றி அவரிடம் விசாரித்தார். அந்த முதியவர் அதற்குப் பதில் சொன்னார், "அந்த ரகசியத்தை நான் வெளிப்படுத்தினால், அதன் தாக்கம் போய்விடும்." வருங்காலத் தலைமுறைகளின் நன்மைக்காக அவர் அந்த மூலிகை ரகசியத்தை வெளிப்படுத்தவேண்டும் என்று நான் அவரைச் சம்மதிக்கவைக்க வேண்டியிருந்தது'' என்கிறார் PDG.

அந்த முதியவர், மேலும் இரண்டு நாட்களுக்குத் தன்னுடன் தங்கும்படி பட்-டைக் கேட்டுக்கொண்டார். அந்த முதியவருடைய தோட்டத்தில் கிட்டத்தட்ட 40 வகையான மூலிகைச் செடிகள் இருந்தன. இவற்றின்மூலம் இருமல், வயிற்று வலியில் தொடங்கிப் பாம்புக் கடிவரை பலவற்றையும் குணப்படுத்த இயன்றது. அந்த நிகழ்ச்சி தான் தார்வாடில் ஒரு மருந்துத் தோட்டத்தைத் தொடங்கும் ஊக்கத்தை

எனக்கு அளித்தது'' என்கிறார் பட். இவருடைய தாய் மற்றும் மாமியாரின் நினைவுகளை நிலைத்திருக்கச் செய்வதற்காகத் தொடங்கப் பட்டுள்ள இந்த ரோட்டரி அயீஸ் தோட்டம்'' 160க்கும் மேற்பட்ட மருத்துவப் புதர்கள் மற்றும் செடி களைக் கொண்டுள்ளது. இந்தத் தோட்டத்தை, RC தார்வாட் சென்ட்ரலைச் சேர்ந்த Rtn சுரேஷ் பாபு தலைமையில் இயங்கும் வால்சந்த்நகர் தொழில்நிறுவனங்கள் பராமரிக்கின்றன. இந்தச் சங்கம், அதன் தலைவரான ஆனந்த் நாயக் மற்றும் செயலாளரான கரண் டாட்வாட் தலைமையின்கீழ் இந்தத் தோட்டத்தை விரிவாக்கும்.

பசுமைக் குண்டுகள்

RC புணே கொத்ருட், RID 3131ஐச் சேர்ந்த ரோட்டரியன்கள், புணே அருகிலுள்ள ஆரெ என்ற கிராமத்தில் "பசுமைக் குண்டுகள்" எனப்படும் விதைக் குண்டுகளை எறிந்து வருகிறார்கள். நாங்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் எங்களுடைய முயற்சியின் ஒரு பகுதியாக, இந்தக் கிராமத்தைச் சுற்றி நடந்து விதைப் பந்துகளை வீசுகிறோம், இதனால், இந்தப் பகுதிக்கும் நன்மை, எங்கள் நலத்துக்கும் நன்மை, ஒரே கல்லில் இரண்டு மாங்காய்'' என்கிறார் இந்தச் சங்கத்தின் சுற்றுச்சூழல் பிரிவுத் தலைவர் அனுஜா ஷா. நாடா அறக்கட்டளை என்ற ஓர் NGO ஆதரவில் நடைபெற்ற இந்த விதைக் குண்டு எறிதல் செயல்பாட்டில் சங்க உறுப்பினர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் பங்கேற்றார்கள். ஆனைகளுக்கு இது மிகவும் பிடித்திருந்தது, விரைவில் நாங்கள் மேலும் பல விதைக் குண்டுகளை எறியத் திட்டமிட்டுள்ளோம்'' என்று தொடர்ந்து குறிப்பிடுகிறார் அவர்.

இந்தச் சங்கம் ஏற்கெனவே RC மும்பை மற்றும் நாடா அறக்கட்டளை யுடன் இணைந்து இந்தக் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டினுள்ளும் வெளியிலும் சூரிய ஒளி விளக்குகளை நிறுவியுள்ளது, 5,000 பழம் தரும் மரக் கன்றுகளையும் நட்டுள்ளது. சூரிய ஒளி விளக்குகளால், கிராமத்து மக்கள் கூடுதல் நேரம் உழைக்க இயலுகிறது, குழந்தைகள் மாலை நெடுநேரம்வரை படிக்க இயலுகிறது. பழ மரங்கள் அவர்களுக்குக் கூடுதல் வாழ்வாதாரத்தை வழங்கும், அதே நேரம், கிராமத்தின் பசுமை அளவையும் மீட்கும்'' என்கிறார் இவர்.

PDG கணேஷ் பட் மற்றும் தரர்வாத் சென்டரல் சங்க உறுப்பினர்கள் ரோட்டரி ஆயி தோட்டத்தில்.

ரோட்டரி சக்கரப் பூங்கா

ஒரு காங்கிரீட் காட்டுக்கு நடுவில், ஒரு செழிப்பான, பசுமையான பூங்காவில் நடப்பதைக் கற்பனை செய்து பாருங்கள். மக்களுடைய நுரையீரல்களுக்குப் புதிய ஆக்ஸிஜனையும் நகரத்துக்குச் சூழியல் சமநிலையையும் வழங்குவதுடன், இது நம்முடைய சங்கத்தின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தும் ஒரு மிகச் சிறந்த முன்னெடுப்பாகவும் இருக்கும். இந்தப் பூங்கா, ரோட்டரி சக்கரத்தின் வடிவில் கட்டப்படுகிறது'' என்கிறார் RC ஔரங்காபாத் கிழக்கு, RID 3132ன் தலைவர் ரூஷிதிஜ் சௌதரி.

இந்திய விளையாட்டு ஆணையத்தின் ஒரு கோரிக்கையின் அடிப்படையில், ஔரங்காபாதில் உள்ள BAMக் வளாகத்தில் இரண்டு ஏக்கர் பரப்பளவுள்ள இந்தப் பூங்கா அமைக்கப்படுகிறது. இந்த வளாகத்தில் இந்தச் சங்கம் ஏற்கெனவே TRF உடன் இணைந்து இரண்டு தடுப்பணைகளைக் கட்டியுள்ளது. இந்த ஆண்டு மழைக்காலத்தின்போது இந்த அணைகள் ஏற்கெனவே ஐந்து முறை நிரம்பியுள்ளன; இது இந்தப் பகுதியின் நிலத்தடி நீர் அளவை மேம்படுத்தியுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டுகிறார். இந்த ரோட்டரி சக்கரப் பூங்காவின் தனித்துவமான வடிவமைப்பு காரணமாக, அதைத் தொலைவிலிருந்தே அழகாகப் பார்க்கலாம்.

முதல் நிலையில், இந்தச் சங்கம் உள்ளூர் ஆல மரம், அரச மரம் மற்றும் வேப்ப மரங்களை நட்டுள்ளது, இவை 500 ஆண்டுகள் வாழ்நாள் கொண்டவை. இங்கு 1,000 மீட்டர் ஜாகிங் பாதையொன்றையும் இந்தச் சங்கம் அமைத்துள்ளது.

பசுமையைப் பரப்பும் புதிய மந்திரம்

RC அகமெத்கர்ஹ், RID 3090, இந்நகரில் தெருவோர மரம் நடுதல் நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. இந்த மரம் நடுதல் நிகழ்ச்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக, கல்வி மற்றும் தனியார் அமைப்புகளை இந்தச் சங்கம் தன்னுடன் இணைத்துக்கொள்கிறது, "நாங்கள் ஒரு மரக்கன்றைத் தத்தெடுத்துக் கொள்கிறோம்" என்று உறுதி கூறும் மாணவர்கள், ஊழியர்களுக்கு உதவுகிறது.

ஆம்ஃபன் புயலால் பாதிக்கப்பட்ட ராஜாராம்பூர் கிராமப் பஞ்சாயத்தைச் சேர்ந்த 100 விவசாயிகளுக்கு RC கல்கத்தா கிழக்கு சென்ட்ரல் மற்றும் RC கல்கத்தா சன் சிட்டி, RID 3291, பூ மற்றும் பழம் அளிக்கும் மரக் கன்றுகளை வழங்கினார்கள். இப்பணியில் இந்தச் சங்கத்துக்கு அதன் RCC மற்றும் சோனாடோரி பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைப்பு ஆகியோர் உதவினார்கள்.

முற்றிலும் பெண்களைக் கொண்ட சங்கமாகிய RC அகமதாபாத் அஸ்மிதா, RID 3054, இந்நகரில் 67,000 மரங்களை நட்டுள்ளது.

RC பெங்களூர் லேக்சைட், RC

RID 3190 *ரோட்டரியினர் "விருக்ஷ சேத்னா" திட்டத்தில்.*

பெங்களூர் சென்ட்ரல் மற்றும் RC கோலார், RID 3190, ஆகியோர், விருக்ஷ சேதனா திட்டத்தின்கீழ், எட்டு விவசாயிகளின் நிலத்தில் 410 மாம்பழக் கன்றுகளை நட்டார்கள். இச்சங்கம், எட்டு ஏக்கர் நிலத்தில் பழ மரக்கன்றுகளை நடும், இதன்மூலம் விவசாயிகளின் வருவாய் ஆண்டுக்கு ரூ.80,000 கூடுதலாகும் என்று இவர்கள் மதிப்பிடுகிறார்கள்.

DG *பாலாஜி பாபு தலைமையில் RC மயிலாடுதுறை ரோட்டரியினர் மரங்கள் நடுகின்றனர்.*

RC மயிலாடுதுறை, RID 2981, DG R பாலாஜி பாபு அவர்களுடைய முன்னிலையில், பரசலூர் வீரட்டேசுவரர் கோயிலில் ஒரு மரக் கன்று நடுதல் நிகழ்ச்சியைத் தொடங்கியது. இந்தச் சங்கம், ரூ.1.25 லட்சம் செலவில் சுமார் 3,000 மரக் கன்றுகளை நடும்.

RC தஞ்சாவூர் தெற்கு, RID 2981, லிட்டில் ஸ்காலர்ஸ் பள்ளி இன்டராக்டர்களுடன் இணைந்து, "டெர்மினாலியா மன்டலி" (Terminalia Mantaly) என்ற வெளிநாட்டு மர வகையைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட மரக் கன்றுகளை நட்டது. ரூ.1 லட்சம் செலவில் இந்த மரக் கன்றுகளை நடுவதன்மூலம் பள்ளி வளாகத்தின் தோற்றம் மேம்படும். இந்த மரக் கன்றுகளுக்குத் தொடர்ந்து நீர் ஊற்றுவதற்காக, இந்தச் சங்கம் ஒரு சொட்டு நீர்ப் பாசன அமைப்பையும் அமைத்துள்ளது.

RC திருநெல்வேலி நகரம், RID 3212, விடுதலை நாளைக் கொண்டாடும் வகையில் ஸ்ரீ சத்ய சாய் பாலா குருகுலம் மெட்ரிக் பள்ளியில் மரக் கன்றுகளை நட்டது.■



District Wise TRF Contributions as on September 2020

(in US Dollars)

District Number	Annual Fund	PolioPlus Fund	Endowment Fund	Other funds	Total Contributions
		India			
2981	15,842	1,943	5,000	0	22,785
2982	12,228	1,379	15,703	14,615	43,925
3000	5,297	0	10	10,800	16,107
3011	(12,658)	100	40,450	96,368	124,261
3012	10,225	0	0	3,079	13,304
3020	42,219	5,645	0	2,625	50,490
3030	625	1,030	0	73,418	75,072
3040	522	67	0	50	639
3053	6,581	303	0	60,668	67,552
3054	60,325	140	0	77,844	138,310
3060	21,523	(966)	7,077	54,567	82,200
3070	2,094	0	0	11,108	13,203
3080	12,021	8,958	0	0	20,978
3090	13,723	0	0	(736)	12,987
3100	1,565	0	0	6,411	7,976
3110	8,849	0	0	0	8,849
3120	0	1,769	0	(1,769)	0
3131	26,371	4,850	9,000	78,206	118,427
3132	3,557	85	0	3,903	7,545
3141	159,812	200	15,865	250,683	426,560
3142	77,641	5,061	0	4,793	87,494
3150	7,300	300	17,667	22,021	47,287
3160	4,496	5,442	0	0	9,938
3170	3,806	2,470	125	73,012	79,414
3181	8,536	347	0	7,050	15,933
3182	10,475	0	0	1,581	12,056
3190	19,869	753	25,000	105,540	151,162
3201	6,346	1,583	0	54,712	62,642
3202	27,285	1,568	135	10,167	39,155
3211	934	1,899	0	37,439	40,272
3212	10,418	8,023	14	44,327	62,783
3231	(513)	27	0	1,167	680
3232	(723)	900	1,000	86,190	87,368
3240	14,847	6,950	0	1,000	22,797
3250	2,087	187	0	93	2,367
3261	(750)	0	0	1,833	1,083
3262	1,629	1,168	0	0	2,797
3291	5,088	185	0	17,650	22,923
India Total	**589,490**	**62,368**	**137,046**	**1,210,415**	**1,999,319**
3220 Sri Lanka	11,582	5,121	0	8,919	25,623
3271 Pakistan	1,006	1,000	0	22,100	24,106
3272 Pakistan	5,240	7,446	0	0	12,686
3281 Bangladesh	32,989	500	1,000	32,941	67,430
3282 Bangladesh	5,300	300	0	8,396	13,996
3292 Nepal	12,351	7,409	0	75,246	95,006
South Asia Total	**657,959**	**84,144**	**138,046**	**1,358,017**	**2,238,166**
World Total	**20,790,668**	**3,581,457**	**5,801,230**	**7,462,148**	**37,635,502**

Source: RI South Asia Office

தைபேயின் எழுச்சி!

சூசி L மா

புனிதமான கோயில்கள், விண்ணை முட்டும் வானளாவிய கட்டடங்கள், மலைப்பாதைகள், விதம் விதமான ருசியான உணவு வகைகள், கண்கள் கூசும் பிரகாசமான ஒளிவிளக்குகளுடனான இரவு வாழ்க்கை. இதுதான் தைவானின் சுறுசுறுப்பான, சக்திவாய்ந்த தலைநகரம். 2021ம் ஆண்டு RI மாநாட்டை வரவேற்க காத்திருக்கிறது தைபே.

இது ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன்பு கடல் மூடுபனியிலிருந்து வெளிப்பட்டது. பசுமையான காடுகளால் மூடப்பட்டிருந்த ஆசியத் தீவு. ஆங்காங்கே உயரமான மலைக்குன்றுகள். பலநூறு ஆண்டுகள் பழமையான கலாசாரத்தைக் கொண்டிருந்தது என்பது முக்கியமல்ல. கடல்களை ஆராயும் போர்த்துகீசிய மாலுமிகளுக்கு இது முற்றிலும் புதிதாக இருந்தது. அது ஒரு சொர்க்கம்போல காணப்பட்டது. அதற்கு தங்கள் வரைபடங்களில் அவர்கள் கொடுத்த பெயர் "இல்ஹா பார்மோஸா" -அதாவது அழகான தீவு.

சீனாவின் கிழக்கு கடற்கரை யிலிருந்து சுமார் 100 மைல் தொலைவில் அமைந்துள்ள பார்மோசா தீவு இன்று தைவான் என்று அழைக்கப்படுகிறது. இது ஆசியாவின் நான்கு புலிகளில் ஒன்றாக கருதப்படுகிறது. அதாவது 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி 21 ஆம் நூற்றாண்டில் தொடர்ந்து விரிவடைந்த தூரக்கிழக்கு பொருளாதாரங்களில் ஒன்றை குறிக்கிறது. தைவானை பொருத்த வரை அதன் வளர்ச்சிக்கு முக்கியச் சின்னமாக விளங்குவது தலைநகர் தைபே. 24 மணிநேரமும் ஒளிவெள்ளத்தில் புதிய சக்தியுடன் சுறுசுறுப்பாக இயங்கும் நகரம். இங்குதான் ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாடு நடைபெற உள்ளது. மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ள கருப்பொருள் "ஆற்றலை உணருங்கள்" என்பதுதான்.

1948ம் ஆண்டில் முதன் முதலாக தைபே ரோட்டரி சங்கம் உருவானது. தைவானிய ரோட்டேரியன்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்து காத்திருந்த தருணம் நெருங்கிவிட்டது. எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு தைவானில் கிட்டத்தட்ட 900 சங்கங்கள் உருவாகிவிட்டன. இவற்றில் 35,000 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். 12 ரோட்டரி மாவட்டங்கள், 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ம் தேதி முதல் 16 ஆம் தேதிவரை இங்கு நடைபெற உள்ள ரோட்டரி சர்வதேச மாநாட்டை நடத்த தயாராகி வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளாகவே தைவான் ரோட்டேரியன்கள் இதற்கான ஏற்பாடுகளை கவனித்து வருகிறார்கள் என்கிறார் மாநாட்டின் தலைவரான கென்னத் M ஸ்கூப்பர்ட் ஜூனியர். தங்கள் நாட்டுக்கும், தைபே நகருக்கும் பெருமை சேர்க்கும் விதத்தில் மாநாடு இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

அலபாமாவின், டெகட்டூர் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரான ஸ்கூப்பர்ட், ரோட்டரியின் முன்னாள் சர்வதேச தலைவரும், 1976 முதல் தைபே ரோட்டரி சங்க உறுப்பினராக இருக்கும் கேரி ஹுவாங்கின் உதவியாளராகப் பணியாற்றியவர். ஸ்கூப்பர்டின் மனைவி லின், ஹுவாங்கின் மனைவி கொரின்னாவுக்கு உதவி யாளராக இருந்தவர். டெகட்டூர் சங்க உறுப்பினரான ஸ்கூப்பர்ட் மற்றும் அவரது மனைவி லின் இருவரும் பலமுறை தைபேக்கு விஜயம் செய்துள்ளனர். அவர்கள் மீண்டும் தைபேக்கு வர ஆர்வமாக உள்ளனர். தைபே நகரம் அழகானது அதை பார்த்துக்கொண்டே இருக்கலாம் என்கிறார் ஸ்கூப்பர்ட். விண்ணை முட்டும் நவீன கட்டடங்கள், அழகான பழமைவாய்ந்த கோயில்கள், இரவு நேர சந்தைகள், எங்கும் தூய்மை, பல இயற்கை அதிசயங்கள், கண்கவர் பூங்காக்கள், மலைப்பாதைகள் என

தைபே 101 கட்டடம்.

2,021அடி உயர அழிந்து போன எரிமலை ஒரு பிரபல சுற்றுலா தளம்.

சிறப்பு அம்சங்கள் இங்குள்ளன. இங்கு கிடைக்கும் விதம்விதமான உணவு வகைகள் மிகவும் ருசியானவை இவற்றை உண்பதற்காகவே நான் பலமுறை இங்கு வந்துள்ளேன். பலரும் நண்பர்களுடன் இங்கு வந்து பலவிதமான உணவுகளை சாப்பிட்டு மகிழ்வார்கள். தைவானுக்கு உணவருந்த அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்காக ஸ்கூப்பர்ட் சில ஆலோசனைகளைக் கூறுகிறார். உங்களுக்கு இன்னும் கொஞ்சம் வேண்டும் என்று நினைத்தாலொழிய சாப்பாட்டு தட்டை காலி செய்யாதீர்கள், ஏனெனில் உணவு போதும் என்று நீங்கள் நினைக்கும் நேரத்தில் மேலும் உணவு வரும் என்கிறார் அவர்.

மாநாட்டுக்கு வரும் ரோட்டேரியன்கள் தைபேயின் அதிசயங்களைப் பார்ப்பதற்கு உள்ளூர் ரோட்டரி உறுப்பினர்களிடம் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள். இது தொடர்பான கையேட்டின் பக்கங்களைப் புரட்டினால் அதில் விவரங்கள் தெரியவரும். ரோட்டரி உறுப்பினர்கள் மற்றும் ரோட்ராக்டர்களிடமிருந்து நாங்கள் பலவிதமாக குறிப்புகளைப் பெற்று வெளியிட்டுள்ளோம். எங்கெங்கு சுற்றிப்பார்க்க வேண்டும் என்பதை நாங்கள் பட்டியலிட்டுள்ளோம். அதில் முக்கியமாக பார்க்கவேண்டியது சுரங்கப்பாதை என்று தெரிவிக்கிறார் அவர்.

பெருநகர போக்குவரத்து (MRTS)

எந்த ஒரு புதிய நகரத்துக்கு சுற்றுலாப் பயணிகள் சென்றாலும் நகரைச் சுற்றிப்பார்ப்பதற்கு சிறந்த போக்குவரத்து எது என்பதுதான். தைபேயில் நகரில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதற்கு சிறந்த போக்குவரத்து மெட்ரோ ரயில்கள்தாம் என்கிறார் ரோட்டேரியன் மற்றும் ரோட்ராக்டர் ஜூலி சூ.

ஜூலி சூ பிறந்தது தைவானில். ஆனால், தனது இளமைக்காலத்தின் பெரும்பாலான நாட்களை அவர் வெளிநாட்டிலேயே கழித்துள்ளார். 25 வயதில் அவர் தைவானுக்கு திரும்பியபோது அவரது சொந்த நகரத்தையே அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் ஒரு வெளிநாட்டினரைப் போலவே தைபேயை ஆராய வேண்டியிருந்தது. நான் தைவான் நாட்டு மொழியில் பேசினாலும் பல விஷங்கள் எனக்குப் புதிதாக இருந்தது. பல இடங்களுக்கு நான் மெட்ரோ ரயிலில் சென்றுவந்தேன். ஒருபுறம் கடலுக்கு அடியிலும் மற்றொரு புறம் மலைகளுக்கு நடுவே குகைப்பகுதியிலும் ரயில்கள் சென்றன. தாம்சூய் நதி கடலில் கடக்கும் இடத்தில் ரெட்லைன் ரயிலில் சென்றபோது சூரிய அஸ்தமனத்தை பார்க்க முடிந்தது. மாவ்கோங் கொண்டோலாவுக்கு கேபிள் காரில் சென்றபோது அழகான தேயிலைத் தோட்டங்களை பார்க்க முடிந்தது. நகரத்திற்குள் ரயில்கள் தரைக்கு அடியில் ஓடுகின்றன. நகரத்திற்கு வெளியே தரையில் பயணிக்கிறது. இதன் மூலம் கிராமப் பகுதிகளைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது என்கிறார் சூ.

பெருநகர ரயில் போக்குவரத்தை அவர் பெரிதும் பாராட்டினார். இரவு நேரத்தில் பயணம் செய்யும் பெண்களுக்காக காத்திருப்பு அறைகள் உள்ளன. அவை மிகவும் பாதுகாப்பானவை. பயணி களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது. கால் உடைந்த நிலையில் இருந்த ஒரு ரோட்டேரியனுடன் நான் பயணித்தபோது ரயில்வே நிர்வாகம் எங்களுடன் பாதுகாப்புக்காக ஒருவரை அனுப்பிவைத்தது. மெட்ரோ ரயிலின் மற்றொரு சிறப்பு அம்சம் அதன் தூய்மை. ரயிலில் பயணிக்கும்போதே அல்லது ரயில்நிலையங்களில் இருக்கும்போதோ உணவு சாப்பிடவோ, காபி போன்ற பானங்களை குடிக்கவோ கூடாது. கழிப்பறைகள்கூட சுத்தமாக இருக்கும். எனது வீட்டின் அருகே உள்ள மெட்ரோ ரயில்நிலையத்தில் பூக்களை வைத்து அலங்கரித்திருந்தனர். சில நேரங்களில் ரயில்நிலையங்களுக்குள் சென்று இயற்கை உபாதையை கழிக்க கழிவறையை பயன்படுத்தவும் அனுமதிக்கிறார்கள்.

பெருநகர ரயில் போக்குவரத்தை பற்றி அறிந்துகொள்ள வரைபடங்கள் ஆங்கிலத்திலும் கிடைக்கின்றன. உங்களுக்கு உதவி செய்ய ஒவ்வொரு ரயில்நிலையத்திலும் இதற்கென ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஆங்கிலம் தெரியும். ரயில்கள் குறித்த நேரத்தில் வந்து செல்வது இதன் தனிசிறப்பாகும். மாநாட்டுக்கு வருகைதருவோர்க்கு மெட்ரோ ரயிலில் பயணம் செல்ல இலவச பாஸ்கள் வழங்கப்படும். மாநாட்டுக்கு வருபவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளில் இதுவும் ஒன்றாகும். இந்த இலவச பாஸை வைத்துக்கொண்டு மாநாட்டு நடைபெறும் இடமான தைபே நங்காங் கண்காட்சி மையத்துக்கு எளிதில் சென்றுவர முடியும். இந்த இடத்திற்கென ரயில் நிலையமும் தனியாக உள்ளது.

வானளாவிய உயர்ந்த கட்டடங்கள்

தைபேயில் நீங்கள் அவசியம் பார்க்க வேண்டிய இடம் "தைபே 101". வானளவு உயர்ந்து நிற்கும் இந்த கட்டடம் 101 மாடிகளைக் கொண்டது. 2004ம் ஆண்டு கட்டப்பட்டது. 2009ம் ஆண்டு துபையில் 1667 அடி உயரமான புர்ஜ் காலிஃபா கட்டடம் கட்டப்படும் வரை இதுதான் உலகிலேயே மிக உயரமான கட்டடமாக இருந்தது. தைபேயில் சுற்றிப்பார்க்க வேண்டிய இடங்கள் பற்றி ரோட்டரியினரிடம் கேட்டபோது அனைவரும் தவறாமல் குறிப்பிட்ட இடம் தைபே 101.

சிலர் இந்த கட்டடத்தின் கோபுரம் பகோடாவை ஒத்திருப்பதாகக் கூறுகிறார்கள். வேறுசிலர் இது மூங்கில் தண்டுபோல இருப்பதாகக் கூறுகிறார்கள். தைவானில் அடிக்கடி பூகம்பம் மற்றும் புயல், சூறாவளி ஏற்படும். எனவே இந்த உயரமான 101 மாடி கட்டடம், 9.0 ரிக்டர் அளவிலான பூகம்பத்தைத் தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 728 டன்னில் பெண்டுலம் கருவி போன்ற தங்கப்பந்து இந்த கட்டடத்தை தாங்கி நிற்கிறது. (87-வது மாடியிலிருந்து 92வது மாடிவரையில் உள்ள பகுதியிலிருந்து இதை பார்க்க முடியும்.).

ஐந்தாவது மாடி முதல் 89வது மாடிவரை மின்தூக்கியில் 37 விநாடிகளில் சென்றுவிடலாம். 89வது மாடியில் உட்புற ஆய்வகமும், 91வது மாடியில் வெளிப்புற ஆய்வகமும் உள்ளது. கடந்த ஆண்டு நிர்வாகத்தினர் 101 வது மாடியை பொதுமக்கள் பார்வைக்கு திறந்துவிட்டனர். அதற்கு முன்னர் வி.ஐ.பி.க்கள் மட்டுமே அங்கு செல்லமுடியும். 91வது மாடியிலிருந்து 101 மாடி வரை சென்று வெளிப்புற அழகை பார்க்க வேண்டுமானால் பாதுகாப்பு கவசங்களை அணிந்து கொள்ள வேண்டும். இதற்காக 20 டாலர் சிறப்புக் கட்டணம் செலுத்தவேண்டும். இதற்கான டிக்கெட்டுகள் ஆன்லைனிலும் விற்கப்படுகின்றன. கட்டத்தின் தரைத்தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் மேல்தளத்தை பார்வையிடும்

லுங்ஷான் கோவில்.

தைபேயின் உணவுச்சுற்றுலா

இரவுநேர சந்தைகள்: தைபேயில் உள்ள இரவு நேர சந்தைகள் கண்கள், காதுகள் மற்றும் வயிற்றுக்கு விருந்தளிக்கும். விதம் விதமான உணவு வகைகள் இங்கு கிடைக்கும் என்றாலும் ஆடைகள், காலணிகள், பொம்மைகள், பரிசுப் பொருள்கள், விடியோகேம் விளையாட்டுகள், குறிசொல்லுதல் மற்றும் பெருவிழா போன்ற பொழுதுபோக்கு அம்சங்களும் இங்கு உண்டு. இந்த சந்தைகள் மாலை 4 மணிக்கு திறக்கப்பட்டு இரவு 1 மணி வரை செயல்படும். எங்கள் ரோட்டரி சுற்றுலா வழிகாட்டிகளால் குறிப்பிடப்பட்ட இடங்கள் ஷிலின் மற்றும் ராஹே இரவு சந்தைகளாகும்.

சிறிய உணவு வகைகள் சாதாரணமாக கிடைக்கின்றன. ஆனால், அது முதல் தரமான உணவு என்று சொல்ல முடியாது. தைபேயின் இரவு நேரச் சந்தைகளில் டஜன் கணக்கிலான விற்பனையாளர்கள் 2020-இல் வெளியிடப்பட்ட மிச்செல் கையேட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். பிரபலமான கடைகளில் நீண்ட வரிசை இருக்கலாம். ஆனால், அங்குதான் சிறந்த உணவுகள் கிடைக்கும். சில இடங்களில் சாப்பிடுவதற்கு ஸ்டாண்டுகளும் உட்காருவதற்கு ஸ்டூல்களும் போடப் பட்டுள்ளன. ஆனால் பெரும்பாலான மக்கள் சாப்பிட்டுக் கொண்டே நடப்பார்கள் அல்லது வீட்டுக்கு கொண்டு சென்று சாப்பிடுவார்கள். நூடுல்ஸ், பன்கள், எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுப்பண்டங்கள் வெளிநாட்டினரை கவர்ந்து இழுக்கும். வறுக்கப்பட்ட சிக்கன் கட்லெட்டுகள், பாலாடைக் கட்டியால் தயாரிக்கப்பட்ட உணவுகள், குவாபாவ் என்று அழைக்கப்படும் பன்றி இறைச்சியுடன்கூடிய பன்கள், சாண்ட்விச், பழரசங்கள், பப்பாளி பால், பல்வேறு சுவைகளில் தேநீர், மரவள்ளிக்கிழங்கு சிப்ஸ், மோச்சி எனப்படும் ஸ்வீட் கேக், வேகவைத்த அல்லது வறுக்கப்பட்ட அரிசி கேக் மற்றும் ஐஸ்கிரீம் இங்கு பிரபலமானவை.

பால் கூவின் விருப்பமான இரவுநேர சந்தை உணவு சிப்பி ஆம்லெட், சிப்பிகளால் நிரப்பப்பட்ட மிருதுவான முட்டை கேக், அதன் மேல் இளிப்பும், புளிப்பும் நிறைந்த ஒருவகை சாஸ்.

தைவானில் சூடான மண்பானையில் உணவு பகிர்ந்துக் கொள்ளுதல் ஒரு பிணைப்பான அனுபவம்.

ரோட்டேரியன் மற்றும் ரோட்ராக்டர் எலிஸி (யீ-சுன்) லின் புளித்த பீன் தயிரிலிருந்து தயாரிக்கப்படும் டோஃபுவை தைவான் மக்கள் விரும்பி சாப்பிடுவதாகத் தெரிவிக்கிறார். பன்றி இரத்தம், பிசுபிசுப்பான அரிசி சோற்றை சோயா குழம்பில் தோய்த்து அதில் கடலைமாவை கலந்து ஒரு குச்சியில் வைத்து பரிமாறுகிறார்கள். இதுதான் தனக்குப் பிடித்த உணவு என்கிறார் லின்.

உணவுக்குவியல்: தைபேயில் விதம் விதமான உணவுகளைத் தயாரித்து வழங்கும் உணவகங்கள் இருந்தாலும், ரோட்டரி மாவட்டம் 3500ன் முன்னாள் ஆளுநர் ஹாங், ஷூ சென் மற்றும் அவரது மனைவி ரீட்டாவும் (இவரும் ஒரு ரோட்டேரியன்) டைன் தாய் பங்க் உணவகத்தைத்தான் பரிந்துரைக்கிறார்கள். தைபேயில் பல இடங்களில் இந்த உணவகம் உள்ளது. இங்கு சென்றால் காத்திருந்து தான் உணவு சாப்பிட வேண்டும். (காத்திருக்கும் நேரங்களை dintaifung.com.tw/eng என்ற இணையதளம் மூலம் தெரிந்துகொள்ளலாம்.) இந்த உணவகம் ஜியோவ் லாங் அல்லது சூப் வகைகளுக்கு பிரபலமானது. நீங்கள் இறைச்சியை வாங்கி கடிக்கும்போது அதிலிருந்து குழம்புகள் வெளியேறி உங்களை பரவசமூட்டும். அவ்வளவு சுவையானது. பன்றி இறைச்சி உணவுகள் இங்கு பிரபலம். இது தவிர வேகவைத்த பன்கள், நூடுல்ஸ், சூப்புகள், அரிசி உணவுகள், வேகவைத்த காய்கறிகள், இனிப்பான சிவப்பு பீன் பேஸ்ட் அல்லது சாக்லேட் நிரப்பப்பட்ட ஜியோவ் லாங் பாவ் ஆகியவையும் கிடைக்கும். நீங்கள் தைபேக்கு வந்துவிட்டு இந்த உணவகத்துக்கு செல்லவில்லை என்றால் நீங்கள் இங்கு வந்ததில் அர்த்தமில்லை என்கிறார் பாவ்லின் லியுங்.

சூடான மண்பானை: தைவானில் உணவை பகிர்ந்து கொள்வது ஒரு பிணைப்பான அனுபவம். இதைச் செய்வதற்கான சிறந்த வழிகளில் ஒன்று சூடான மண்பானை. பொதுவாக விரும்பிய உணவை சாப்பிடுவதற்கு நூற்றுக்கணக்கான வழிகள் உள்ளன. உங்கள் மேஜையில் பர்னருடன்கூடிய கெட்டில் வைக்கப்பட்டிருக்கும். காய்கறிகள், மெல்லியதாக வெட்டப்பட்ட இறைச்சித்துண்டுகள், கடல் உணவுகள், நூடுல்ஸ், டோஃபு மற்றும்

பாலைடைக் கட்டிகள் போன்றவற்றை தனித்தனியாக மேஜையில் கொண்டுவந்து வைப்பார்கள். சாப்பிட வந்தவர்கள் இவற்றில் எது தங்களுக்குப் பிடித்தமான உணவோ அதை கெட்டிலில் போட்டு சூப்பாக தயாரித்து சோயா குழம்பு, வேர்க்கடலை சாஸ், பார்பிக்யூ சாஸ், கொத்தமல்லி, பூண்டு போன்றவற்றைச் சேர்த்து சாப்பிட்டால் ருசியாக இருக்கும். பெரும்பாலான தைவானியர்கள் இதில் முட்டை சேர்ப்பார்கள். சில உணவகங்களில் தனித்தனியாக பானை வழங்கு வார்கள். சில இடங்களில் ஒரு பெரிய பானை வைக்கப்பட்டிருக்கும். அதில் ஒரு பகுதியில் காரக்குழம்பு மற்றொரு பக்கம் காரமில்லாத உணவுகளை சமைத்து சாப்பிடலாம். இப்படி பகிர்ந்து சாப்பிடுவது அலாதியானது. முன்பின் தெரியாதவர்கள்கூட மண்பானை உணவை பகிர்ந்து உண்டபின் நண்பர்களாக மாறிவிடுகின்றனர் என்று விளக்குகிறார் பால் கூவின் மனைவி சிசிலியா.

காலை உணவு: தைவான் மக்களின் காலை உணவு என்பது வேகவைத்த அரிசி மற்றும் சூடான சூப் முதல் காபி வரை. சில சமயம் பேக்கரி ரோல் ஆகவும் இருக்கலாம். எங்கள் உணவு சீனாவில் பல்வேறு பிராந்தியங்களின் தாக்கத்தைக் கொண்டுள்ளது. காலை உணவும் அப்படித்தான் என்கிறார் ஜூலி சூ. சீனாவின் வடக்குப்பதியிலிருந்து வந்த பன் மற்றும் பேக்கரி பொருள்கள், தெற்கு பகுதியிலிருந்து வந்த அரிசி மற்றும் கஞ்சி உள்ளிட்டவை. காலை உணவு மேற்கத்திய நாடுகளின் தாக்கத்தை பிரதிபலிக்கும் வகையில் இருக்கும். பாஸ்தாவுடன் மிளகு சாஸ் அல்லது ஹாம்பர்கர்ஸ் காலை உணவில் சில சமயங்களில் இடம்பெறும். சூவுக்கு பிடித்தமான காலை உணவு டான் பிங். அதாவது முட்டையுடன் கூடிய மொறு மொறுப்பான ரோல்கள். நீங்கள் இதை எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் பெறமுடியும். இதை திரவ உணவு மற்றும் காய்கறிகளுடன் சேர்த்து சாப்பிடலாம். அவருக்கு பிடித்தமான மற்றொரு உணவு வெங்காயத்துடன் பேக் செய்யப்பட்ட பன். இதை சாப்பிட்டு விட்டு சுவையான தேநீரோ அல்லது குளிர்பானமோ குடித்து விட்டால் காலை உணவு முடிந்தது. பாலுடன் சேர்ந்த பப்பிள் டீ இங்கு பிரபலமானது.

உணவுப் பொருள்கள் மையம்: மளிகைப்பொருள்கள் உள்ளிட்ட உணவுப் பொருள்களை விற்பதற்கு தனி மையங்கள் உள்ளன. இங்குள்ள சூப்பர் மார்க்கெட்டுகளில் மளிகைப் பொருள்கள், பாதி வேகவைக்கப்பட்ட பொருள்கள், சூடான மற்றும் இனிப்பு வகை உணவுகள், பழங்கள் போன்றவற்றை வாங்கலாம். ஜின்யி மாவட்டத்தில் ஏராளமான வர்த்தக வளாகங்கள் உள்ளன. இங்கு மிகச் சிறந்த உணவகங்களும் உள்ளன என்கிறார் லியுங்.

கன்வீனியன்ஸ் ஸ்டோர் ஃபுட்: தைவானின் கன்வீனியன்ஸ் ஸ்டோரின் ரசிகர். 7-லெவன் வளாகத்துக்குள் அஞ்சல் தபால்தலை வாங்குவதற்கோ அல்லது விழா நிகழ்ச்சிகளுக்கான டிக்கெட் வாங்குவதற்கோ, பார்சல் களை வாங்கவோ அல்லது பிறருக்கு அனுப்பவோ, மின்கட்டணம் செலுத்தவோ அவர் அங்கு போவதுண்டு. அப்போது காலை உணவு, மதிய உணவு அல்லது காபி அல்லது ஸ்நாக்ஸ் சாப்பிடுவதற்கு அந்த இடம் சிறந்ததாக இருக்கிறது என்கிறார் அவர். சோயா சாஸ், தேநீர் கலவையில் முட்டையும் இருந்தால் அதன் ருசியே தனி என்கிறார் விக்கி த்சோ. குழந்தை பருவத்தில் அவருக்கு பிடித்தமானது உலர்ந்த ரேமன் நூடுல்ஸ்களை பல்வேறு சுவைகளில் பதப்படுத்தி வைத்திருப்பார்கள். இதை சாப்பிட்டால் மொறு மொறு என்று வறுவல் போல இருக்கும். காலை உணவாக அவர் சாப்பிடுவது முள்ளங்கி ஊறுகாய் அல்லது பச்சை காய்கறிகள் அல்லது முட்டை, பன்றி இறைச்சி சேர்க்கப் பட்ட சாஸ் உடன்கூடிய அரிசி ரோல்கள் மற்றும் மி ஜியாங் என்று சொல்லப்படும் வேர்க்கடலை பால்.■

முன்பு அல்லது பார்வையிட்ட பின் கீழ்த்தளங்களில் பொருள்கள் வாங்க கடைகளுக்குச் செல்லவோ அல்லது உணவகங்களுக்குச் செல்லவோ அதற்கான நிறுத்தத்தில் செல்ல வேண்டும். இங்குள்ள டைன் தாய் ஃபங்க் உணவகம் மிகவும் பிரபலமானது. சிறிய கடைதான் என்றாலும் விதம் விதமான உணவுகளை இங்கே சுவைக்கலாம். (இதன் பிரதான கடை ஜின்யீ சாலையில் உள்ளது.). வெளிப்புற அழகை ரசித்துக்கொண்டே சாப்பிட வேண்டும் என்றால் 85 மற்றும் 86-வது தளங்களில் உள்ள உணவகங்களுக்குச் செல்ல வேண்டும்.

மலையேற்றம்

எழில் மிகுந்த நகரத்தின் தோற்றத்தை 360 டிகிரி கோணத்தில் படம்பிடிக்க வேண்டுமானால் 101வது மாடிக்குச் செல்லவேண்டும். தைபே 101 கட்டடத்துக்கு அடுத்த ரயில் நிறுத்தத்தில் உள்ள யானைமலையின் உச்சியிலிருந்து இன்னும் அழகாக படம்பிடிக்கலாம் என்கிறார் ரோட்ராக்டர் விக்கி த்சோ. 600 அடி உயரமான மலையில் படிகள் ஏறி உச்சிக்குச்சென்று இரவுநேரத்தில் பார்த்தால் மிகவும் ரம்மியமாக இருக்கும் என்கிறார் அவர்.

தைவான் மலைகளுடன்கூடிய அழகான தீவு. மலையேறுதல் உள்ளூர் மக்களின் பொழுதுபோக்கு. சுற்றுலாப் பயணிகள் அவசியம் பார்க்க வேண்டிய இடம் என்கிறார் விக்கி த்சோ. தீவின் வடக்கு முனையில் உள்ள யாங்க்மின்ஷான் தேசியப் பூங்கா. இந்த இடத்திற்கு பஸ்கள், வாடகை டாக்ஸி அல்லது கார் மூலம் செல்லலாம். மலையேறுவதற்கான பயிற்சிப் பாதைகள், நீர்வீழ்ச்சிகள், அடர்ந்த காடுகள், மற்றும் பசுமைப் புல்வெளிகள் இங்கு உள்ளன. ஆங்காங்கே லில்லி மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. பூங்காக்களைச் சுற்றி நிறைய உணவகங்கள் உள்ளன. சுற்றுலாப்பயணிகள் தங்கள் உணவு இடைவேளையை இங்கு வைத்துக் கொள்ளலாம் என்கிறார் அவர்.

இங்கு குவான்யின்ஷான் என்ற சிறிய மலை உள்ளது. இங்கு மலையேறினால் ஒரு மணி நேரத்துக்குள் உச்சியை சென்று அடைந்துவிடலாம் என்கிறார் ரோட்டேரியன் கோரி ஃபகுஹரா. மலை உச்சியில் உணவகங்கள் உள்ளன. இங்கு தைவான் மக்களின் விருப்ப உணவான சிக்கன் மண் சட்டியில் வழங்கப்படுகிறது. சிக்கனை வேகவைத்து பின் வறுத்து தருகிறார்கள் இதனுடன் நம்ம ஊரில் உள்ள கோபி மசாலா போன்ற சைட் டிஷ் உணவுகள், பீர் மற்றும் சூப்புகளும் கிடைக்கின்றன என்கிறார் ஃபகுஹரா.

வெப்ப நீரூற்றுக் குளியல்

தைபேயில் உள்ள கந்தக வெப்ப நீரூற்றுகள் சுற்றுலாப் பயணிகளிடையே பிரபலமானவை. ஆனால், உள்ளூர் வாசிகளுக்கு அது ஒரு வாழ்க்கை முறை. என்னுடைய நண்பர்கள் சிலர் தினமும் காலை அல்லது மாலை வேளைகளில் அங்கு செல்வதுண்டு என்கிறார் ரோட்டரி

நேஷனல் பேலஸ் அருங்காட்சியகம்.

லுங்ஷான் கோவில் உள்ளே.

மாவட்டம் 3500ன் PDG டோனி சாங். (இது இப்போது 3501 மற்றும் 3502 என்ற இரு மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது.).

இந்த நீரூற்றுகள் 95 முதல் 115 டிகிரி பாரன்ஹீட் வரை வெப்பமானவை. பொதுமக்களுக்கான இலவச குளியல் அறை முதல் சொகுசான கட்டணம் குளியல் அறைகளும் உள்ளன. அவரவர்கள் பட்ஜெட்டுக்கு ஏற்ற நீரூற்றுகளும் உள்ளன. நீச்சல் உடையுடன் இங்கு சென்று நீங்கள் குளிக்கலாம் அல்லது வெதுவெதுப்பான நீரில் கால்களை தொங்க விடலாம்.

தைபேயில் பெய்டூ ஹாட் ஸ்பிரிங்ஸ் மற்று யாங்மிங்ஷான் பகுதியைச் சுற்றி நிறைய நீரூற்றுகள் உள்ளன. தைபேயிலிருந்து ஒரு மணி நேர பயணத்தில் உள்ள ஜியாக்ஸியில் இருக்கும் நீரூற்றுகள் பிரபலமானவை. இங்குள்ள ஹோட்டல்கள் மற்றும் ரீஸார்டுகளில் திறந்தவெளி வெப்ப நீரூற்றுகள் உள்ளன. இவை மலைகள், காடுகளால் சூழப்பட்டவை. இங்கிருந்து கடலின் அழகை பார்த்து ரசிக்க முடியும்.

7,000 ஆண்டு சீன காலாசாரம்

தைபேயில் நாம் பார்க்க வேண்டிய இடங்கள் பல உள்ளன என்கிறார் ரோட்டரி மாவட்டம் 3480-இன் முன்னாள் ஆளுநர் யென்ஷென் ஹெஷியின் மனைவி காத்தரின் ஹெஷி. (இது பின்னர் ரோட்டரி மாவட்டம் 3481 மற்றும் 3482 என பிரிக்கப்பட்டது.). கடற்கரை மற்றும் மலைகள் நிறைந்த பகுதி. இங்குள்ள தேசிய அரண்மனை அருங்காட்சியம் ஒரு புதையலாகும்.

இந்த அருங்காட்சியகத்தில் ஏறக்குறைய 7,00,000 சீன கலைப்பொருள்கள் (அதாவது 5,000 பி.சி.இ.க்கு முற்பட்டவை) பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன என்கிறார் ஹெஷி. இவர் அந்த அருங்காட்சியகத்தின் முன்னாள் ஆவண காப்பகத் தலைவர் மட்டுமல்ல அதன் உறுப்பினர்களில் ஒருவர். விலையுயர்ந்த கற்கள், நுண்மையாக செதுக்கப்பட்ட விலங்குகளின் உருவங்கள், உலோக சிலைகள், பூவேலைப்பாடுகளுடனான ஜாடிகள், பழங்கால அணிகலன்கள் ஆகியவை அதில் இடம்பெற்றுள்ளன.

அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ள வெண்கலப் பொருள்களில் 13ம் நூற்றாண்டைச் சேர்ந்த மணியும் ஒன்றாகும். சடங்குகளில் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள், திருமணப் பொருள்கள், 9வது நூற்றாண்டைச் சேர்ந்த நிலமானியத்துக் கான பட்டயங்கள் ஆகியவையும் அடங்கும். மன்னர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட பெட்டகங்கள், மன்னர் குடும்பத்தினர் பயன்படுத்திய பொருள்கள், கலை நுணுக்கத்துடன் செதுக்கப்பட்ட தந்தங்கள் ஆகியவற்றையும் காணலாம்.

இவை தவிர ஓவியங்கள், கையெழுத்துப் பிரதிகள், மண் பாண்டங்கள் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன. இவற்றை பார்க்க வேண்டுமானால் மூன்று மணிநேரத்துக்கு குறையாமல் செலவிடவேண்டும் என்கிறார் ஹெஷி. இதற்கு கட்டணம் 12 டாலர். ஆனால் சுற்றுலாப் பயணிகளுக்கு இலவசம். ஆங்கிலத்தில் விளக்கங்கள் வழங்கப்படுகின்றன.

© Rotary

நான்கு இந்தியா-பாகிஸ்தான் ரோட்டரி திட்டங்களை அறிவிக்கிறார் ரவிசங்கர் டகோஜு

V முத்துக்குமரன்

பாகிஸ்தானில் உள்ள RID 3232 மாவட்டம் சார்பில் நடைபெற்ற 'எல்லையில்லா உலகம் மற்றும் அமைதி' குறித்த மெய்நிகர் கருத்தரங்கில் பேசிய பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் ரோட்டரி சங்க உறுப்பினர் ரோட்டேரியன் ரவிசங்கர் டோகஜு, பாதுகாப்புக்காக கோடிக் கணக்கில் பணம் செலவழிப்பதற்கு பதிலாக உலகை இணைப்பதற்கும் அமைதி ஏற்படுத்துவதற்கும் ரோட்டரியினர் இணைந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். இப்படிச் செய்தால் பாதுகாப்புக்காக செலவிடப்படும் பணத்தை கல்வி, சுகாதாரம் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்கு பயன்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

RID 3190ல் திரட்டப்பட்ட PHF புள்ளிகளை நன்கொடையாக வழங்குவதன் மூலம் TRF பாகிஸ்தானிடமிருந்து அதிக அளவில் PHF பெற உதவும் என்று டகோஜு யோசனை தெரிவித்தார். இதையடுத்து PDG சுரேஷ் ஹரி, தனது மற்றும் தன்னுடைய நண்பர்களின் தனிப்பட்ட கணக்குகளிலிருந்து 1,00,000 புள்ளிகளை நன்கொடையாக வழங்க ஒப்புக்கொண்டார். இந்த புள்ளிகள் RID 3272ல் உள்ள ரோட்டேரியன்கள் PHFகளாக மாறவும் புள்ளிகளை பரிமாற்றம் செய்துகொள்ளவும் முடியும். இந்த நல்லெண்ண நடவடிக்கை மூலம் இரண்டு நாடுகளும் ஒருபிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளமுடியும். அதுமட்டுமல்ல, TRF பலப்படுத்தப்படும், ரோட்டரி சகோதரத்துவமும் வலுப்படும் என்றார் டகோஜு.

மேலும் பாவ்லா டகோஜு ரவிசங்கர் அறக்கட்டளையிலிருந்து RID 3272க்கு லாகூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கொரோனா காலத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பழங்கள், காய்கறிகள் விற்பதற்காக 100 கை வண்டிகள் வாங்க 10,000 டாலர் நன்கொடையாக வழங்கப்படும். ஆரிப் அலி இதற்கான பயனாளிகள் பட்டியலை தயாரித்துள்ளார்.

மூன்றாவதாக, கர்தார்பூரில் உள்ள குருத்வாரா தர்பார் சாஹிப்பில் இந்திய யாத்ரீகர்கள் தங்குவதற்கான முயற்சியை அவரது மாவட்டக்குழு மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் இங்குள்ள ரோட்டேரியன்கள் பாகிஸ்தானில் உள்ள தங்கள் சக ரோட்டேரியன்களுடன் கலந்துரையாட வாய்ப்புக் கிடைக்கும். தற்போது சீக்கியர் கோவிலுக்கு வரும் யாத்ரீகர்களின் கட்டுபாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஒரு நாளில் இவ்வளவு பேர்தான் வருகை தரலாம், சில மணி நேரங்கள் மட்டுமே கோவிலில் தங்கலாம் என்ற கட்டுப்பாடு உள்ளது.

பெங்களூரிலிருந்து அமிருதசரஸுக்கு அமைதிப் பேரணி மேற்கொண்டு எல்லையில் கொடிகளை பரிமாறிக் கொள்ளவும் பாகிஸ்தான் ரோட்டரியினருடன் கருத்துக்களை பரிமாறக் கொள்ளவும் திட்டமிடப் பட்டுள்ளது.

ரவிசங்கரை பொருத்தவரை மதம் என்பது தனிப்பட்ட ஒன்று, அவர் ஹிந்து குடும்பத்தில் பிறந்திருந்தாலும் பாவ்லா ரோட்ரிக்ஸ் என்னும் ரோமன் கத்தோலிக்க பெண்ணை திருமணம் செய்துகொண்டார். இது கடவுளின் ஆசீர்வாதம். அடுத்த பிறவியிலும் அவளையே திருமணம் செய்துகொள்ள இறைவனை பிரார்த்திக்கிறேன் என்றார். அனைத்து மதத்தையும் சரிசமமாக மதிக்க வேண்டும் என்பதுதான் எனது தத்துவமாகும். நான் பல மதத்தவர்கள் உள்ள குடியிருப்பில் வசிக்கிறேன். இப்போது வரை எங்களுக்குள் வாக்குவாதமோ அல்லது மோதலோ ஏற்பட்டதில்லை. இதற்கு மாறாக நாங்கள் பல்வேறு பண்டிகைகளை மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகிறோம். வினோபா பாவேவை மேற்கோள் காட்டி, தேசிய அரசு என்ற கருத்து இந்த காலத்துக்கு ஒவ்வாது. நாம் எல்லையற்ற மாநிலத்தை நோக்கி போய்க்கொண்டிருக்கிறோம். நமது வளங்கள் பற்றாக்குறையாக இருக்கும்போது நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.5 சதவீதத்தை பாதுகாப்பு துறைக்காக செலவிடப்படுவதாக அவர் குறைகூறினார். அவற்றுக்கு பதிலாக அந்த தொகையை மக்களின்

வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்து வதற்கு செலவிடலாம் என்றார். நாட்டின் பெயரால் நாம் ஒருவருக்கு ஒருவர் சண்டையிட்டு உயிரை மாய்த்துக்கொள்கிறோம். நாம் விலங்குகளைவிட கேவலமாக இருப்பதுதான் நாகரீகமா? என்று கேள்வி எழுப்பினார்.

2014ம் ஆண்டு ஏப்ரலில் இந்தியா CSR சட்டத்தைக் கொண்டு வந்தது. இதேபோன்ற ஒரு சட்டத்தை பாகிஸ்தான் 2017ம் ஆண்டு நிறைவேற்றியது. அதாவது நிறுவனங்கள் தங்களது லாபத்தில் குறைந்தபட்சம் 2 சதவீதத்தை தொண்டு மற்றும் நன்கொடைகளுக்கு ஒதுக்குவதை கட்டாயமாக்கியது. இஸ்லாமி 1,400 ஆண்டுகள் பழமையானது ஜகாத் என்னும் அரசாணை. அதாவது முஸ்லிம்கள் தங்கள் வருடாந்திர வருமானத்தில் 2.5 சதவீதத்தை உன்னத காரணங்களுக்காக நன்கொடையாக வழங்குவதை கட்டாயமாக்கும் உத்தரவு. இந்த ஜகாத் மனதையும் ஆன்மாவையும் தூய்மைப் படுத்துகிறது. மனிதகுலத்துக்கு சமூகப்பொருளாதார நன்மைகளை வழங்குகிறது என்கிறார் ரவிசங்கர். ஜகாத் முஸ்லிம்களுக்கு என்ன செய்கிறதோ அதை ரோட்டரி அறக்கட்டளை ரோட்டேரியன்களுக்குச் செய்கிறது. அவர்கள் தங்கள் சொத்தில் அல்லது வருமானத்தில் ஒரு சிறிய பகுதியை சமூக நலத்திட்டங்களுக்கு வழங்க வலியுறுத்துகிறது.

ரோட்டரி சார்க் அமைதி மாநாடு

RID 3132க்கு உட்பட்ட அவுரங்காபாத் மெட்ரோ ரோட்டரி சங்கம் 'சிறந்த எதிர்காலத்துக்கான ஒன்றுபட்ட தெற்காசியா' என்ற தலைப்பில் அமைதிக்கான மெய்நிகர் கருத்தரங்கை நடத்தியது. இதில் பேசிய DG ஹரிஷ் மோத்வானி, இந்த பிராந்தியத்தில் உள்ள நாடுகள் அரசு சாராத நிலையில் ஒன்றிணைவதற்கான ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என்று ரோட்டரி தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். 1.75 லட்சம் ரோட்டேரியன்களைக் கொண்டுள்ள 4,850 சங்கங்கள் ஏராளமான வளங்களையும் அறிவையும் கொண்டுள்ளன. இதன் மூலம் நாம் தெற்காசியாவின் சூழலை மாற்றியமைக்க முடியும் என்றார். இந்த சார்க் அமைதி மாநாடு ரோட்டரியின் சர்வதேச நோக்கங்களில் ஒன்றை நிறைவேற்றுகிறது, அதாவது அமைதியை நிலைநாட்டுவது, மோதல்களுக்கு தீர்வுகாண்பது என்பதுதான் அது.

RID 3271ன் DG டாக்டர் பர்ஹான் எஸ்ஸா அப்துல்லா பேசுகையில், பாகிஸ்தானை பற்றிய தவறான எண்ணங்களை கைவிட வேண்டும். பாகிஸ்தானியர்களான நாங்கள் அமைதியைத்தான் விரும்புகிறோம். ரோட்டேரியன்கள் இங்கு வந்து தங்கி எங்கள் விருந்தோம்பலை அனுபவித்து நீங்கள் இங்கு தங்கியிருந்ததை நினைவுகூர வேண்டுகிறேன் என்றார்.

இலங்கையைச் சேர்ந்த, RID 3220 மாவட்டத்தின் PDG ஜார்ஜ் ஜேசுதாசன் பேசுகையில், உலக மக்கள் தொகையில் 23 சதவீதம், அதாவது 1.8 பில்லியன் மக்கள் தெற்காசியாவில்தான் உள்ளனர். ஆனால், மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.3 சதவீதம் மட்டுமே என்றார்.

RID 3292ச் சேர்ந்த PDG தீர்த்மன் சைக்கியா, கேசவ் குன்வர் இருவரும் தெற்காசியர்கள் கலாசார பரிமாற்றம் மற்றும் பரஸ்பரம் ஒத்துழைப்பு மூலம் உலக அமைதியை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். மக்களின் அடிப்படைத் தேவைகளான வறுமையை போக்குதல், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற சமூக நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் கருத்தொற்றுமை தேவை என்று குறிப்பிட்டார். வங்கதேசத்தைச் சேர்ந்த முன்னாள் மாவட்ட ஆளுநர் (RID 3281) PDG சலீம் ரீஸா பேசுகையில், கலாசார பரி மாற்றம் சார்க் நாடுகளைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் பங்கேற்கும் விளையாட்டுப் போட்டிகள், வின்ஸ் திட்டங்கள், மருத்துவச் சேவை ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தினால் அது துணைக்கண்டத்தில் மக்களை ஒன்றிணைப்பதாக இருக்கும் என்றார்.

தடையில்லா வர்த்தகம்

சலீம் ரீஸாவின் கருத்துக்களை எதிரொலித்த PDG அலோக் பில்லூர், RID 3131, நாம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறோம். வல்லரசு கள் ஆயுதங்கள் விற்பனை மூலம் அவ்வப்போது பதற்றத்தையும் மோதலையும் ஏற்படுத்தி வருகின்றன. அமைதித் தரகர்களாகவும் நல்லெண்ண தூதர்களாகவும் ரோட்டேரியன்கள் செயல்படுவதன் மூலம் மோதல்களை தவிர்க்க முடியும் என்றார்.

தெற்காசிய சுதந்திர வர்த்தக பகுதி (சாஃப்டா) என்பது நாடுகளுக்கிடையே வர்த்தகத்தை மேற்படுத்துவதற்கான நல்ல ஏற்பாடு. RSAARC (R for Rotary) என்ற அமைப்பை ஏற்படுத்தி ரோட்டேரியன்கள் வருடாந்திர கூட்டங்களை நடத்தி இணைந்து திட்டங்களைச் செயல்படுத்தலாம் என்று பில்லூர் யோசனை தெரிவித்தார்.

அவுரங்காபாத் மெட்ரோ ரோட்டரி சங்க முன்னாள் தலைவர் சந்திரகாந்த் சௌதரி கருத்தரங்கை ஒருங்கிணைத்து நடத்தினார்.■

மேலிருந்து இடமாக: DG *தஸ்நீம் அகமது* (RID 3272), PDG *மீர் ஆரிப் அலி,* PDG *சமீர் ஹரியாணி* (RID 3190), Rtn *ரவிசங்கர் மற்றும் அவர் மனைவி பாவ்லா.*

இசையும் & இனிமையும்

SPB
இசை உலகின் “தவப்புதல்வன்”

S R மது

அவருக்கு அற்புதமான குரல். அவரால் முகமது ரஃபி போல குரலை உயர்த்தியும் பாடமுடியும், கிஷோர்குமார் போல் மனதை மயக்கும் வகையிலும் பாடமுடியும். ஏன் A M ராஜா போல் மனதை வருடும் பாடல்களையும், T M சௌந்திரராஜன் போல் ஸ்ருதி சுத்தமாகவும் பாடமுடியும். “மனசு சரியில்லாமல் இருந்தால் நான் SPB யின் பாடல்களைக் கேட்பேன். அது எனக்கு புத்துணர்ச்சி அளிக்கும்” என்கிறார் சுஹாசினி மணிரத்னம்.

16 மொழிகளில் 45,000 பாடல்கள்: பின்னணிப் பாடகர் என்ற முறையில் அவரது சாதனைகள் வியப்பூட்டு கின்றன. 54 ஆண்டுகளில், 16 மொழிகளில் 45,000த்துக்கும் மேலான பாடல்களை SPB பாடியுள்ளார். இது தவிர 40 திரைப்படங்களுக்கு இசையமைத்திருக்கிறார். 45 படங்களில் நடித்திருக்கிறார். பல முன்னணி நடிகர்களுக்காக தெலுங்கு டப்பிங் பேசியுள்ளார். “காந்தி” திரைப்படத்தின் தெலுங்கு பதிப்புக்காக பென்கிங்ஸ்லிக்காக குரல் கொடுத்திருக்கிறார்.

அனில்கபூர், ரஜனிகாந்த், கிரிஷ் கர்நாட் ஆகியோருக்கும் குரல் கொடுத்துள்ளார். ஆறு முறை தேசிய விருதுகள், ஆந்திரத்தின் நந்தி விருதை 25 முறையும், நான்குமுறை தமிழக அரசின் விருதுகளையும், மூன்று முறை கர்நாடக அரசின் விருதுகளையும் பெற்றுள்ளார். 2001ம் ஆண்டு பத்மஸ்ரீ விருதும், 2011ல் பத்ம பூஷண் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஒரே நாளில் 19 பாடல்கள் பதிவு: ஒரே நாளில் கன்னடப்படம் ஒன்றுக்காக 21 பாடல்களையும், ஒரே நாளில் 19 தமிழ்ப்பட பாடல்களையும், ஒரே நாளில் ஹிந்தி படத்துக்காக 16 பாடல்களையும் பாடி சாதனை படைத்துள்ளார். உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான இசை நிகழ்ச்சி களை நடத்தியுள்ளார். தெற்கு பகுதியிலிருந்து சென்று ஹிந்தி பட உலகில் காலடிவைத்த முதல் பாடகர். முதல்முதலாக சல்மான்கானுக்காக குரல் கொடுத்துள்ளார்.

வளமான குரல்கள்: 1980ம் ஆண்டில் வெளியான "சங்கராபரணம்" திரைப்படம் கர்நாடக இசையின் மகத்துவத்தை எடுத்துக்காட்டும் படமாகவும், எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் வளமான குரலை எடுத்துக்காட்டும் வகையிலும் அமைந்தது. இந்த படத்தில் SPB 6 டூயட் பாடல்கள் உள்பட 9 பாடல்களைப் பாடியிருந்தார். கர்நாடக இசை பற்றி முழுமையாகத் தெரியாதவர்கள் கூட பாடலுக்காக அந்தப்படத்தை ரசித்துப் பார்த்தனர். இத்தனைக்கும் SPB முறைப்படி கர்நாடக சங்கீதம் படித்தவர் அல்ல.

ஒரு அகராதி உங்களை நல்ல எழுத்தாளராக்காது. ஆசிரியர்களும் வகுப்பறைகளும் உங்களை ஒரு நல்ல பாடகராக உருவாக்காது. ஏன் திறமை மட்டும் உங்களை உயரத்துக்கு இட்டுச் செல்லாது. ஆனால், SPB யிடம் நினைவாற்றல், எதையும் உடனடியாக கிரகித்துக் கொள்ளும் திறமை, பாடல்களை வெளிப்படுத்தும் திறன் ஆகியவை இயற்கையாகவே அமைந்திருந்தது. நடிகர் சிவாஜி கணேசன், எவ்வளவு பெரிய வசனமாக இருந்தாலும் அதை வேகமாக மனப்பாடம் செய்துவிடுவார். அந்த ஆற்றல் அவரிடம் இருந்தது. அதேபோல பாடல்களையும், டியூன்களையும் வேகமாக உள்வாங்கும் சக்தி SPB யிடம் இருந்தது என்கிறார் வைரமுத்து. ஒரு டியூனை 15 நிமிடங்களுக்குள் உள்வாங்கி, அதற்கான பாடலை பத்து நிமிடங்களில் பாடி பதிவு செய்யும் திறன்படைத்தவர் SPB என்கிறார் A R ரஹ்மான்.

ரஃபியைப் போலவே குரல் மாற்றிப்பாடுவார்: காதல் ரசம் சொட்டும் பாடல்களைப் பாடுவதில் SPB வல்லவர். இளைஞர் பாடுவது போல உணர்வு வரவேண்டும் என்பதற்காக மூக்குக்கும் தொண்டைக்கும் இடையே பாடுவார். தத்துவப் பாடல்களைப் பாடும் போது முதிர்ச்சியானவர் போல் குரலை மாற்றிப் பாடுவார். SPB பாடல் வரிகளில் சில இடங்களில் "ரஃபி" என்று குறிப்பிட்டிருப்பாராம். அந்தப் பாடலை பாடும்போது சில இடங்களில் ரஃபியைப் போலவே



SPB, Sஜானகி மற்றும் இளையராஜாவுடன்.

இந்தி நடிகர் சல்மான் கானுடன்.

சென்னை அருகே பெரும் பாக்கத்தில் அமைக்கப்பட்ட ரூ.7 கோடி செலவிலான அரசுப் பள்ளிக்கு நன்கொடை வழங்க SPB முன்வந்ததாக அனில் சீனிவாசன் தெரிவித்தார். அந்தப் பள்ளி 2015-ஆம் ஆண்டு வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தினருக்காக நிர்மாணிக்கப்பட்டது. அந்தப் பள்ளிக்காக எனக்கிருந்த செல்வாக்கு காரணமாக அமெரிக்காவில் உள்ளவர்களிடமிருந்து ரூ.2 கோடி நிதி திரட்டி கொடுத்தேன். இதை அறிந்துகொண்ட SPB என்னுடன் தொடர்பு கொண்டு ஒரு குறிப்பிட்ட தொகையை நன்கொடையாக வழங்கினார் என்றார் சீனிவாசன்.

குரலை மாற்றிப்பாடுவார் என்கிறார் மற்றொரு பாடகரான சுரேந்திர மேனன்.

பியானோ வாசிக்கும் அனில் சீனிவாசன், SPB மகிழ்ச்சியில் கூட சிலசமயங்களில் துயரத்தையும் வெளிப்படுத்திப்பாடுவார் என்கிறார்.

ஒரு நல்ல பாடகர், மனிதநேயம் மிக்க நல்ல மனிதராக இருக்க வேண்டும் என்று SPB அடிக்கடி சொல்லுவார். மனோ போன்ற இளம் பாடகர்களின் வெற்றிக்கு SPB உறுதுணையாக இருந்தார். மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தால் கடந்த ஆண்டு

ஒரு நல்ல பாடகர், மனிதநேயம் மிக்க நல்ல மனிதராக இருக்க வேண்டும் என்று SPB *அடிக்கடி சொல்லுவார்.*



இடதிலிருந்து: K V *மகாதேவன்,* P *சுசீலா மற்றும்* SPB.

SPB ரசிகர்கள் சங்கம் அமைதியாக பல நல்ல காரணங்களுக்காக கோடிக்கான ரூபாய்களை நன்கொடையாக வழங்கியுள்ளது என்றும் பியானோ சீனிவாசன் மேலும் கூறினார்.

'சுமதி என் சுந்தரி' படப் பாடல் பதிவில் சிவாஜி கணேசனுடன்.

ஆரம்ப நாட்கள்: 1946ம் ஆண்டில் நெல்லூர் மாவட்டத்தில் கொன்னெட்டம்மபெட்டா கிராமத்தில், கட்டுப்பாடுகள் நிறைந்த ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தார் S P பாலசுப்பிரமணியம். இசைசூழல் நிறைந்த குடும்பம். அவரது தந்தை ஹரிகதா காலட்சேபம் செய்யும் கலைஞராக இருந்தார். சிறுவனாக இருந்தபோது அவரது லட்சியம் என்ஜினீயரிங் படித்துவிட்டு மாதம் ரூ.250 சம்பாதிக்கும் ஒரு அரசு அதிகாரியாக இருக்க வேண்டும் என்பதுதான். ஆனால், PUC படிப்பில் தோல்வி அடைந்ததால் அவரது கனவு நிறைவேறவில்லை. பின்னர் AMIE படிக்கும் கனவோடு சென்னைக்கு வந்தார்.

18 வயதில் சென்னையில் நடந்த ஒரு அமெச்சூர் பாடல் போட்டியில் கலந்துகொண்டு வெற்றிபெற்றார். இதைத் தொடர்ந்து தெலுங்குபடம் ஒன்றில் முதன்முதலாகப் பாட அவருக்கு வாய்ப்பு கிடைத்தது. 1969ம் ஆண்டில் பிரபல பின்னணிப் பாடகராக இருந்த TMSவுடன் எம்.ஜி.ஆருக்கு சில கருத்து வேறுபாடுகள் இருந்தது. அப்போது இளைஞரான SPB பாடிய தெலுங்கு படத்தின் பாடல் எம்.ஜி.ஆரை மிகவும் கவர்ந்தது. உடனே தாம் ஜெயலலிதாவுடன் நடித்து வந்த அடிமைப்பெண் படத்துக்கான பாடலை பாட வருமாறு SPBக்கு அழைப்புவிடுத்தார். K V மகாதேவன் இசையமைப்பில் எம்.ஜி.ஆருக்காக அவர் பாடிய "ஆயிரம் நிலவே வா" ஹிட்டானது. இந்த பாடலைப் பதிவு செய்வதற்கு முன்பாக SPB டைபாய்டு நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அவர் குணமடைந்து வரும் வரை எம்.ஜி.ஆர். காத்திருந்தது குறிப்பிடத்தக்கது.



A R ரஹ்மானுடன்.

காலத்தால் அழியாத வெற்றிப்பாடல்: எம்.ஜி.ஆருக்காக அவர் பாடிய ஆயிரம் நிலவே வா பாடல் காலத்தால் அழிக்கமுடியாத வெற்றிப்பாடலாக அமைந்தது. இதற்காக எம்.ஜி.ஆர்., SPBக்கு தங்க மோதிரம் ஒன்றை பரிசாக அளித்தார். முன்னதாக M S விசுவநாதன் இசையமைப்பில், ஜெமினிகணேசன்-காஞ்சனா நடித்த "சாந்தி நிலையம்" படத்துக்காக "இயற்கை என்னும் இளைய கன்னி"என்ற டூயட் பாடலை SPB பாடினார். அந்தப் பாடலும் படு ஹிட்டானது.

முதலில் சங்கராபரணம் திரைப்படத்திற்கான பாடல்களை பிரபல இசைக் கலைஞர் பாலமுரளி கிருஷ்ணா பாடுவதாகத்தான் இருந்தது. ஆனால், இசையமைப்பாளர் M S விசுவநாதன், அந்தப் படத்தில் SPB பாடவேண்டும் என்று விரும்பினார். இது SPBக்கு முக்கிய திருப்பமாக அமைந்தது. அந்தப் படத்தில் அவர் பாடிய

பாடல்கள் அனைத்தும் வெற்றிப் பாடல்களாக அமைந்தன. அந்தப் படத்தில் "ஓங்கார நாதனு" பாடலை சிறப்பாக பாடியதற்காக சிறந்த பின்னணி பாடகருக்கான தேசிய விருது அவருக்கு கிடைத்தது. அடுத்த ஆண்டே "ஏக் தூஜே கேலியே" ஹிந்தி படத்தில் அவர் பாடிய "தேரே மேரே பீச் மெய்ன்" படப் பாடலுக்காக இரண்டாவது முறை அவருக்கு தேசிய விருது கிடைத்தது. இவற்றைத் தொடர்ந்து ஒரு சாதனை நிறைந்த பயணத்தைத் தொடங்கினார் SPB பாடகர், இசையமைப்பாளர், பின்னணி குரல் கொடுப்பவர் என அவரது பயணம் தொடர்ந்தது. மிகப்பெரிய இசையமைப்பாளர்கள், நடிகர்கள், பாடகர்கள், சினிமா இயக்குநர்களுடன் அவருக்கு நெருக்கம் அதிகரித்தது.

Rtn *சுரேந்திரன் மேனன்* SPB *மெட்ராஸ் சவுத் நடத்திய ஒரு விழாவில் பாடியதற்கு கௌரவிக்கிறார்.* PRID P T *பிரபாகர் மற்றும்* PDG ISAK *நாசர் ஆகியோரும் உள்ளனர்.,*

விதிமீறல்: சாதாரணமாக பாடகர்கள் என்றால் ஐஸ்கிரீம், இனிப்புகள், குளிர்ந்த தண்ணீர், குளிர்பானங்கள், குளிர்ந்த தயிர் ஆகியவற்றை குரல்வளம் கெட்டுவிடும் என்று தவிர்த்து விடுவார்கள். ஆனால், SPB இவை அனைத்தையும் விரும்பினார். 30 ஆண்டுகளாக அவர் புகைப்பிடித்து வந்தார். பின்னர் மகள் பல்லவியின் வேண்டுகோளுக்கு இணங்க அதை கைவிட்டார்.

2012ம் ஆண்டு தனது உடல் எடையை குறைப்பதற்காக சிறப்பு அறுவைச்சிகிச்சையை செய்து கொண்டதால் உடல் எடை 126 கிலோவிலிருந்து 95 கிலோவாகக் குறைந்தது.

பல ஆண்டுகளுக்கு முன்பு அவருக்கு தொண்டையில் ஏற்பட்ட முடிச்சு, பாடல்களை பாடுவதற்கு தடையாக இருந்தது. அதை அகற்றுவதற்காக அறுவைச்சிகிச்சை செய்து கொண்டார். முன்னதாக லதா மங்கேஷ்கர் SPB யை அழைத்து இது ஆபத்தான சிகிச்சை ரிஸ்க் எடுக்க வேண்டாம் என அறிவுறுத்தினார். ஆனால், அதிர்ஷ்டவசமாக அவரது குரல் வளத்துக்கு இதனால் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

ஹிந்தி படங்களில் பாடுவதற் காக அவர் மும்பை சென்றிருந்த நேரம். ஏக் தூஜே கேலியே பாடல் பதிவின்போது லதா மங்கேஷ்கரின் புடவையில் தேநீரைக் கொட்டிவிட்டார். உடனே அவர் பதறிப்போனார். ஆனால், லதா, அவரிடம் கவலைப்படாதே இது ஒரு நல்ல சகுனம்தான் என்று கூறி அமைதிப்படுத்தினார்.

இளையராஜா மற்றும் MS விஸ்வநாதனுடன்.

SPB யின் பிரபலமான பாடல்கள் சில: SPB ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றில் சில.

- தில் திவானா-மைனே பியார் கியா-(1980).
- என்ன சத்தம் இந்த நேரம்-புன்னகை மன்னன் - (1986)
- நிலவே வா- மௌனராகம்-(1986).
- மண்ணில் இந்த காதலன்றி-கேளடி கண்மணி- (1990).
- சுந்தரி கண்ணால் ஒரு சேதி-தளபதி- (1991).

- காதல் ரோஜாவே - ரோஜா - (1992).
- தீதி தேரா திவானா - ஹம் ஆப்கே ஹெய்ன் கௌன் - (1994).
- மலரே மௌனமே - கர்ணா - (1995).
- தங்கத் தாமரை மகளே - மின்சாரக் கனவு- (1997).

SPB யின் தாக்கங்கள்: நான் ஹீரோவாக பார்ப்பது ஹிந்தி திரைப்பட பின்னணிப் பாடகரான முகமது ரஃபியைத்தான். என்னைவிட யாரும் அவரின் மிகப் பெரிய ரசிகராக இருந்து விட முடியாது. நான் அவரது பாடல்களைக் கேட்கும் போது எனக்கு ஒரு சிலிர்ப்பு ஏற்படுகிறது என்பார் SPB ஒரு முறை ரஃபி குடும்பத்தினர் முன் அவரது பாடல்களை SPB பாடிக்காட்டினார். இதைக்கேட்டு அவர்கள் மிகவும் ரசித்தனர். திரையில் வரும் கதாநாயகிகள் ஹிரோக்களை காதலிப்பதில்லை. அவருக்காக பாடும் முகமது ரஃபியின் பாடல்களைத்தான் காதலிக்கிறார்கள் என்பார் SPB முகமது ரஃபியுடன் சேர்ந்து பாட வேண்டும் என்று SPB ஆசைப்பட்டார். ஆனால், ஸ்டுடியோவில் ஒரு முறை அவரது சிலையைத் தொட்டு வணங்கத்தான் அவரால் முடிந்தது.

SPB கமலஹாசனுடன் மிகவும் நெருக்கமான நட்புடன் இருந்தார். "கமலும் நானும்" என்னும் நிகழ்ச்சியை நடத்த SPB உதவினார். கமலின் ஏறக்குறை. 110 தெலுங்கு படங்களுக்கு SPB தான் பின்னணி குரல் கொடுத்துள்ளார். SPB என்னுடைய வாழ்க்கையின் ஒரு பகுதியானவர் என்று கமல் தெரிவித்துள்ளார்.

இசையமைப்பாளர் இளையராஜாவுடன் SPB யின் நட்பு மிக ஆழமானது. இருவரும் 50 ஆண்டுகளுக்கு மேல் நண்பர்களாக இருந்துள்ளனர். இளையராஜா தலைமையில் அவர் 2,000 பாடல்களுக்கு மேல் பாடியுள்ளார். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இளையராஜா தாம் இசையமைத்த பாடல்களுக்கு ராயல்டி விவாகரத்தை எழுப்பியதை அடுத்து இருவருக்கும் இடையே உறவில் விரிசல் ஏற்பட்டது. இளையராஜா, எஸ்.பி.பி.மீது வழக்கு தொடுவதற்காக நோட்டீஸ் அனுப்பினார். எனினும் பின்னர் அவர்களுக்குள் சமாதானம் ஏற்பட்டது. அவர்கள் இருவரின் மகன்களும் நெருங்கிய நண்பர்கள்.

ஜேசுதாஸ்தான் எனது குரு: எஸ்.பி.பாலசுப்பிரமணியம், பிரபல பாடகர் ஜேசுதாஸை தனது குருவாகவே கருதினார். அவர்கள் இருவரும் சேர்ந்து இந்தியாவிலும் வெளிநாடு களிலும் இசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர். 2017ம் ஆண்டில் தனது சினிமா வாழ்க்கையில் 50 ஆண்டுகளைக் கொண்டாடும் விதமாக ஒரு சர்வதேச பயணத்தை தொடங்குவதற்கு முன், ஜேசுதாஸுக்கு பாதபூஜை செய்தார்.

கவிப்பேரரசு வைரமுத்து SPB க்காக 1,500க்கும் மேலான பாடல்களை எழுதியுள்ளார். சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நிகழ்ச்சியில் வைரமுத்துவின் பாடல்களைப் பற்றி SPB கூறுகையில், நீங்கள் ஒரு முறையாவது காதலில் தோல்வி அடைந்திருந்தாலன்றி இதை எழுத முடியாது என்றார். பின்னர் அந்தப் பாடலை SPB பாடல் வரிகளின் அடிப்படையில் பாடினார். அப்போது வைரமுத்து, நீங்கள் குறைந்தது இரண்டு முறையாவது காதலில் தோல்வி அடைந்திருந்தாலன்றி இந்தப் பாடலை இப்படி பாடியிருக்க முடியாது என்றார்.

"பாடும் நிலா" (இந்த பட்டம் எஸ்.பி.பி.க்கு எம்.ஜி.ஆர். கொடுத்தது) இப்போது அமைதியாகிவிட்டது. ஆனால், அதன் ஒலி என்றென்றும் பிரகாசமாக இருக்கும்.■

K J யேசுதாஸ் அவர்களுக்கு பாதபூஜை செய்யும் SPB மற்றும் அவரது மனைவி.

இசை இருக்கும்வரை S P B குரல் ஒலிக்கும்!

உஷா குமார்

பிரபல பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் மறைவு லட்சக்கணக்கான ரசிகர்களுக்கு அதிர்ச்சியை எற்படுத்தியது. அவர் மறைந்து விட்டாலும் நமக்காக 42.000 பாடல்களை விட்டுச் சென்றுள்ளார். அவரது இழைப்பை நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக ஜீரணித்தனர். ஒரு சிலர் கொரோனா வைரஸ் தொற்றின் ஆபத்தையும் பொருட்படுத்தாமல் அவரது வீட்டுக்கு விரைந்தனர். வேறு சிலர் வீட்டிலிருந்தபடியே தொலைக்காட்சியில் எஸ்.பி.பி.யின் பாடல்களைக் கேட்டனர். தனது இனிமையான பாடல்களால் இதயங்களைக் கவராத ஆத்மாவே இல்லை என்றுகூட சொல்லலாம். எளிமைதான் அவரது மகத்துவம். எப்போதும் அமைதியாகப் பேசும் குணமுடைய பெரிய மனிதர். ஐந்து பிறவிகளில் செய்யவேண்டிய சாதனைகள அவர் ஒரே பிறவியில் செய்துவிட்டார்.

1960களின் பிற்பகுதியில் ஷ்ரீபதி பண்டிதரதயுல பாலசுப்பிரமணியம் என்ற பெயரை நான் முதல் முதலாக கேட்டேன். ஒரு நாள் மாலை, சென்னையில் உள்ள கேரள சமாஜத்தில் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. K J யேசுதாஸ், P ஜெயச்சந்திரன், P சுசீலா, S ஜானகி, P வசந்தா போன்ற பிரபலங்கள் நிகழ்ச்சியில் திரைப்பாடல்களைப் பாடினர். இசைக்குழுவுக்கு R K சேகர் (A R ரஹ்மானின் தந்தை) தலைமை வகித்ததாக நினைவு. முன்னணிப் பாடகர்கள் அனைவரும் முதலில் பாடினர். இடைவேளைக்குப் பிறகு ஓர் அறிவிப்பு. புதிதாக ஒரு இளம் பாடகர் A M ராஜாவின் இரண்டு பாடல்களைப் பாடுவார் என தெரிவிக்கப்பட்டது. அந்த இளைஞரின் பெயர் பாலசுப்பிரமணியம் என்றும் என்ஜினீயரிங் மாணவர் என்றும் அறிமுகம் செய்யப்பட்டது. எம்.ஜி.ஆருக்காக அவர் பின்னணி பாடி ஒரு பாடலை பதிவு செய்துள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது.

எம்.ஜி.ஆர்., தான் நடிக்கும் படத்தில் தனக்காக யார் பாட வேண்டும் என்று முடிவு செய் வாராம். அப்போதுதான் தெரிந்தது அவரது புத்திசாலித்தனம். அவரது படத்தின் வெற்றிக்கு பாடல்களே முக்கிய காரணமாக அமைந்தன. திறமையில் குறைந்த எவரையும் அவர் தனக்காக பாடுவதற்கு ஒருபோதும் அனுமதித்ததில்லை.

S P பாலசுப்பிரமணியம் கொஞ்சம்கூட பிசிறு இல்லாமல் நன்றாகப் பாடினார். அன்று இசை நிகழ்ச்சியை கேட்க வந்திருந்த பெரும்பாலானவர்கள், அவருக்கு நல்ல எதிர்காலம் இருப்பதாகவே கணித்தனர்.

அடுத்த 6 மாதங்களில் இரண்டு படங்களும் இரண்டு பாடல்களும் வெளியிடப்பட்டன. சினிமா உலகிலேயே ஒரு பரபரப்பு காணப்பட்டது. உலகெங்கிலும் உள்ள இசை ஆர்வலர்கள் எஸ்.பி.பி. என்ற புதுமுகத்தை அறிந்துகொண்டனர். எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா இணைந்து டூயட் பாடிய "ஆயிரம் நிலவே வா" (படம்- அடிமைப் பெண்) பாடலும், ஜெமினி கணேசனும் நடிகை காஞ்சனாவும் காதல்வயப் பட்டு பாடிய "இயற்கை என்னும் இளையகன்னி" (படம்-சாந்தி நிலையம்) பாடலும் ரசிகர்களை சுண்டியிழுத்தன. 23 வயது இளைஞரான S P பாலசுப்பிரமணி யம், சினிமா உலகில் பின்னணிப் பாடகராக தனது அடையாளத்தை பதித்தார். முதல் படத்திற்கு K V மகாதேவனும் இரண்டாவது படத்துக்கு M S விசுவநாதனும் இசையமைத் திருந்தனர். இரண்டு சிங்கங்கள் அவரை பயன்படுத்தி



S P பாலசுப்ரமணியம் இசைஞானி இளையராஜாவுடன்.

யதால் அன்று முதல் அவருக்கு பின்னடைவு என்பதே இல்லை.

நான் ஒன்றும் இசை நிபுணர் அல்ல. ஆனால், வார வேலை நாட்களை நான் S P B பாடிய சிவ ஸ்துதியுடன் தான் தொடங்குகிறேன். மிகுந்த அர்ப்பணிப்புடன் அதை அவர் பாடியிருந்தார். அவரது பாவமும், பக்தியும் ஒப்பிடமுடியாதவை. ஏன் கடவுளே கூட அதை மறுக்கமுடியாது.

இசைத்துறையில் அவர் நுழைந்து 54 ஆண்டுகள் ஆன போதிலும் சினிமாத் துறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. ஆனால், எஸ்.பி.பி.யின் குரல் மட்டும் மாறாமல் எப்போதும் போலவே இருந்தது. அவர் யாருக்காக பாடுகிறாரோ அதற்கு ஏற்றவாறு குரலை மாற்றியமைக்கும் திறன் அவரிடம் இருந்தது. அவரது பின்னணி அந்த தலைமுறையினருடன் நின்றுவிடவில்லை. ரஜினிகாந்த், கமலஹாசன், விஜய், அஜித் என பட்டியல் நீண்டுகொண்டே போனது. தமிழ் சினிமா உலகில் உள்ள ஒரு சிலரின் பெயரைத்தான் நான் குறிப்பிட்டுள்ளேன். மற்ற மொழிப்படங்களைச் சேர்ந்த ஹீரோக்களுக்காகவும் அவர் பின்னணி பாடியுள்ளார். பின்னணி பாடுவதில் அவருக்கு இருந்த திறமை கடவுள் கொடுத்த பரிசு என்றே சொல்ல வேண்டும்.

சினிமாவில் சாதாரணமாக இருந்தவர்கள் பலர் அவரது பாடலினால் ஹீரோக்களாக ஜொலித்திருக்கிறார்கள். 1980களின் பிற்பகுதியிலும் 1990களின் முற்பகுதியிலும் திரைப்படங்களின் வெற்றியில் பாடல்கள் முக்கிய பங்கு வகித்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஒரு விடியோவை பார்த்தபோது தான் இளையராஜா மற்றும் அவரது சகோதரர்கள் மற்றும் பாரதிராஜா போன்றவர்கள் திரைத்துறைக்கு கொண்டுவருவதில் எஸ்.பி.பி. முக்கியப் பங்கு வகித்தது தெரியவந்தது. அவர்கள் மூவருமே தங்கள் திறமையை நிரூபித்து சினிமா உலகில் நிலைத்து நின்றவர்கள் என்றாலும், சினிமாவில் நுழைவது என்பது சற்று கடினம்தானே! செஸ் விளையாட்டில் வழிகாட்டியான விசுவநாதன் ஆனந்த், தனது சென்னை கோல்ட்ஸ் அணியின் ஆதரவாளராக எஸ்.பி.பி.யை அங்கீகரித்தது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

"பாடும் நிலா" என்ற அடையாளத்தை பெற்ற S P B என்ற சிறந்த பாடகரை மட்டும் நாம் இழக்கவில்லை. மனிதநேயம் மிக்க சிறந்த மனிதரையும் நாம் இழந்துவிட்டோம். அவருடைய காலத்தில் வாழ்ந்த நாம் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்.

இந்த உலகில் இசை இருக்கும் வரை S P Bயின் இனிமையான குரலும் நம்மை கவர்ந்து இழுக்கும் என்று சொன்னால் அது மிகையாகாது.■

TRF **உதவியுடன் நற்பணி**

காளியன்புரா-வில் ஹீமோடயாலிசிஸ் வசதிகளை நீட்டிக்கும் ரோட்டரி

ரோட்டரி செய்திக்குழு

கர்நாடகத்தின் உடுப்பியிலிருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவிலுள்ள காளியன்புரா கிராமத்திலுள்ள கோரெட்டி மருத்துவமனைக்கு மூன்று ஹீமோடயாலிசிஸ் இயந்திரங்களை வழங்கியது RC காளியன்புரா, RID 3182. ரூ.29 லட்சம் ($40,871) மதிப்புள்ள இந்தத் திட்டம், TRF, RC செஸ்டர் கவுன்டி, RID 7450, RC ஸ்மித்ஃபீல்ட், RID 7410க்கு வழங்கிய ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாக ஆதரிக்கப் பட்டதாகச் சங்கத் தலைவர் டெஸ்மண்ட் A வாஜ் தெரிவித்தார். DG ராஜாராம பட், PDGகள் சதானந்த சத்ரா, அபினந்தன் ஷெட்டி ஆகியோர், சங்க உறுப்பினர்கள், மாவட்ட அலுவலர்கள் முன்னிலையில், இந்த இயந்திரங்கள், மின் உருவாக்கி, RO நீர்த் தூய்மைப் படுத்தி, காற்றுக் குளிரூட்டிகள், மருத்துவமனைப் படுக்கைகளைத் தலைமை மருத்துவ அலுவலர் டாக்டர் ஜோய்ஸ் ஜேம்ஸ், சிறுநீரக வல்லுனர் டாக்டர் ராகவேந்திர நாயக் ஆகியோரிடம் வழங்கினார்கள்.■

PDG சதானந்த சத்ரா டயாலஸிஸ் கருவியை இயக்கி வைக்கிறார். (வலதிலிருந்து) AG தேவதாஸ் ஷெட்டி, PDG அபினந்தன் ஷெட்டி, சங்கத் தலைவர் டெஸ்மண்ட் வாஸ் மற்றும் DG ராஜாராம புட் ஆகியோரும் உள்ளனர்.

உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிப்பு, சர்வதேச மானிய உதவியுடனான பெரிய திட்டங்கள்

ராஜேஷ் அகர்வால்

என்ஜினீரியங் தொழில், RC கோட்டா, RID 3054.

ரோட்டரி உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பது, அதன் மூலம் ரோட்டரிக்கு நிதி சேர்ப்பது, சர்வதேச அளவிலான மானிய உதவித் திட்டங்களை செயல்படுத்துவது ஆகியவை தான் ராஜேஷ் அகர்வாலின் நோக்கம். தற்போது மாவட்டத்தில் 6,389 உறுப்பினர்களுடன் 139 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. புதிதாக 32 சங்கங்களை ஏற்படுத்தி அதன் மூலம் 1500 புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதும், அதில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்தத்தில் 5 சதவீதம் இருப்பதை உறுதிசெய்வதே இலக்கு. தற்போது மொத்த உறுப்பினர்களில் 19 சதவீதம் பெண்கள் உள்ளனர் என்கிறார் ராஜேஷ். மாவட்டத்தில் 50 புதிய ரோட்ராக்ட், 30 புதிய இன்டராக்ட் சங்கங்கள் மற்றும் 30 புதிய ஆர்.சி.சி.க்களை உருவாக்கிவிடுவோம் என்று நம்பிக்கையுடன் கூறுகிறார்.

RYLA கூட்டங்களை அனைத்து சங்கங்களும் பெரிய அளவில் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. 100 அரசுப் பள்ளிகள் மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றப்படும். 500-க்கும் மேலான கைகழுவும் நிலையங்கள் நிறுவப்படும். மேல்நிலைப் பள்ளிகளில் (12ம் வகுப்பு வரை) மின்னணு கற்றல் முறையிலான வகுப்பறைகள் ஏற்படுத்தப்படும். இது தவிர இந்தப் பள்ளிகளில் ஆண்கள், பெண்களுக்கு என தனித்தனியாக 50 கழிப்பறைகள் கட்டித்தரப்படும். ஜெய்ப்பூரில் உள்ள ஸவாய் மான்சிங் மருத்துவமனையில் தோல் வங்கி அமைக்கப்படும். இதற்காக சர்வதேச மானிய உதவி கோரப்பட்டுள்ளது. மாதவிடாய் காலத்தில் சுகாதாரத்தை பராமரிப்பது தொடர்பாக கருத்தரங்குகளும், விழிப்புணர்வு பிரசாரங்களும் நடத்தப்படும். கிராமப் பஞ்சாயத்து மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களில் சானிடரி நாப்கின்கள் வெளிவரும் தானியங்கி இயந்திரங்கள் நிறுவப்படும் என்றும் அவர் கூறினார். கோட்டாவில் உள்ள புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டயாலிஸிஸ் சிகிச்சை மையம் ஏற்படுத்தப்பட்டு அங்கு 10 டயாலிஸிஸ் சிகிச்சை கருவிகள் நிறுவப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

1,50,000 டாலர் மதிப்புள்ள சர்வதேச மானிய திட்டங்கள் ஒப்புதலுக்காக காத்திருக்கின்றன என்று தெரிவித்த ராஜேஷ் அகர்வால், இதேபோல 5,00,000 டாலர் மதிப்புள்ள மேலும் சில திட்டங்களை நிறைவேற்ற நிதியுதவி கேட்டு விண்ணப்பிக்க இருக்கிறோம் என்றும் குறிப்பிட்டார். ரோட்டரி அறக்கட்டளைக்கு (TRF) 10 லட்சம் டாலர் நிதி திரட்டி வழங்க இலக்கு நிர்ணயித்திருக்கிறோம். இதில் 2 லட்டம் டாலர் வருடாந்திர நிதியாக அளிக்கப்படும் என்றார். முன்னாள் தலைவர் சந்திரகாந்த மேத்தாவால் ஈர்க்கப்பட்ட ராஜேஷ் அகர்வால் 2000-ம் ஆண்டில் கோட்டா ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தார். மேத்தா அவருக்கு வழிகாட்டியாகவும் இருந்துள்ளார்.

ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

கொவிட்-19 தெய்வீக ஆண்டு: திட்டங்களை வித்தியாசமாக நிறைவேற்ற கற்றுக்கொடுத்தது

சந்தீப் கதம்
குழந்தை மருத்துவர், RC தானே நார்த் என்ட், RID 3142.

கொரோனா பரவல் காலத்தை, தமது மாவட்ட ஆளுநர் பதவிக்காலத்தின் "தெய்வீக ஆண்டு" என்று நம்பிக்கையுடன் குறிப்பிடுகிறார் சந்தீப் கதம். பிரச்னைகளை எதிர்கொண்டு வித்தியாசமான முறையில் திட்டங்களை எப்படிச் செயல்படுத்துவது என்று கரோனா தொற்று காலம் எங்களுக்குச் சொல்லிக்கொடுத்துள்ளது என்று பெருமையுடன் அவர் குறிப்பிடுகிறார். பல்வேறு சவால்கள் இருந்த போதிலும் எங்களை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. நாங்கள் திட்டமிடுதலையும் செயல் முறையையும் மாற்றிக்கொண்டுவிட்டோம் என்கிறார் Dr சந்தீப் கதம்.

போதைப் பழக்கத்துக்கு அடிமையானவர்களை மீட்பதற்கான திட்டத்தை மெய்நிகர் கூட்டங்கள் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார். ரோட்டரி உதவி எண்கள் மூலமும் போதைக்கு அடிமையானவர்களுக்கு அதிலிருந்து மீண்டுவர ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

கிராமங்களை தத்தெடுக்கும் திட்டமும் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 60 கிராமங்கள் தத்தெடுக்கப்படும்.

நான் கடந்த ஜூலை மாதம் ரோட்டரி மாவட்ட ஆளுநராகப் பதவியேற்றபோது மாவட்டத்தில் 90 சங்கங்களும் அதில் 3206 உறுப்பினர்களும் இடம்பெற்றிருந்தனர். எனது பதவிக்காலம் முடிவதற்குள் உறுப்பினர் எண்ணிக்கையை கணிசமாக அதிகரிக்க திட்டமிட்டுள்ளேன். TRFக்கு நிதி வழங்குவதிலும் கடந்த ஆண்டைவிட கூடுலான தொகையை இந்த ஆண்டு வழங்க முடியும் என்று நம்புகிறேன்.

ரோட்டேரியன் ஒருவரிடம் பணிபுரிந்த ஊழியர் ஒருவர், வலது கணுக்காலில் பலத்த காயம் ஏற்பட்டு அதிக இரத்த இழப்பு காரணமாக இறக்கும் தருவாயில் சிகிச்சைக்கு வந்தபோது அவரை காப்பாற்றினேன். அப்போது ரோட்டரி நண்பரின் தன்னலமற்ற சேவை என்னை கவர்ந்தது. அவரின் அழைப்பின் பேரில் 1996ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தானே நார்த் எண்ட் ரோட்டரி சங்கத்தில் என்னை இணைத்துக் கொண்டேன் என்கிறார் டாக்டர் சந்தீப் கதம்.

25,000 ரோட்ராக்டர்களைச் சேர்க்க விருப்பம்

நல்ல வெங்கட ஹனுமந்த ரெட்டி
வியாபாரம், RC ஆர்மூர், RID 3150.

ரெட்டியின் கனவுத் திட்டங்களில் ஒன்று பொது இடங்களில் தாய்ப்பால் கொடுக்கும் இடங்களை அமைப்பது. இதுவரை 8 இடங்களில் தாய்ப்பால் கொடுக்கும் அறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தாய்மார் களுக்கான இந்த திட்டத்தை 57 சங்கங்கள் ஆர்வத்துடன் மேற்கொண்டு வருகின்றன. புதிதாக 700 உறுப்பினர்களைச் சேர்ப்பதன் மூலம் தற்போதுள்ள உறுப்பினர் எண்ணிக்கை 3,311 என்று இருப்பதை 4,000மாக உயர்த்துவதே தமது நோக்கம் என்கிறார் ரெட்டி. இதேபோல தற்போது 88 ரோட்டரி சங்கங்கள் உள்ளன. மேலும் 25 புதிய சங்கங்கள் ஏற்படுத்தப்படும். மேலும் தற்போது 33 ரோட்ராக்ட் சங்கங்கள் உள்ளன. அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் 25,000 புதிய ரோட்ராக்டர்களை உருவாக்குவதே தமது லட்சியம் என்கிறார் இவர்.

சல்லா ரோட்டரி இரத்த வங்கியில் புதிதாக திறக்கப்பட்ட கொவிட் பிளாஸ்மா வங்கியை 50 ரோட்டேரியன்கள் கண்காணித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். குண்டூர் ரோட்டரி சங்கம், நடமாடும் இரத்த வங்கிக்கு சர்வதேச மானிய உதவியின் மூலம் இரத்தக்கூறுகளை வழங்க உள்ளது. 1,44,000 டாலர் சர்வதேச மானிய உதவித் திட்டத்தின் கீழ் செகந்திராபாதில் உள்ள ரோட்டரி டயாலிஸிஸ் சிகிச்சை மையத்தில் மேலும் 6 டயாலிஸிஸ் கருவிகள் நிறுவப்படும். சர்வதேச நிதியுதவி திட்டத்தின் கீழ் 26 அரசுப் பள்ளிகளை மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றும் திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும் என்றார் ரெட்டி. TRF அறக்கட்டளைக்கு 10 லட்சம் டாலர் நிதி திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2002ம் ஆண்டில் அப்போது மாவட்ட ஆளுநராக இருந்த ரவி வாட்லாமணி, ஆர்மூர் ரோட்டரி சங்கத்துக்கு வருகைதந்தபோது அவரால் ஈர்க்கப்பட்டு ரோட்டரியில் சேர்ந்தார் நல்ல வெங்கட ஹனுமந்த ரெட்டி.

சிலிகுரியில் புலம்பெயர் தொழிலாளர் குடும்பத்தினருக்கு ரோட்டரி நகர்

சுபாஷிஷ் சாட்டர்ஜி, மென்பொருள் மேம்பாடு, RC சிலிகுரி, RID 3240

நாங்கள் திட்டமிட்டபடி எல்லாம் நடந்தால், வடகிழக்கு நிலப்பகுதியை இணைக்கும் முக்கிய சந்திப்பான சிலிகுரியில் ரோட்டரி நகர் உருவாக்கப்படும். இதில் புலம்பெயர் தொழிலாளர்கள் குடும்பங்களுக்காக 1,000 வீடுகள் ஏற்படுத்தப்படும். இதற்கான நிலத்தை கையகப்படுத்த மேற்குவங்க மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். அதில் குடியிருப்புகள், பள்ளி, ஆரம்ப சுகாதார நிலையம், திறன் வளர்ப்பு மையம் ஆகியவை இடம்பெறும் என்கிறார் சுபாஷிஷ் சாட்டர்ஜி.

ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக ரோட்டேரியன்கள் 1,217 ஆசிரியர்களின் இல்லங்களுக்குச் சென்று சிக்ஷா சம்மான் விருதுகளை (நல்லாசிரியர் விருது) வழங்கியுள்ளனர். ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் வயதானவர்கள் மற்றும் கொரோனா தொற்று காலத்தில் வெளியில் வரமுடியாது என்ற காரணத்தால் அவர்களது வீடுகளைத் தேடிச்சென்று விருது கொடுத்தோம். மிசோரம், அஸ்ஸாமில் உள்ள பராக் பள்ளத்தாக்கு மற்றும் வங்கதேசத்தில் உள்ள சில்ஹெட் மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் சில்சாரில் இரத்த வங்கி ஏற்படுத்தப்பட்டுள்ளது. திப்ரூகர் (அஸ்ஸாம்) மற்றும் ஷில்லாங்கில் சர்வதேச மானிய உதவியுடன் கொரோனாவுக்கு சிகிச்சை அளிக்கும் தீவிர சிகிச்சை பிரிவு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அடுத்த கட்டமாக தொண்டை புற்றுநோய்க்கு தடுப்பூசி போடும் திட்டமும் சர்வதேச மானிய உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது. TRF அறக்கட்டளைக்கு 4,00,000 டாலர் நிதி வழங்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் எண்ணிக்கையை 25 சதவீதம் அதிகரிக்கவும், தற்போது 10 சதவீதமாக உள்ள பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 20 சதவீதமாக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 12 புதிய ரோட்டரி சங்கங்கள், 6 சிறிய சங்கங்கள் மற்றும் 20 ரோட்ராக்ட் சங்கங்களும் எனது பதவிக்காலத்தில் ஏற்படுத்தப்படும் என்றார் சாட்டர்ஜி. ரோட்டேரியனான குடும்ப நண்பர் மூலம் சாட்டர்ஜி ரோட்டரியில் சேர்ந்தார். 1988ம் ஆண்டு ரோட்ராகட் சங்கத்தின் சாசனத்தலைவராகவும் இவர் நியமிக்கப்பட்டார்.

"மகிழ்ச்சிப் பள்ளிகளை உருவாக்குவோம்"

ஃபக்கீர் சரண் மொஹந்தி
இரசாயனத் தொழில், RC சூர்கேலா மிட்டவுன், RID 3261.

பல்வேறு சவால்களுக்கு இடையிலும் இந்த ஆண்டு ரோட்டரி உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க முனைப்புடன் செயல்பட்டு வருகிறார். கடந்த ஜூலை 1 ஆம் தேதி 76 சங்கங்கள், 2,620 உறுப்பினர்கள் என்று இருந்ததை 87 சங்கங்கள், 3,500 உறுப்பினர்கள் என்று உயர்த்த இலக்கு நிர்ணயித்துள்ளார். இதேபோ 11 ரோட்ராக்ட் சங்கங்கள் இருப்பதை 25 ஆக அதிகரிக்கவும் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 250லிருந்து 350 ஆக உயர்த்தவும் முனைப்பு காட்டி வருகிறார். இளைஞர்களை அதிகம் ஈர்க்கவும், நிறுவன அடிப்படையிலான ரோட்ராக்ட சங்கங்களை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தி வருவதாகக் கூறுகிறார் ஃபக்கீர் சரண்.

ராய்ப்பூர் மற்றும் ஜபல்பூர் அரசு மருத்துவமனைகளில் கொவிட் சிகிச்சைக்கான உபகரணங்களை நிறுவ 1,10,000 டாலர் மதிப்புள்ள மூன்று திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 3,00,000 டாலர் மதிப்புள்ள சர்வேதச மானிய உதவித் திட்டங்கள் ஒப்புதலுக்காக காத்திருக்கின்றன. மேலும் 2,50,000 டாலர் மதிப்புள்ள திட்டங்கள் சர்வதேச மானிய உதவிக்காக அணுகப்பட உள்ளன என்று அவர் தெரிவித்தார். சத்தீஸ்கர், மத்தியப்பிரதேசம் மற்றும் ஒடிஸாவில் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் சுகாதாரம் மற்றும் தூய்மைப் பணிகளை மேற்கொள்ளுமாறு இந்த மூன்று மாநிலங்களில் உள்ள ரோட்டரி சங்கங்களை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

முதலாவதாக, சூர்கேலாவுக்கு அருகில் பின்தங்கிய பகுதியில் உள்ள 10 அரசுப் பள்ளிகளில் வின்ஸ் திட்டத்தை மாவட்டம் மேற்கொள்ளும். இதைத் தொடர்ந்து பழங்குடியினர் வாழும் 20-க்கும் மேற்பட்ட பகுதிகளை 100 மகிழ்ச்சிப் பள்ளிகளை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளோம் என்று மொஹந்தி தெரிவித்தார்.

TRF அறக்கட்டளைக்கு 2 லட்சம் டாலர் நிதி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 1 லட்சம் டாலர் ஆண்டு நிதியாக சேர்க்கப்படும். 1992-ஆம் ஆண்டு ரோட்டேரியன் அல்லாதவராக, தான் உறுப்பினராக இருக்கும் சூர்கேலா மிட்டவுன் ரோட்டரி சங்கத்துக் காக குழந்தைகள் மருத்துவமனையின் செலவுக்காக ஆர்வதுத்துடன் நன்கொடை வசூலித்து நிதி திரட்டியுள்ளார். ரோட்டரியின் சேவை மனப்பான்மையால் ஈர்க்கப்பட்டு அதில் சேர்ந்துள்ளார் ஃபக்கீர் சரண் மொஹந்தி.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

Rotary News Subscription Remittances

You can pay the Rotary News/Rotary Samachar subscription online

Our Bank details:

Bank : HDFC Bank SB Account

Branch : Montieth Road Egmore, Chennai

A/c Name : Rotary News Trust

A/c No. : 50100213133460

IFSC Code : HDFC0003820

E-mail us following details:

Name of club

President/secretary's name

Amount/date of transfer/UTR number

For physical payment by cheque or cash in bank, write **Club Name only** without prefixing "Rotary Club of". Eg. Rotary Club of Delhi Central should be written: Delhi Central.

Rotary at a glance

Rotarians	:	1,194,505
Clubs	:	36,350
Districts	:	525
Rotaractors	:	208,599
Clubs	:	10,985
Interactors	:	349,761
Clubs	:	15,207
RCC	:	11,361

As on October 19, 2020

Membership Summary

As on October 1, 2020

RI District	Rotary Clubs	No of Rotarians	Women Rotarians %	Rotaract Clubs	Interact Clubs	RCC
2981	119	5,064	5.94	51	39	225
2982	72	3,155	6.56	86	96	56
3000	131	5,274	8.25	188	256	211
3011	107	4,164	25.86	59	100	35
3012	110	3,919	24.85	57	71	59
3020	73	4,495	6.45	56	155	351
3030	95	5,167	14.75	119	180	304
3040	92	2,248	11.97	43	52	147
3053	64	2,789	16.57	22	39	111
3054	138	6,371	19.67	94	144	524
3060	101	4,663	14.80	60	63	145
3070	115	3,446	17.30	48	22	59
3080	84	3,367	9.15	103	146	116
3090	80	2,297	6.01	43	9	122
3100	100	2,333	8.32	14	14	146
3110	135	3,738	8.91	29	7	105
3120	83	3,347	14.31	50	21	53
3131	138	5,285	21.40	114	192	119
3132	87	3,463	10.02	40	95	164
3141	104	5,669	24.55	130	144	94
3142	91	3,318	20.89	83	118	68
3150	88	3,475	10.65	63	122	117
3160	78	2,581	6.82	28	3	83
3170	133	5,756	13.66	84	204	169
3181	82	3,381	8.96	63	192	118
3182	83	3,192	8.18	50	103	98
3190	143	6,081	16.13	156	165	65
3201	145	5,675	8.37	109	73	52
3202	141	5,878	6.92	101	251	47
3211	144	4,676	7.14	8	24	132
3212	107	4,297	8.63	104	187	149
3231	100	4,014	12.31	53	81	419
3232	128	5,883	19.41	135	199	93
3240	92	3,201	13.56	57	393	198
3250	101	3,802	18.28	72	65	185
3261	76	2,743	16.04	20	21	43
3262	107	3,776	12.95	52	39	78
3291	159	3,830	20.97	98	88	623
India Total	**4,026**	**155,813**		**2,742**	**4,173**	**5,883**
3220	71	1,947	14.74	86	125	74
3271	114	1,804	17.85	69	19	22
3272	158	1,878	17.84	58	15	44
3281	240	7,181	17.27	248	50	200
3282	160	4,131	10.87	179	39	46
3292	136	5,312	15.68	144	120	119
S Asia Total	**4,905**	**178,066**		**3,526**	**4,541**	**6,388**

Source: RI South Asia Office



A little of this, a little of that

Sandhya Rao

Truly random thoughts such as a bit of Babel, the way of words, the lilt of languages, the comfort of courier packages and so on.

I recently listened to a podcast called 'Puliyabaazi', courtesy a link forwarded by an affectionate nephew. This was an interview with Dr Abhishek Avtans, a Hindi language scholar, who teaches at Leiden University in the Netherlands. He talked about the growth and development of the Hindi language, its relationship with dialects ('boli' versus 'bhasha'), the evolution of Urdu and the somewhat controversial connection to Sanskrit that's been imposed upon it. In the course of this lively conversation with the podcast's two moderators, the professor drew listeners' attention to an important aspect of 'being Indian': multilingualism.

I was thrilled because I believe that one of the biggest strengths we have as a people is our ability, generally speaking, to negotiate 'foreign' or 'unfamiliar' languages. Is it that our tongues are different or that our left hemispheres are so designed or an environment of plurality that exists or that we are less inhibited or that we are more ready to reach out…? Whatever the reason, most Indians 'have' two languages, if not more, and are usually ready to take a shot at anything else that comes along. Shukraan. Nanri. Dhonnobad. Sabaykhor thabay. Zdrastvitye. Merci. Danke. Tesekkular. Even if an individual cannot read and write, s/he can certainly speak — or at least attempt to speak — and will sort of understand more than their own mother tongues. Some laugh at the accent or the literal translation or the syntax but they all have to admit: we own our tongues and others too.

A mythological story talks about the tower of Babel where people suddenly started speaking in multifarious languages. This confused them and prevented them from communicating with each other, leading to clashes and chaos. India's many languages and dialects, *bhashas* and *bolis*, are threads that weave a vibrant tapestry of culture, identity and harmony. The warmth and energy this generates is among the many things that animate and inspire the subcontinent. Which is why, any effort to undermine some languages in order to prop up others is an affront to our existence because every little thread counts.

A corollary to this characteristic is the widespread ability most Indians have to incorporate 'other' words and phrases into their private and professional parlance. And that's a great thing. Of course, I have shared these ideas regarding languages and language acquisition in this column before, but it bears repetition — over and over again. Acquire new tongues, but nurture what your already have. Add, don't subtract.

Interestingly, the idea of Babel exists in other cultures as well, according to my dear friend, Ms Internet and her progeny, the various Pedias. The Sumerians, the Mexicans, the American Indians — all of them apparently have mythologies that tell of people united by language building towers or testaments to either praise or appease their gods and then see those structures destroyed and find themselves speaking different languages. After this, the linguistic groups separate to seek out homes in different directions.

I like to think of the Babel idea as a proactive process. It celebrates variety: just look at the zillion kinds of noses people turn up at others! Look at the number of words. They say an





average native speaker of a language has a vocabulary of about 20,000 to 35,000 words. Listen to the cadences of voices. Colours. Trees. They say there are hundreds of kinds of eucalyptus trees. They say there are hundreds of kinds of rajma. Name anything. And not just in nature. And if we don't recognise the value of this rich and enriching tapestry called life, it will only start showing holes until only one big, all-engulfing hole remains through which all of life will tumble into nothingness.

As the long months of lockdown close in on a year, we have all experienced times of desperation that cuts through whatever privileges we enjoy. And here, we're talking about the lucky few. So, for moral support, I turned to my current writer of refuge, Alexander McCall Smith, someone who has appeared in these columns before. I ordered four books online: *My Italian Bulldozer, Trains and Lovers, The Peppermint Tea Chronicles,* and *One City*. Truly, his books are a comfort. Such a comfort, that I have — guiltily, I must admit, and brazenly, too —ordered eight — yes, eight! — more titles, this time mostly from the 'No. 1 Ladies' Detective Agency' series. One of them is a children's book called *Akimbo and the Snakes*. Three of the books in the second consignment have arrived, and I eagerly await the arrival of the next courier guy.

And there's a postscript to this: In an effort to break out of the doom-gloom clouds hanging low over my apartment, I decided to visit my cousin who lives nearby. Suitably masked, and correctly ensconced in chairs, socially accepted distance from each other in the veranda of her home, I gifted her *An Italian Bulldozer* in the hope that she would find it as entertaining as I had. She's not much of a fiction reader and this is part of an ongoing effort to convert her to the healthy habits of reading fiction. She was delighted. Of all the gifts she could hope to receive, she said, this was the best. But what do I do after I finish the book, she asked. Keep it if you like it, I responded. Return it if you don't. She is reading a couple of pages a night and, from all accounts, enjoying it.

Meanwhile, I am still reading several books at one time, including the ones mentioned in earlier columns. McCall Smith seems to have distracted me, or, should I say, extracted me from the clutches of a Los Angeles library fire, the story of the first Muslim and accounts from a Turkish prison. I admit these range from serious to grim themes and, given the prevailing





climate, possibly the reason why I have returned to ACS. Back back back in the day, comfort came from Enid Blyton, Angela Brazil, WE Johns, Edgar Wallace, Agatha Christie, PG Wodehouse, Richard Gordon, Louis L'Amour, Charles Dickens, Thomas Hardy, Lobsang Rampa, Allen Drury, Leon Uris, Chaim Potok, RK Narayan, and others. More recently, it's been Stieg Larsson, Amitav Ghosh, Pico Iyer, Anuja Chauhan, and Henning Mankell… the list goes on. Over the years they have fed my hunger for stories and exploring unknown worlds. At the moment that's exactly what *The Temporary Bride* is doing. This slim book by Jennifer Klinec is a memoir of love and food in Iran. I've got to the bit where she's just arrived in Yazd in central Iran and met up with a young, stern-looking Yazdi who, in response to her reason for visiting Iran — to learn to cook, and of course taste, Iranian dishes — simply says, 'My mother is a good cook.' Now this is where Jennifer Klinec's story really begins. Yum!

Further PS: I just received a message saying *A Time of Love and Tartan* is arriving early. That's the fourth!

The columnist is a children's writer and senior journalist.

Designed by Krishnapratheesh

கொவிட்டுக்குப் பின் "வின்ஸ் திட்டம்" பள்ளிகளுக்கு முக்கியமானது: மேத்தா

கிரன் ஜெஹ்ரா

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலுக்குப் பிறகு பள்ளிகளில் கைகழுவும் திட்டம் இன்னும் முக்கியத்துவம் பெற்று விட்டது. RID 3170க்கு உட்பட்ட தார்வாட் சென்டரல் ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்திருந்த பல மாவட்ட வின்ஸ் கருத்தரங்கில் இதை கணேஷ் பட் முக்கியமாக குறிப்பிட்டார். பள்ளிகள் திறக்கப்பட்டதும் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும் கைகழுவுதலின் (ஹேண்ட்வாஷ்) முக்கியத்துவத்தை மாணவர்களின் வின்ஸ் தன்னார்வலர்கள் பதியவைக்க வேண்டும் என்றார் RIPE சேகர் மேத்தா. அரசுப் பள்ளிகளில் இதைச் செயல்படுத்த இன்டராக்டர்களை உதவிக்கு அழைத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். வின்ஸ் திட்டம் செயல்படுத்தப்படும் பள்ளிகளுக்குச் சென்று கழிப்பறைகள் நல்ல நிலையில் உள்ளதா, குடிநீர் விநியோகம் சீராக, தரமாக உள்ளதா என்று ரோட்டேரியன் சோதித்துப் பார்க்க வேண்டும். சுகாதாரம் மற்றும் தூய்மை மேம்பாட்டு வசதிகளை ஆய்வு செய்யும் போது அவற்றில் சில வேலைகள் அதிக செலவு பிடிக்கலாம். எனவே இதுபோன்ற சமயங்களில் உள்ளூர் அரசு நிர்வாகத்துடன் இணைந்து செயல்படுவது நல்லது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸுக்கு தடுப்பூசி கண்டுபிடிக்கும் வரை 2021 ஜூன் மாதம் முடிவடையவிருக்கும் வின்ஸ் திட்டத்தை தொடரந்து ஆதரிக்க வேண்டும் என்று வின்ஸ் திட்ட சர்வதேச தலைவரும் PRIDயுமான P T பிரபாகர் யோசனை தெரிவித்தார். அதற்கு மேத்தா அவரிடம், அதன் செயல் பாட்டிலான உலக அளவிலான வெற்றி விகிதம்தான் கால நீட்டிப்பை தீர்மானிக்கும் என்றார்.

பிரபாகர் உரையாற்றுகையில், 2016ம் ஆண்டு முதல் இந்த திட்டம் நாடு முழுவதும் 40,000 அரசுப் பள்ளிகளைச் சென்றடைந்துள்ளதாவும் 2025ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை ஒரு லட்சம் பள்ளிகளாக இருக்கும் என்றும் கூறினார். நாங்கள் பள்ளிகளில் கழிப்பறைகள் கட்டுவது, கைகழுவும் நிலையங்கள் அமைப்பதுடன் நின்றுவிடுவதில்லை. இவை இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிக்கப்படுவதை உறுதி செய்கிறோம் என்றார் அவர்.

வின்ஸ் திட்டத்தின் தேசியத் தலைவர் ரமேஷ் அகர்வால் பேசுகையில், கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்படும் சுகாதாரப் பிரச்னைகளைச் சமாளிப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பள்ளி ஆசிரியர்களுக்கும், நிர்வாகத் தினருக்கும் தங்களது குழு பயிற்சி அளித்து வருவதாகக் குறிப்பிட்டார். உடல்நலம் இல்லை, பள்ளிகளில் கழிப்பறை வசதிகள் போதுமானதாக இல்லை என்ற காரணத்தால் பள்ளி படிப்பை யாரும் பாதியில் நிறுத்திவிடக்கூடாது என்பதில் நாங்கள் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறோம் என்றார் அவர்.

DG சங்ராம் படேல், இந்த கருத்தரங்கு பயனுள்ளதாக இருந்ததாகக் கூறி இதற்கு ஏற்பாடு செய்திருந்த தார்வாட் சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தை பாராட்டினார்.

பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய சுகாதாரம் மற்றும் தூய்மைப்பணிகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று PDG கணேஷ் பட் பேசுகையில் குறிப்பிட்டார். திட்டமிட்டு நாம் செயல்படாவிட்டால் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

RISAOவைச் சேர்ந்த ரெதிபோரா, வின்ஸ் இலக்குடன்கூடிய சவால் திட்டத்தின் கட்டமைப்பை விளக்கினார். இத்திட்டத்திற்காக சர்வதேச மானிய நிதியுதவி கேட்டு வரும் விண்ணப்பங்களை TRF முறையாக பரிசீலித்து ஒப்புதல் அளிக்கும் நடைமுறைகளையும் எடுத்துரைத்தார்.■

Rotary District 2982
People of Action

Rotary Opens Opportunities

T-E-A-C-H & SKILL DEVELOPMENT

ADVT.

KS Venkatesan
Dist. Governor
RID 2982

வாசிக்க நேசிக்க ரோட்டரி நூலகங்கள்

கற்றதை பெற்றதை ஆற்றல் ஆக்கி ஒவ்வொரு குடும்பத்திலும் மகிழ்ச்சியை கூட்டுவோம். நம் இலக்கு 1000 கிராமப்புற அரசு தொடக்க பள்ளிகளை ஒருங்கிணைப்போம். நம் பகுதியில் உள்ள வருங்கால மாணவச் செல்வங்களை கற்றவர்களாக மாற்றி நம் நாட்டின் வளர்ச்சியில் பங்கு கொள்வோம்.

A Venkateswara Gupta
Dist. Literacy
Committee Chairman

Rotary Libraries

Towards a Literate India by 2025

- Our **DG KS Venkatesan** congratulates the clubs for creating 150 Happy Schools, 500 Rotary Libraries in rural government primary schools.
- Congratulations to **RC Hosur** President A G Pratheep Krisnan, Secretary R Balaji, Treasurer T Vijay, AG K Anandakumar and Project Chair R Ravi for setting up libraries in 62 government primary schools to benefit over 8,000 children.
- **DLCC A Venkateswara Gupta,** along with Happy Schools Chairman N P Ramaswamy and the literacy team, has been instrumental in setting up Rotary libraries across RI District 2982 since 2019 to inculcate reading habit in young children and enhance their knowledge in various spheres.
- Our thanks to **IPDG AKS A K Natesan** for motivating the district to create 265 libraries last year.
- Sixteen Rotarians sponsored book shelves for schools to store the books.
- The books were distributed to the school heads in the presence of the DEOs of Hosur and Denkanikota on Oct 15, coinciding with former President of India Abdul Kalam's birth anniversary.
- "Our vision: We want to see every Indian village to have a library." – DLCC A Venkateswara Gupta.

RC Chinnasalem, Krishnagiri, Hosur Midtown, Salem South, Salem North, Namakkal Poultry Town, Sankagiri, Rasipuram, Salem Young Town, Salem Elite, Idappadi, Hosur Sipcot, Attur, Villupuram, Sankarapuram, Mohanur, Omalur, Jalakandapuram, Salem Junction, Salem Rupavathy and Hosur Angels have also initiated the library creation in the district and the other Rotary clubs are planning to create more libraries in the coming months to reach the **1000**-libraries goal.

உங்களின் நூலக அன்பளிப்பு, கிராமங்களின் ஒளிவிளக்கு!

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிய ரோட்டரி

ஜெய்ஸ்ரீ

ஆகஸ்ட் மாதத் தொடக்கத்தில் கேரளத்தின் பல பகுதிகள் கன மழைப்பொழிவு, தீவிரமான வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன.

அதே நேரத்தில், தமிழ் நாட்டின் நீலகிரி மலைப்பகுதியையும் கன மழை தாக்கியது. இந்த இரு பகுதிகளிலும், ரோட்டரியன்கள் உடனடியாகக் களமிறங்கினார்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவினார்கள்.

திருப்பூரைச் சேர்ந்த நாற்பத்திரண்டு ரோட்டரி சங்கங்கள், RC திருப்பூர் வெஸ்ட், RID 3202 தலைமையில் ஒருங்கிணைந்தன, கூடலூர் பள்ளத்தாக்கிலுள்ள 400 குடும்பங்களுக்கு உதவின. நாங்கள் ஆடைகள், மளிகைப்பொருட்கள், தூய்மைக்கான பொருட்கள், ஒரு படுக்கை விரிப்பு, தலையணை, சில மெழுகுவர்த்திகள், ஒரு டார்ச் விளக்கு உள்ளிட்ட 24 பொருட்களைத் தொகுத்து அட்டைப்பெட்டிகளில் நிரப்பினோம், அவற்றை ஒரு வேனில் ஏற்றினோம்'' என்கிறார் உதவி ஆளுநர் P S பிரகாஷ். இந்தப் பொருட்களை வாங்கும் செலவுக்காக இந்தச் சங்கங்களில் உள்ளவர்கள் ஒன்றாகச் சேர்ந்து மொத்தம் ரூ.800,000ஐத் திரட்டினார்கள்.

திருப்பூர் ரோட்டரியினர் கூடலூரில் வெள்ள நிவாரணம் அளிக்கின்றனர்.

RC *கோட்டயம் தலைவர் சூசன் கோஷி ஒரு கிராமப்புற குடும்பத்திற்கு தேவையான பொருட்களை அளிக்கிறார்.*

பத்து ரோட்டரியன்கள் கோவிட் முடக்க நேரத்திலும் துணிவோடு இந்தக் கிராமத்தை நோக்கி வண்டி ஓட்டிச் சென்றார்கள். கட்டாய மின் அனுமதிச்சீட்டுகள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. RTO வருவாய்க் கண்காணிப்பாளர் மற்றும் கூடலூர் DSP ஜெய்சிங் உதவியுடன் பெரிய பிரச்னைகள் ஏதுமின்றி நாங்கள் இந்தக் கிராமத்துக்குச் சென்றோம், இரண்டு நாட்களில் பொருட்களை வழங்கினோம் என்றார்.

அதன்பிறகு, ஜெய்சிங்கின் கோரிக்கையின்படி, குன்னூரிலுள்ள ஓர் ஆதரவற்றோர் இல்லத்துக்கு 25 மூட்டை அரிசி, 300 படுக்கை விரிப்புகள், 25 படுக்கை, தலையணைத் தொகுப்புகளைக் குழுவினர் அனுப்பியதாகப் பிரகாஷ் தொடர்ந்து

கூறுகிறார். நோய்ப்பரவல், முடக்கத்தால் அந்த ஆதரவற்றோர் இல்லத்துக்குக் குறைவான நிதி ஆதரவுதான் கிடைத்தது; அவர்கள் மோசமான நெருக்கடியில் இருந்தார்கள், அவர்களுக்கு உதவியதில் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி.

கொச்சியில் RID 3201 அமைத்துள்ள கோவிட் பராமரிப்பு மையத்துக்கு இவர்கள் 400 படுக்கை விரிப்புகளை அனுப்பினார்கள், திருப்பூர் பொது மருத்துவ மனையில் முன்னணி ஊழியர்களைப் பாதுகாக்க 200 முகக்கவசங்கள் வழங்கப்பட்டன.

கேரளத்தில், கோட்டயத்துக்கு அருகிலுள்ள செங்களம் மற்றும் வெலூர் குக்கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 70 குடும்பங்களுக்கு அரிசி, கோதுமை மாவு, பருப்பு, சமையல் எண்ணெய், சர்க்கரை, வெங்காயம் மற்றும் தூய்மைக்கான பொருட்கள் போன்ற அவசியமான பொருட்களை RC கோட்டயம், RID 3211, உறுப்பினர்கள் வழங்கினார்கள். இங்கு சில பகுதிகளை நீர் சூழ்ந்திருந்தது, படகுகளில் சென்றுதான் எங்களால் வீடுகளை அணுக இயன்றது'' என்கிறார் சங்கச் செயலாளர் சரத் வல்ஸ்ராஜ்.■

கொரோனா காலத்தில் மனிதநேயம்!

ரோட்டரி செய்திக்குழு

கொரோனா வைரஸ் பரவல் காலத்தில் தங்களது உறவினர்கள் இறந்து விட்டால் நமக்கும் வைரஸ் பாதிப்பு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் குடும்ப உறுப்பினர்கள் ஒதுங்கியே இருந்த நேரத்தில் சூரத்தில் உள்ள ஏக்தா டிரஸ்ட், இந்த ஆண்டு மார்ச் முதல் கொரோனாவுக்கு பலியான 1200-க்கும் மேலான நோயாளிகளுக்கு இறுதிச்சடங்குகள் செய்து அவர்கள் உடலை புதைத்து அல்லது தகனம் செய்துள்ளது.

RID 3060க்கு உட்பட்ட சூரத் ரிவர்சைடு ரோட்டரி சங்கம், ஏக்தா டிரஸ்டின் சேவையை அங்கீகரிக்கும் வகையில் அவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்துள்ளது. கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக விபத்து, கட்ச் பகுதியில் ஏற்பட்ட பூகம்பம் போன்ற இயற்கைப் பேரிடர் சம்பவங்களில் உயிரிழந்தவர்கள், சுனாமியால் உயிரிழந்தவர்கள், சூரத், ஜம்மு-காஷ்மீர், உத்தரகண்ட் பகுதிகளில் வெள்ளத்துக்கு பலியானவர்கள் என இதுவரை 70 ஆயிரத்துக்கும் மேலான இறந்தவர்களின் உடலை சுமந்து சென்று தானும் தமது குழுவினரும் இறுதிச் சடங்குகள் செய்துள்ளதாக ஏக்தா டிரஸ்டின் தலைவர் அப்துல் ரஹ்மான் மல்பாரி தெரிவித்தார். தங்களது உறவினர்களுக்கு இறுதிச்சடங்கு செய்ய முடியாத நிலையில் உள்ள ஏழைகளின் சார்பாகவும் இந்த அமைப்பு இறுதிச் சடங்குகளைச் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஏக்தா ட்ரஸ்ட் தலைவர் அப்துல் ரஹ்மான் மல்பாரி RC சூரத் ரிவர்சைட் தலைவர் ஆனந்த் ஆச்சார்யாவிடமிருந்து விருது பெறுகிறார்.

பொதுவாக நாங்கள் கொரோனாவைக் கண்டு பயப்படவில்லை. ஆனால், ஆரம்பநாட்களில் மக்கள் சிலர் ஏதோ நாங்கள் தீண்டத்தகாதவர்கள் போல் பார்த்தார்கள். அது தான் வருத்தமாக இருந்தது. ஆனால், நாங்கள் கொரோனாவால் இறந்தவர்களின் சடலங்களை கையாளும் விதத்தையும், நாங்கள் சுகாதாரமாக செயல்படுவதையும் பார்த்த பிறகு இப்போது அவர்களுக்கு எங்கள் மீது முழு நம்பிக்கை வந்துள்ளது. எங்கள்மீது இருந்த தவறான அபிப்பிராயத்தையும் அவர்கள் மாற்றிக்கொண்டுவிட்டனர் என்றார் இக்குழுவைச் சேர்ந்த யூசுப் பராத். 'கொவிட் 19' நோயால் இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்தவுடன், மற்றொரு உறுப்பினர் ஹாஜி சண்டிவாலா, சடலங்களை புதைக்க குழியை இன்னும் ஆழமாக தோண்ட வேண்டும் என்று கூறினார். கொரோனா நோயாளிகளையும் அவர்கள் உயிரை காக்க போராடி வரும் தொழிலாளர்களையும் அனாவசியமாக கேலி செய்ய வேண்டாம், அவர்கள் மீது அன்பு செலுத்தி, அவர்களுக்கும் நம்மால் முடிந்த உதவிகளைச் செய்தாலே போதுமானது என்றார் மல்பாரி.

விருது வழங்கும் நிகழ்ச்சி சங்க உறுப்பினர்களுக்கு ஆன்லைன் மூலம் ஒளிபரப்பப் பட்டது. சங்கத்தின் தலைவர் ஆனந்த் ஆச்சார்யா வரவேற்புரை வழங்கினார். செயலாளர் ஜுகல் ஷிங்லாட் நன்றி கூறினார்.■

RC திருவாரூர் — RID 2981

கைம்பெண்கள், நலிந்த பின்னணி கொண்ட பெண்களுக்கு இலவசத் தையல் பயிற்சி வழங்கவும், அவர்கள் தாங்களே வேலை வாய்ப்பைப் பெற உதவவும் ஒரு பணி சார்ந்த பயிற்சி மையம் தொடங்கப்பட்டது.

RC தில்லி மன்தான் — RID 3011

இந்தச் சங்கமும், சங்கல்ப் என்ற NGOம் சேர்ந்து, ஜசோலா கிராமத்தில் உள்ள நலிந்த பின்னணி கொண்ட பெண்களுக்குத் தூய்மை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்றை நடத்தினார்கள். இந்தப் பெண்களுக்குச் சானிட்டரி பேட்-கள் வழங்கப்பட்டன.

RC சேலம் யங் டவுன் — RID 2982

நிறை வாழ்வு முதியோர் இல்லத்திலுள்ள முதியவர்களுடன் "அன்னபூர்ணா நாள்" கொண்டாடப்பட்டது. ரோட்டரியன்கள் சுமார் 100 மக்களுக்கு உணவு வழங்கினார்கள்.

RC அசல்பூர் — RID 3030

இந்தச் சங்கம், சந்தோஷ் அக்ரவால் தலைமையிலான தன்னுடைய "ரோட்டரி உதவி இணைப்புப் பொதி"த் திட்டத்தின் கீழ், ஆதரவற்ற பெண்களின் உடைந்த குடிசைகளை மீண்டும் கட்டுவதற்கான முன்னெடுப்புகளைச் செய்தது.

RC ஸ்ரீரங்கம் — RID 3000

இந்த மாவட்டத்தின் அடையாளத் திட்டமான "சூப்பர் 66" திட்டத்தின்கீழ், இந்தச் சங்கம் தன்னுடைய கட்டட வளாகத்தில் ஒரு மழைநீர் சேமிப்பு அமைப்பை நிறுவியது.

RC இந்தூர் மேக்தூத் — RID 3040

DG கஜேந்திர நாரங், மாவட்ட ரோட்டரியன்கள், $35,000 மதிப்புள்ள ஒரு பன்னாட்டு நல்கைத் திட்டத்தின் வழியாக, கோவிட் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்கான கருவிகளைப் பல மருத்துவமனைகளுக்கு வழங்கினார்கள்.

செய்திகள்

RC ஜோத்புர் சன்ஸ்கார் — RID 3053

இச்சங்கம், வாத்சல்ய புரம் ஆதரவற்றோர் இல்லத்துக்கு மளிகைப் பொருட்களை நன்கொடையாக அளித்தது. அத்துடன், MGH மருத்துவமனையில் உள்ள 1,500 கோவிட் நோயாளிகளுக்குக் குடிநீர் பாட்டில்கள் வழங்கப்பட்டன.

RC நபா கிரேட்டர் — RID 3090

இந்தச் சங்கம், நபா-வில் உள்ள குடும்பங்களுக்கு மளிகைப் பொருட்களை வழங்கியது. பலன் பெற்றோர், நோய்ப்பரவல் முடக்கத்தின் போது ரோட்டரியின் இந்த உதவிக்காக நன்றி தெரிவித்தார்கள்.

RC உதய்பூர் வசுதா — RID 3054

இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள், வன அலுவலர்களுடனும் ரோடராக்டர்களுடனும் கை கோர்த்து, இரு காடுகளில் 2,500 விதைப் பந்துகளை வீசினார்கள். சங்க ஆலோசகர் மது சரீன், தோட்டங்களுக்கு 500 மூலிகை மரக் கன்றுகளை அளித்தார்.

RC மொரதாபாத் அச்சிவர்ஸ் — RID 3100

DG மனீஷ் ஷர்தா ஏழை பெண் ஒருவருக்கு ஒரு தையல் இயந்திரத்தை நன்கொடையாக அளித்தார். ஆட்டோக்களில் கோவிட் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப் பட்டன, பரபரப்பான சந்திப்புகளில் பதாகைகள் அமைக்கப்பட்டன.

RC வாத்வான் சிட்டி — RID 3060

இந்தச் சங்கம், கோவிட் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதற்காக ஆட்டோரிக்ஷா-க்களில் ஸ்டிக்கர்கள் ஒட்டி, பரபரப்பான சந்திப்புகளில் அறிவிப்புப் பலகைகளை அமைத்துள்ளது.

RC சோலாப்பூர் நார்த் — RID 3132

இந்த நகரத்தில் "சோலாப்பூர் நார்த்" ரோட்டரி சங்கத் தோட்டம் ஒன்று பல செடிகளுடன் உருவாக்கப் பட்டுள்ளது. இந்தத் தோட்டம், ரோட்டரியின் பொதுத்தோற்றத்தை மேம்படுத்தும்.

RC பத்ராசலம் — RID 3150

இந்த நகரத்தின் முதன்மையான இடம் ஒன்றில், ரோட்டரியின் நிறுவனரான பால் ஹாரிசின் சிலை யொன்று நிறுவப் பட்டது. இதற்கான எளிய விழாவில் PDGகள் T விஜேந்திர ராவ், J ஆபிரகாம் சிலையைத் திறந்து வைத்தார்கள்.

RC மங்களூர் சென்ட்ரல் — RID 3181

வனத் திருவிழாவை முன்னிட்டு, உர்வா காவல் நிலைய வளாகத்தில் ஐம்பது மரக் கன்றுகள் நடப் பட்டன. சங்கத் தலைவர் K பிரகாஷ் சந்திரா, PDG B தேவ்தாஸ் ராய் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

RC சுள்ளூர்பேட் — RID 3160

DG சின்னப்ப ரெட்டி, புதுப்பிக்கப்பட்ட இடுகாடு ஒன்றைத் தொடங்கிவைத்தார், இங்கு ஒரு காத்திருப்புக் கூடம், குளியலறைகள், பிணங்களை அப்புறப் படுத்துவதற்கான புதிய தொழில்நுட்பம் ஆகியவை சேர்க்கப் பட்டுள்ளன. இத்திட்டத்துக்கு ரூ.28 லட்சம் செலவானது.

RC கோடேஷ்வர் — RID 3182

அரசுடன் இணைந்து நடத்தப்படும் ஒரு திட்டத்தின்படி, ஒரு கிராமத்தைச் சேர்ந்த பழங்குடியின மாணவர்கள் 20 பேருக்குப் பாடப் பொருட்கள், உணவுப் பொதிகள் வழங்கப்பட் டன. ஆசிரியர் ஒருவருடைய மாதச் சம்பளத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

RC ஹூப்ளி வித்யாநகர் — RID 3170

ரோட்டரியின் சின்னம், சங்கப் பெயருடன் இருபத்து ஐந்து சிமென்ட் பெஞ்ச்கள் ஒரு தோட்டத்துக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டன. இவற்றை வழங்கும் நிகழ்ச்சிக்கு PDG மகேஷ் ராய்க்கர் தலைமையேற்றார்.

RC கோலார் — RID 3190

தண்டுவட மரப்பு நோய்ப் போராளியான கவிதா என்பவருக்கு மோட்டாரில் இயங்கும் ஒரு சக்கர நாற்காலி நன்கொடையாக அளிக்கப்பட்டது. ஜெயசிம்ஹா அவர்களுடைய தாயாரின் நினைவாக இது அளிக்கப்பட்டது.

செய்திகள்

RC பெரும்பாவூர் சென்ட்ரல் — RID 3201

இந்தச் சங்கம், இந்த மாவட்டத்தின் திட்டமாகிய YESன் கீழ், மாணவர்களுக்கு இரண்டு மிதிவண்டி களை நன்கொடையாக அளித்தது. அத்துடன், பள்ளி மாணவர்கள் இணைய வகுப்புகளில் கலந்துகொள்வதற்காக அவர்களுக்கு இரண்டு TV செட்களும் வழங்கப்பட்டன.

RC கியோஞ்சர்கர் — RID 3262

இச்சங்கம் ஒரு கிராமத்தில் முதியோர் பள்ளி ஒன்றை துவக்கியுள்ளது. இந்த பள்ளியில் 20 முதியோர்களுக்கு கல்வி வழங்கப்பட்டது.

RC நிலேஷ்வர் — RID 3202

விழிப்புணர்வை உண்டாக்கும் ஓர் ஒலிச் செய்தியுடன் கூடிய நடமாடும் கோவிட் அரங்கம் ஒன்றை காவல் நிலைய அலுவலர் ஒருவர் கொடியசைத்துத் தொடக்கிவைத்தார், சங்கத் தலைவர் சுஜீத் குமார் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

RC சந்தன்நகர் — RID 3291

செருப்பு தைப்பவர்களை வெயில், மழையிலிருந்து பாதுகாப்பதற்காக, அவர்களுக்கு இருபத்து ஐந்து குடைகள் வழங்கப்பட்டன. கோவிடுக்கு எதிரான ஒரு தடுப்பு நடவடிக்கையாக, பொது மக்களுக்கு முகமூடிகள் வழங்கப்பட்டன.

RC போல்பூர் ரங்கமதி — RID 3240

உள்ளூர்க்காவல் துறையினருடைய தன்னலமற்ற சமூக சேவையும், முடக்கத் தின் போது நன்றி தெரிவித்தலின் வெளிப்பாடாகவும், காவல்துறையினரை பெருமைப்படுத்த, ஒவ்வொருவருக்கும் "கோவிட் போராளி" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

RC லேக்நாத் — RID 3292

பொகாராவிலுள்ள பெக்னஸ் ஏரியில் ரோட்டரி புகைப்பட அரங்கம் ஒன்றை IPDG கிரண் லால் ஷ்ரேஸ்தா தொடங்கிவைத்தார். இங்கு ஆண்டுதோறும் சுமார் 700,000 பார்வையாளர்கள் வருகிறார்கள்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

RF(I) பங்களிப்புகளுக்கு PAN தேவை

1 ஏப்ரல் 2020ல் தொடங்கி, RF(I)க்காக இணையத்திலோ/இணையத்துக்கு வெளியிலோ அளிக்கப்படுகின்ற அனைத்துப் பங்களிப்புகளுக்கும் PAN எண்களை வழங்குவது கட்டாயமாகிறது, அந்தப் பங்களிப்புகளின் மதிப்பு என்னவாக இருந்தாலும் சரி, நன்கொடையாளர் 1961 வருமான வரிச் சட்டத்தின் 80G பிரிவின் கீழ் வரி விலக்கு பெற விரும்பினாலும் சரி, விரும்பா விட்டாலும் சரி, இது கட்டாயமாகும். PAN தகவல்கள் இல்லாமல் பெறப்படும் பங்களிப்புகளை RI தெற்கு ஆசிய அலுவலகம் செயல்முறைப்படுத்தாது.

தனிநபர் தரவுகளுக்கான ரோட்டரியின் தனியுரிமை பாதுகாப்புக் கொள்கை

RI மற்றும் ரோட்டரி அறக்கட்டளை ஆகியவை, தனிநபர் தரவுகளைத் திரட்டுதல், அணுகுதல் மற்றும் தக்கவைத்தலைக் கட்டுப்படுத்தும் தனிநபர் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளன. தனிநபர் தரவுகளின் தனியுரிமை மற்றும் பாதுகாப்பைப் பராமரிப்பது ரோட்டரிக்கு மிகவும் முக்கியமாகும்.

இந்தக் கொள்கையின் நோக்கம்:

- இந்தக் கொள்கையின் நோக்கங்களுக்குத் தனிநபர் தரவுகள் என்பதை அமைக்க என்ன வரையறுத்தல்
- ஒரு தனிநபர் தரவுப் பாதுகாப்பு மீறலைப் புகார் செய்யும் செயல்முறையை அமைத்தல்

இந்தக் கொள்கை, ரோட்டரி ஊழியர்கள், ஒப்பந்ததாரர்கள், விற்பனையாளர்கள், சுதந்தரப் பணியாளர்கள், தன்னார்வலர்கள், அலுவலர்கள், ஆலோசகர்கள் மற்றும் தனிநபர் தரவுகளை அணுகுகிற அல்லது அவற்றுக்கு அணுகல் வழங்கப்படுகிற மற்ற அனைவருக்கும் பொருந்துகிறது. தனிநபர் தரவுகளின் ரகசியத்தன்மை, நேர்மை மற்றும் பாதுகாப்பைப் பராமரிக்க உதவுவது எல்லாருடைய பொறுப்பாகும். இந்தத் தரவுகளை அணுகக்கூடியவர்கள் இந்தக் கொள்கையை அறிந்திருக்கவேண்டும், இதற்கு இணங்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரோட்டரியின் தனிநபர் கொள்கையைப்பற்றிய கூடுதல் தகவல்களை இங்கு காணலாம்: https://my.rotary.org/en/privacy-policy

2019–20 அறக்கட்டளைப் பதாகைகள்

2019–20க்கான அறக்கட்டளைப் பதாகைகள் மற்றும் இளம்பிள்ளை வாதத்தை இப்போதே அழிப்போம்'' சான்றிதழ்கள் அக்டோபர் மாதத்தின் நிறைவில் தொடங்கி நவம்பர் மாதத்தின் தொடக்கம்வரை 2020–21 மாவட்ட ஆளுநர்களுக்கு RI உலகத் தலைமையகத்திலிருந்து அனுப்பப்படும், இவர்கள் இதைத் தகுதியுள்ள சங்கங்களுக்கு வழங்குவார்கள்.

மாவட்ட ஆளுநர்களுக்கு அனுப்பப்படும் பொருட்களுடன், வெற்றிபெற்ற சங்கங்களின் பட்டியலும் சேர்க்கப்படும்.

ரோட்டரியின் கற்றல் மையத்தில் இப்போது புதிய தலைமைப் பண்பு மேம்பாட்டுப் பயிற்சிகள் கிடைக்கின்றன

RI மற்றும் டோஸ்ட்மாஸ்டர்ஸ் ஆகியோரின் கூட்டணியின் ஒரு பகுதியாக, புதிய தலைமைப் பண்பு மற்றும் தகவல் தொடர்பு வரிசையில் இரண்டு பயிற்சிகள் இப்போது கற்றல் மையத்தில் (www.rotary.org/learn) கிடைக்கின்றன. இவை, மேடைப் பேச்சுக்குத் தேவையான திறன்கள் மற்றும் திறமைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்துகின்றன. இந்தப் பயிற்சிகள்:

- ஒரு சொற்பொழிவை உருவாக்குங்கள்-உங்கள் பார்வையாளர்கள் மனத்தில் ஒரு நீடித்த தாக்கத்தை உண்டாக்கும் ஒரு சொற்பொழிவை உருவாக்குவது எப்படி என்று கற்றுக்கொள்ளுங்கள்.
- ஒரு சொற்பொழிவை வழங்குங்கள்-ஒரு சொற் பொழிவை வழங்கும்போது, உங்கள் குரல் மற்றும் உடல் மொழி கொண்டிருக்கக்கூடிய தாக்கத்தை ஆராயுங்கள் பயிற்சியெடுங்கள்.

டோஸ்ட்மாஸ்டர்ஸ் இன்டர் நேஷனல் உருவாக்கியுள்ள இப் பயிற்சிகளில், புதிய திறமைகளைச் செயல்படுத்திப் பார்க்க உதவும் பயிற்சி கள், இணைந்து உழைப்பதன்மூலம் வளர உதவும் சக உறுப்பினர் மதிப்பீடுகள் உள்ளன. ரோட்டரி உறுப்பினர்கள் இந்தப் பயிற்சி களில் பங்கேற்கவேண்டும் என்று ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். அத்துடன், ரோட்டரி டோஸ்ட் மாஸ்டர்ஸ் இடையிலான இணைப்பைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ள https://my.rotary.org/en/toastmasters-alliance என்ற முகவரியில் உள்ள ஒரு வீடியோவைக் காணுங்கள்.

உங்கள் இன்டராக்ட் சங்கங்களின் சேவை திட்டங்களை காண்பியுங்கள்

இன்டராக்ட் சங்கங்கள் தங்கள் சங்கத்தின் சேவைத் திட்டங்கள் அல்லது தலைமைப் பண்பு மேம்பாட்டுச் செயல்பாடுகளைக் காண்பிக்கும் ஒரு வீடியோ, புகைப்படங்கள் மற்றும்/அல்லது ஒரு கட்டுரையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்படுகிறது.

மிகச் சிறந்த வீடியோ, மிகச்சிறந்த புகைப்படம்'' அல்லது மிகச் சிறந்த கட்டுரையாகத் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்புக்கு, 1 டிசம்பர் 2020க்குள் உங்கள் பரிந்துரைகளைச் சமர்ப்பியுங்கள், உங்கள் இன்டராக்ட் சங்கத்தின் அடுத்த திட்டத்தை ஆதரிப்பதற்கு நிதி பெறுங்கள். இதுபற்றியவிரிவான தகவல்கள் இங்கு கிடைக்கின்றன: *https://xd.wayin.com/display/container/dc/2fa0bd36-e918-4e7f-9608-c4711043c77b/details.*■

On the racks



Across the Winding River

Author : **Aimie K Runyan**
Publisher : **Lake Union Publishing**
Pages : **301; ₹967**

In her father's World War-II memory box, Beth Cohen finds the picture of her father with a pretty pregnant woman. If it wasn't her mother, who was she?

What follows next is a recap of her father — Max, stationed in Germany in 1944, who meets a young married woman named Margarethe. He falls in love with her and after the war ended, he tried to find her, but could not.

Max who knows his time is running out, wants closure and asks Beth to find Margarethe and her baby. But he isn't alone in seeking closure. In a private care facility, next to him, is a dying German-born woman who meets Beth and shares a heartbreaking story. The story takes place from 1937 to 2007 and talks about war, love, loss and sacrifice.



Caste: The Origins of Our Discontents

Author : **Isabel Wilkerson**
Publisher : **Random House**
Pages : **496; ₹2,350**

The author describes the social hierarchy in the US which is similar to the caste system in India and the racial divide in Nazi Germany, an idea she worked on while researching for her Pulitzer Prize-winning book *The Warmth of Other Suns*. She draws eight similarities between these three countries.

She describes the origins of the caste system in America and portrays the struggles of African Americans from the 1600s with multiple examples of cruel treatment of slaves. The book is not just about the past. It is very current and discusses the 2016 American Presidential election and some of the current administration's policies. Isabel urges readers to think of all the talent wasted, the innovation lost to humanity by pushing people behind based on skin colour or physical features.



The Book of Lost Friends

Author : **Lisa Wingate**
Publisher : **Ballantine Booksaa**
Pages : **388; ₹2,003**

Louisiana 1875: Hanie Gossett stands behind a log fence where slaves are being held for auction. The young girl watches as her family is sold to different owners. She remembers the promise she made to her mother — never to forget her family and guards safely one of the 15 tiny sacks with three blue glass beads, from her grandmother's special neck chain.

The dual time frame novel cuts to 1987 where Benny Silva comes to teach in Augustine, Louisiana. She seeks to make an impact on her unruly students, get them to read, to learn. Benny asks her students to undertake a project to understand their legacy and ancestors. She shares with them *The Book of Lost Friends*, a compilation of the ads placed in the Lost Friends column in a newspaper. These ads were placed to find people who were sold in human trade.

Based on true facts and records, this story is a combination of history and humanity.

Compiled by Kiran Zehra

எழுத்தாளர்கள் தங்களுடைய சொந்த எழுத்துகளைப் படிக்கிறார்களா?

TCA ஸ்ரீனிவாச ராகவன்

பல ஆண்டுகளுக்குமுன்னால், ஒரு மாலை நேரத்தில், எங்கள் குடியிருப்பிலுள்ள பூங்காவில் நான் நடந்து கொண்டிருந்தேன், என்னுடைய கையில் ஒரு புத்தகம் இருந்தது. அப்போது அந்தப் பூங்காவில் ஒரே ஒரு சிறுவன்மட்டும் இருந்தான், அவனுக்கு 6–7 வயது இருக்கலாம். அந்தச் சிறுவன் எங்கள் வீட்டுக்கு எதிரில்தான் வசிக்கிறான் என்பதால், நாங்கள் ஒருவரையொருவர் நன்கு அறிந்திருந்தோம். அந்தச் சிறுவனுடைய தாய், அங்கு ஒரு வேலைக்காரராகப் பணியாற்றுகிறார்.

நான் பெஞ்சில் அமர்ந்திருப்பதைப் பார்த்ததும், அவன் என்னிடம் வந்தான், என் கையில் என்ன இருக்கிறது என்று கேட்டான். 'இது ஒரு புத்தகம்' என்று நான் அவனுக்குச் சொன்னேன். புத்தகம் என்றால் என்ன என்றான். புத்தகங்களைப்பற்றி என்னால் இயன்றவரை சிறப்பாக நான் அவனுக்கு விளக்கினேன்.

அவன் ஓர் அறிவாளிக் குழந்தை, நான் விளக்குவது அவனுக்குப் புரிவதாகத் தோன்றியது. இத்தனைக்கும் நான் எழுதுதல், படித்தலை முதலில் விளக்கவேண்டியிருந்தது. அதன்பிறகு, அவனுக்கு அந்தப் பேச்சு போரடித்துவிட்டது, விளையாடுவதற்கு ஓடிவிட்டான்.

சில நாட்களுக்குமுன்னால், இதே கதை மீண்டும் நடந்தது. ஆனால், இந்த முறை ஒரு வேறுபாடு: எல்லா எழுத்தாளர்களுக்கும் இருக்கிற வழக்கமான தற்காதலின் வெளிப்பாடாக, நான் என்னுடைய சொந்தப் புத்தகத்தைக் கையில் வைத்திருந்தேன். இந்த ஆண்டின் முற்பகுதியில் அது பதிப்பாகியிருந்தது. நான் அதைப் படிக்க விரும்பியது ஏன் என்று எனக்கே தெரியவில்லை.

இப்போதும் அதே பையன் அங்கே இருந்தான், ஆனால், அவனுக்குச் சற்றுக் கூடுதல் வயதாகியிருந்தது, அநேகமாக அவனுக்கு 10 வயது இருக்கலாம். என்னைப் பார்த்ததும், அவன் என்னிடம் வந்தான். 'நீங்கள் இந்தப் புத்தகத்தைப் படித்திருக்கிறீர்களா?' என்று கேட்டான்.

'நான் எழுதிய புத்தகம்தான் இது' என்றேன் நான்.

'சரி, ஆனால், நீங்கள் இதைப் படித்திருக்கிறீர்களா?'

அவன் ஏதோ விளையாட்டுக்குக் கேட்கிறான் என்று நினைத்தேன். ஆனால், அவன் உண்மையிலேயே அதை அறிந்துகொள்ள விரும்பினான். நான் பேச்சை மாற்றினேன், அவனுடைய பள்ளியைப்பற்றி விசாரித்தேன். பள்ளியைப்பற்றிப் பேசுவதற்கு எந்த மாணவன் விரும்புவான்? அவன் விரைவாக அங்கிருந்து ஓடிவிட்டான்.

கடந்த சில நாட்களாக நான் இதைப்பற்றிச் சிந்தித்துவருகிறேன்: தங்களுடைய புத்தகங்களை மற்றவர்கள் படிப்பதைப்போல் உண்மையாகப் படித்துப்பார்க்கிற எழுத்தாளர்கள் எத்தனைப் பேர்?

நான் சில புத்தகங்களை எழுதியிருக்கிறேன், அவற்றை நான் மீண்டும் படித்துப்பார்க்கிறேன் என்றால், என்னுடைய எழுத்துத் திறமையை, ஆழமான சிந்தனையை வியந்து பாராட்டுவதற்காகதான்.

அதே நேரம், மற்றவர்கள் படிப்பதைப்போல் நான் அவற்றை ஒரு போதும் படிப்பதில்லை, எடுத்துக் காட்டாக, என்னுடைய மனைவி மகன்கள் படிப்பதைப்போல்... ம்ஹூம், அவர்கள் என் புத்தகங்களை உடைந்துபோன மேசை, நாற்காலி களைச் சரி செய்வதற்காகதான் பயன்படுத்துகிறார்கள். என்னுடைய நண்பர்கள் என்னுடைய புத்தகங்களைப் பற்றி எதுவும் பேசுவதில்லை. ஆனால், நான் இதைப்பற்றிப் புகார் சொல்லக் கூடாது. ஏனெனில், நானும் அப்படிதான் நடந்து கொள்கிறேன்.

ஆனால், இதுபோன்ற கடினமான ஒப்புதல் வாக்குமூலங்கள் ஒரு புறமிருக்க, அந்தச் சிறுவன் ஒரு மிக முக்கியமான கேள்வியைக் கேட்டுள்ளான்: ஓர் எழுத்தாளர் யாருக்காக எழுதுகிறார்? தனக்காகவா, அல்லது, வாசகருக்காகவா?

நான் எழுத்தாளர்களிடம் எப்போதும் சொல்கிற விஷயம், 'செய்தித்தாளுக்காக அல்லது புத்தகத்துக்காகப் பணத்தைச் செலவழித்துவிட்டு, மோசமான எழுத்தைச் சிரமப்பட்டுப் படித்துக் கொண்டிருக்கிற அப்பாவி வாசகரைப் பற்றிக் கொஞ்சம் யோசியுங்கள்.'

வருத்தமான விஷயம் என்ன வென்றால், என்னுடைய சக ஊழியர்களும் நானும் சொல்லும் விஷயத்தை மிகச் சில எழுத்தாளர்கள் தான் புரிந்து கொண்டார்கள். ஆனால், அப்படிப் புரிந்து கொண்டவர்கள் தங்களுடைய துறையில் நல்ல வெற்றியடைந்தார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன், அவர்கள் தங்களுக்காகமட்டும் எழுதவில்லை என்பது இதற்கு ஒரு முக்கியமான காரணமாகும்.

உண்மையில், எழுதுதல் என்பது பாடுதல் அல்லது ஓர் இசைக்கருவியை இசைத்தல் அல்லது ஓவியத்தைப் போன்ற ஒன்று: வெற்றிகரமான இசைக் கலைஞர்கள், ஓவியர்கள் எப்போதும் கேட்பவரை அல்லது பார்ப்பவரை மனத்தில் வைத்திருக் கிறார்கள். வெற்றிக்கான ஒரே வழி அதுதான்.■

போலியோ இல்லாத ஒரு உலகை விரைவில் பார்போம்

RIPE *சேகர் மேத்தா மற்றும் ராஷி உலக போலியோ தினத்தன்று* (Oct 24).

பேலூரில் தெருவோரத்தில் வசிக்கும் குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோருக்கு RC *பேலூர்* (RID 3291) *உறுப்பினர்கள் போலியோப் பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர்.* படம்: *ராகேஷ் பாட்டியா.*

Regn. No. TN/CCN/677/2019-2021 | Total number of pages in this monthly
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019-2021 | issue, including cover, 84. Price: ₹35
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

COLOURED STEEL THAT STANDS THE TEST OF TIME.

Coils





LATIM

COLOUR COATED STEEL

LATIM's high quality coloured / pre-painted galvanized / galvalume steel coils can be used for various Applications - Roofings, Claddings, Crimping, Warehouse, Cold Storage, Furnitures, False Ceilings, Shutter Doors, Vehicle Bodies, Decorative Container & Trunks, etc.

Ideal for Interior and Exterior Applications.

- Coloured / pre-painted sheet in various profiles available.
- Available in various thickness, sizes and colours.

Profiles



LA TIM GROUP

Corporate Office : 401, Navkar Plaza, 4th Floor, Bajaj Road, Vile Parle (West), Mumbai - 400056.
Tel : (022) 26202299, 26203399, 26203434, 26201166
Factory : Industrial Plot No. 270, 271, GIDC, Umbergaon, Valsad. Gujarat - 396171
E-mail : sales@latimsourcing.com ● Web : www.latimsteel.com